REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 9 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

වරු. 92 இல. 35 | Friday 09, February, 2024 | 20பக்கங்கள் | 50/-


## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்; எதிராக மேலும் 06 மனுக்கள்



பயங்கரவாத எதிர்ப்பு எனும் சட்ட மூலத்துக்கு எதிராக மேலும் 06 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதன்படி இச்சட்டமூலத்துக்கு எதிராக இதுவரை 30 மனுக்கள் 06

## 7 ஆவது இந்துசமுத்திர மாநாட்டுக்கு ஜனாதிபதி அவுஸ்திரேலியா விஜயம்



அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் 07ஆவது இந்துசமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (08) அதிகாலை அவுஸ்திரேலியா பயணமானார்.

இந்தியா மன்றம் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி சென்றுள்ளதோடு, ஏழாவது இந்துசமுத்திர மாநாடு பெப்ரவரி மாதம் 09 மற்றும் 10ஆம் திகதிகளில் அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும். 06

### மொனராகலை, சியம்பலாண்டுவ பகுதியில்

## 100 மெகாவாட் தரை மவுண்ட் சோலார் மின் உற்பத்தி திட்டம்

### மின்சார கொள்முதல் ஒப்பந்தம் கைச்சாத்து

மொனராகலை, சியம்பலாண்டுவ பகுதியில் 100 மெகாவாட் தரை மவுண்ட் சோலார் மின் திட்டத்துக்கான மின்சார கொள்முதல் 06



### பாராளுமன்றில் நிறைவேறிய சட்டம்

## உயர் நீதிமன்றால் கேள்விக்கு உட்படுத்த முடியாது

### நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்‌ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை கேள்விக்குள்ளாக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு கிடையாதென நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்வதாக சபையில் தெரிவித்த அவர், அதற்காக முழு சட்டத்தையும் தீயிலிட 06

### வெளிநாடுகளில் உயர் கல்வி பெற்ற பின் சேவைக்கு சமுகமளிக்கவில்லை

# பல்கலை விரிவுரையாளர்களால் அரசாங்கத்துக்கு பாரிய நட்டம்

### பெற்றுக்கொண்ட கடனில் 130 கோடி ரூபாவை மீள செலுத்தவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அரச வங்கிகள் மூலம் (1,300 மில்லியன்) 130 கோடி ரூபாவை கடனாக பெற்றுக்கொண்டுள்ளதுடன், அதனை மீள செலுத்த தவறியுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

அந்த விரிவுரையாளர்கள் உயர் கல்வியை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள போதும் அவர்கள் மீண்டும் தத்தமது பல்கலைக்கழகங்களுக்கு வருகை தர தவறியுள்ளனர்.

அதனால் இந்த பணத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்போ அல்லது வங்கிகளோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவை நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே 06

உயர் கல்விக்கு வெளிநாடு செல்வதற்காக
அரச வங்கிகளில் பெற்ற கடனை முழுமையாக
செலுத்தாததாலேயே அரசுக்கு
பாரிய நட்டம் ஏற்பட்டதாக
அமைச்சர்
விஜேயதாச ராஜபக்‌ஷ
பாராளுமன்றில்
தெரிவிப்பு



## தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழருக்கு ரூ. 3.56 கோடியில் 58 வீடுகள் கையளிப்பு

### ரூ. 400 கோடி செலவில் 7,504 வீடுகளும் நிர்மாணம்



**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க தொடர்ந்து முயற்சி எடுப்போம்.

முதல் கட்டமாக இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த 200 பேரை தேர்வு செய்து இலங்கை அரசு கொடுக்கப்பட்ட குடியுரிமை மூலம் 06



**03** தனியார் பல்கலை மாணவர்களுக்கும் அரச வங்கிகளில் வட்டியில்லா கடன்

தொடர்ச்சியாக வழங்க உரிய நடவடிக்கை

## சனத் நிஷாந்தவின் இடத்துக்கு புதிய MP யாக ஜகத் பிரியங்கர

### சபாநாயகர் முன் சத்தியப்பிரமாணம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினராக ஜகத் பிரியங்கர, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நீர் வழங்கல் இராஜாங்க 06

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை முன்னேற்ற முடியாது

### ஜனாதிபதி இதில் கவனம் செலுத்த வேண்டும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என்றும் ஜனாதிபதி தமது கொள்கைப் பிரகடன உரையில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் எதனையும் குறிப்பிடவில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. எம். ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

## HNDE டிப்ளோமா நிறைவு செய்தவர்களுக்கு நியமனம்

### கிழக்கு ஆளுநர் செந்தில் பரிந்துரை



உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (HNDE) கற்கைநெறியை நிறைவு செய்துள்ள டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பரிந்துரைத்துள்ளார்.

HNDE கற்கைநெறியை நிறைவு செய்துள்ள டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் 06

## தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு; நேர்முகப் பரீட்சை நாளை

மேலதிக தகவல்கள் https://www.health.gov.lk/



தாதியர் பயிற்சிக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 10ஆம் திகதி கண்டி தாதியர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. 06

### ஜனாதிபதியின் பணிப்புரையை செயற்படுத்த

## தோட்டக் கம்பனிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஜனாதிபதியின் ஆலோசகர் வடிவேல் சுரேஷ் எம்.பி.



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் சம்பள உயர்வு தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் எம்.பி. பாராளுமன்றத்தில் 06



**03** குற்றச்செயல் தரப்புடன் தொடர்புள்ள பொலிஸார் மீதும் கடும் நடவடிக்கை

பதில் பொலிஸ் மாஅதிபர் எச்சரிக்கை

## ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் ஸ்தாபகர் தினவிழா 11ஆம் திகதி

**அஜ்வாத் பாஸி**




பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் 50 ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழா நிகழ்ச்சித் தொடரின் மற்றுமொரு வரலாற்று நிகழ்வு நாளை மறுதினம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.45 மணிக்கு கலாபீட மாநாட்டு மண்டபத்தில் பேருவளை வலயராபிதாவின் தலைவர் அஷ்ஷெய்க் பௌஸர் (நளீமி) தலைமையில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு பேருவளை பிரதேசம் வாழ்த்து பெனர்களால் விழாக்கோலம் பூண்டுள்ளது. 06

## இந்திய 'அமுல்' பாலுற்பத்தி நிறுவனத்துக்கு தே.ம.ச.தலைவர் அநுர குழுவினர் விஜயம்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள அமுல் பால் உற்பத்தி நிறுவனத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் விஜயம் 06

## புலிகள் அமைப்பிலிருந்து வெளிவர நான் எடுத்த முடிவு சரியானது

### துரோகியென அழைப்பது முற்றிலும் தவறு



தமிழ் இனத்தினதும், தமிழ் தேசிய வரலாற்றினதும் துரோகியென என்னை அழைப்பது முற்றிலும் தவறான கருத்து. விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு வெளியே வர நான் எடுத்த முடிவு சரியானது என்று, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) 06

### நெடுந்தீவு கடற்பரப்பில்

## தமிழக மீனவர்கள் 19 பேர் 02 படகுகளுடன் கைது

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக கடற்றொழிலாளர்கள் 19 பேர் 2 படகுகளுடன் நேற்று முன்தினம் (07) இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கடற்படையினரும் கரையோர பாதுகாப்புப் பிரிவினரும் 06

## 2024 வாக்காளர் பதிவுகளை தாமதப்படுத்த வேண்டாம்

### தேர்தல்கள் அலுவலகம் அறிவிப்பு



2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு பணியை தாமதமின்றி நிறைவு செய்யுமாறு, தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய பெப்ரவரி 29ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் பதிவுப் பணி நிறைவு செய்யப்பட வேண்டுமென, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். 06

# நகர்வலம்



# சரித்திரப் பிரசித்தி பெற்ற பேருவளை புஹாரி தக்கியாவில் தமாம் மஜ்லிஸ்

சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை, மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் 145ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அல் ஆலிமுல் பாழில் சங்கைக்குரிய அஷ்செய்கு அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தலைமையில் நடைபெறுகிறது.

இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தங்களது வரலாற்றுப் புகழ்மிக்க இறுதி ஹஜ்ஜின் (ஹஜ்ஜதுல் விதாவின்) போது அங்கே குழுமிருந்த அருமைத் தோழர்கள் மத்தியில் உரையாற்றும் போது இதைச் சொன்னார். 'உங்களுக்காக நான் இரண்டை விட்டுச்செல்கிறேன். அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் நீங்கள் ஒருபோதும் வழி தவறமாட்டீர்கள். இறைவேதமாம் புனித அல்குர்ஆனும் அண்ணலாரது நடைமுறைகளாகிய சுன்னாவுமே அவை இரண்டுமாகும்.

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் ஹதீஸ் விளக்கங்களைத் தொகுத்துப் பாதுகாக்கவேண்டும் என்ற உண்மை உணரப்படவில்லை. நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்த காரணத்தினால் அன்று மக்கள் மத்தியில் எழுந்த பிரச்சினைகளுக்கு அவரே விளக்கமளித்துக் கொண்டிருந்தார். ஆனால் நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர் ஹதீஸ்களின் முக்கியத்துவம் உணரப்பட்டன. புனித அல்குர்ஆனை தெளிவாக விளங்கிக் கொள்ளவும், இஸ்லாமிய திட்டங்களை நன்கு அறிந்துகொள்ளவும் ஹதீஸ்கள் தேவைப்பட்டன. இதனால் காலக் கிரமத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழித் தொகுப்புக்கள் வெளிவர ஏதுவாயின. இவற்றுள் தலையாயதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது 'புனித ஸஹீஹுல் புகாரி' எனும் ஹதீஸ் பேழையாகும்.

அபூ அப்தில்லாஹ் முஹம்மதிப்னு இஸ்மாயீல் புஹாரி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மேற்படி நூல் அல்குர்ஆனுக்கு அடுத்தபடியாக சிரமேற்கொண்டு கருதப்பட்டு போற்றப்படுகிறது. இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களின் வாய்வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275 ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தமது ஸஹீஹுல் புகாரி கிரந்தத்தில் எழுதியுள்ளார். மேற்படி புகாரிக் கிரந்தம் பாராயணம் செய்யப்பட்டு விளங்கப்படுத்தும் மஜ்லிஸ்கள் உலகின் நாலா பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றன. எமது நாட்டிலும் பல இடங்களில் இந்த புனித கிரந்தம் வாசிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொல்,செயல், அங்கீகாரம் அடங்கிய புனித புகாரி கிரந்தத்தை வாசித்து நபிகளாரின் உயரிய வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்கும் அதன்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும் புனித புஹாரி கிரந்தம் எமக்கு பேருதவி புரிகின்றன.

இந்த அடிப்படையில் சரித்திரப் பிரசித்திபெற்ற பேருவளை, மாளிகாச்சேனையில் அமைந்துள்ள பைதுல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் இற்றைக்கு 144வருடங்களுக்கு முன்னர் (ஹிஜ்ரத் ஆண்டு 1301 ஜமாதுல் ஆகிர் மாதம் பிறை 27ல்) ஆரம்பம் செய்யப்பட்ட புகாரி மஜ்லிஸ் அல்லாஹ்வின் கிருபையால் ஒரு நூற்றாண்டைத் தாண்டிச் சென்றாலும், அன்று முதல் இன்றுவரை மாற்றங்கள், நூதனங்கள் எதுவுமின்றி அதன் சரத்துக்களைப் பேணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. வருடாந்தம் மூன்று பிறைகள் அடங்கிய ஜமாதுல் ஆகிர் மாதம் தொடங்கி ரஜப் மாதம் முழுமையாக நடைபெற்று சஹ்பான் மாதம் முதல் பகுதியில் முடிவடைவது விஷேட அம்சமாகும்.

18ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட மாளிகாச்சேனை புகாரித் தக்கியா இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம்மிக்கதோர் தைக்கியாவாகஉள்ளது. அதன் ஆரம்ப அமைப்பிலே தக்கியா இருக்கின்றபோதிலும் தற்போது இடவசதி கருதி விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. அன்று வைத்த சட்டதிட்டங்கள் இன்றும் எவ்விதமான மாற்றமும் இன்றி அப்படியே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஹிஜ்ரி 1301 ஜமாத்துல் ஆகிர் மாதம் பிறை 27ல் அதிகாலை சுபஹ் தொழுகையை முடித்தஅதே இருப்பில் பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புகாரித் தக்கியாவில் நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் உத்தரவுப்படி தென் அரேபிய எமன் நாட்டைச் சேர்ந்த சங்கைக்குரிய நாயகம் சேகுஅப்துர் ரஹ்மான் இப்னு ஹஸன் இப்னு அப்துல் பாரி அஹ்தலி மௌலானா என்ற பெரியார் புனித ஸஹீஹூல் புஹாரி கிரந்தத்தை தனது கையில் எடுத்து ஆரம்பப் பகுதியை பாராயணம் செய்தார். தனது வலப்பத்தில் அமர்ந்திருந்த அரபுத் தமிழ் யுகதந்தை எனப் போற்றப்படும் மகான் சங்கைக்குரிய சேகு முஸ்தபா வலியுல்லாஹ்விடம் புனித புஹாரி கிரந்தத்தைக் கையளித்து இதனை ஒவ்வொரு வருடமும் (வெள்ளிக்கிழமை தவிர) 30 நாட்கள் பாராயணம் செய்து வரும்படி பணித்தார்.

மாகாண் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு புனித பேருவளை நகரிலிருந்துதான் ஆரம்பமானது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ மாட்டார்கள். இந்த பேருவளை நகரில் மூத்தகுடியில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குரிய மாகான் சேகு முஸ்தபாவலியுல்லாஹ் பிறந்தார்கள்.

இந்தநாட்டின் சமய வரலாற்றில் அன்னார் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை பிடித்துக்கொண்டார். அன்னார் இஸ்லாமியசட்ட திட்டங்கள் அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹூ சட்டதிட்டங்கள் போன்ற இஸ்லாமிய மத அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல்பட்டணத்தில் இத்துறையில் அறிவுபெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாசேனை பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாகவும் ஆய்வுகூடமாகவும் அமைத்து இஸ்லாமிய பணிபுரியும் காலத்தில் சங்கைக்குரிய முபாரக் மௌலானாஎன்ற பெரியாரின் சகவாசம் கிடைத்தது.

சங்கைக்குரிய செய்கு முஸ்தபா (றஹ்) அவர்களின் சேவைக்கு இவர்கள் துணைபுரிந்து சிறிது காலத்தில் முபாரக் மௌலானா தென்னிலங்கையில் காலி நகரில் இறையடி சேரவே தென் அரேபியர் யெமன் நாட்டைச் சேர்ந்த அஹ்தலி மௌலானா அவர்களின் சகவாசம் கிடைத்து பேருவளை மாளிகாச்சேனை புஹாரித் தக்கியாவில் புஹாரி மஜ்லிஸ் ஆரம்பம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. சேகு முஸ்தபா (றஹ்) அவர்களினால்

அறிமுகப்படுத்திய காதிரியதுன் நபவிய்யா முஸ்தபவிய்யா எனும் ஆத்மஞானவழி (தரீக்கா) இன்றும் இலங்கையின் சுமார் இருபது ஊர்களில் பின்பற்றப்பட்டு வருவது சுன்னத் ஜமாத் கொள்கைகளுக்கு உயிரூட்டக் கூடிய விடயமாகும்.

புனித புகாரி மஜ்லிஸை ஹிஜ்ரி 1301 முதல் 1304 வரை சங்கைக்குரிய சேகுநாயகம் சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் நடாத்தினார். பின்னர் அவர் மைந்தர் சங்கைக்குரிய சேகுநாயகம் முஹம்மத் ஹாஜியார் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1304 முதல் 1331 வரை நடாத்தினார். அவருக்குப் பின்னர் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகுநாயகம் அப்துல் சமீம் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1331 முதல் 1391 வரை தலைமைதாங்கி நடாத்தினார். அதனைத் தொடர்ந்து அவரது மைந்தர் சங்கைக்குரியசேகுமுஹம்மத் நூர் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1391 முதல் 1411 வரைநடாத்தினார். அன்னார் இறையடி சேர்ந்த பின்னர் அவரதுமைந்தர் சங்கைக்குரிய சேகு அஹமது ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1412 முதல் இன்றுவரை மிகச் சிறப்பாக தலைமை தாங்கி நடாத்தி வருகிறார். சங்கைக்குரிய சேகு முஸ்தபாநாயகத்தின் குடும்பத்தைச் சேர்ந்தபரம்பரையினர் புனித புகாரி மஜ்லிஸை புஹாரித் தக்கியாவில் சிறப்பாக நடாத்தி வருவது அல்லாஹ்வின் கிருபையும் நபி (ஸல்) அவர்களின் திருப்பொருத்தமும் என்றே கூற வேண்டும்.

புனித மஜ்லிஸ் எதிர்காலத்திலும் மிகச் சிறப்பாகநடைபெற அல்லாஹ் அருள் புரிவானாக. ஆமீன்.

## தேசிய சூறா சபை ஏற்பாட்டில் கொழும்பில் விசேட நிகழ்வு









**கொழும்பு தினகரன் நிருபர்**

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய சூறா சபை கொழும்பு 07இல் உள்ள ஜெயவர்த்தன மண்டபத்தில் 'இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம்களின் பங்களிப்பு' எனும் தொனிப்பொருளில் விசேட நிகழ்வு சூறா சபையின் தலைவர் ரி.கே. அசூர் தலைமையில் (07) இடம் பெற்றது.

விசேட பேச்சாளர்களாக வல்பொல ராகுல நிறுவனத்தின் பணிப்பாளர் கல்கந்தே தம்மானந்த தேரர், முன்னாள் தூதுவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம் சுஹைர், பேருவளை ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் பிரதித் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பளீல் ஆகியோர் உரையாற்றியதுடன் நன்றி உரையை சபையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் வழங்கினார். இதன் போது சூறா சபையின் அங்கத்தவர்கள், சமயத் தலைவர்கள், கொழும்பு பல்கலைக்கழக சட்டக்கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## பிறை விழிப்புணர்வு தொடர்பான ஒருநாள் மாநாடு கொழும்பில்

கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் அதன் பிறைக்குழு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தலைவர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம். பி.எம். ஹிஷாம் பத்தாஹி மற்றும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

மாதாந்த பிறை பார்த்தலில் கடைப்பிடிக்கப்படுகின்ற வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வை வழங்கும் நோக்கில் உலமாக்கள், வானியல்துறை மற்றும் துறைசார் நிபுணர்கள் விளக்கமளித்தனர்.

கொழும்பு பெரியவாசல் தலைவர் தாஹிர் ரஸீன், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.ஹிஷாம், உப தலைவர் அப்துல் நாஸர், பிறை தீர்மானத்தில் வளிமண்டலத்தின் தாக்கம் எனும் தலைப்பில் வளிமண்டலத்திணைக்கள அதிகாரி ஏ.எம். எம்.ஸாலிஹீன், பிறை தீர்மானத்தில் வானியலின் வகிபாகம் எனும் தலைப்பில் மௌலவி அப்துல் ரஹ்மான் ஆகியோர் உரையாற்றியதுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பாக திணைக்களத்தின் வக்பு பிரிவின் அதிகாரி ஏ.எஸ்.எம்.ஜாவித் ஆகியோர்கள் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் நாடளாவிய ரீதியில் உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் துறைசார்முக்கியஸ்தர்கள் என சுமார் 200 பேருக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

## புதையல் தோண்டிய மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் இராணுவ சிப்பாய் உள்ளிட்ட மூவரை கெக்கிராவ மடாட்டுகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றுக்கமைய மடாட்டுகம பொலிஸ் பிரிவின் சூரியகம பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் மூன்று பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மடாட்டுகம பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொரளை ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லிணக்க நிகழ்வு



பொரளை ஜும்ஆப் பள்ளிவாசலில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நல்லிணக்க சகவாழ்வு மையம் பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் எம். ஆர்.எம். அவ்தாத் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை மேற்படி பள்ளிவாசலில் நிடா மற்றும் பொரளை நல்லிணக்க சகவாழ்வு மையம் இணைந்து நடத்திய முஸ்லிம்கள் எப்படி இஸ்லாம் மார்க்கத்தை கற்கிறார்கள் மற்றும் பள்ளியில் எப்படி ஐந்து வேலைத் தொழுகை நடத்துகிறார்கள் என்பதை பற்றிய தெளிவுரை ஒன்று பள்ளிவாசல் செயலாளர் அல்ஹாஜ் எம்.எஸ். எம். இர்பான் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்ட இந்து மத குருபீடத்தை சேர்ந்த ஐக்கிய இலங்கை ஸ்ரீ ஜெய் ப்ரத்யங்கிரா குரு பீடத்தின் தலைவர் எஸ். விநாயகர் தலைமையின் கீழ் கலந்துகொண்ட குரு பீடாதிபதிகள் மத்ரஸா மாணவர்கள் குர்ஆன் கற்றுக்கொள்கின்ற முறை, ஐந்து வேலை தொழுகை நடைபெறுகின்ற முறை, எப்படி முஸ்லிம் ஜனாஸாக்கள் நல்லாடக்கம் செய்வது பற்றி பள்ளிவாசல் மௌலவி எம். பாரூக் தெளிவுபடுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

**படப்பிடிப்பு : லியாகத் அலிகான்**

## ரயிலில் பயணித்த பெண்ணின் ரூ. 30 இலட்சம் பணம் திருட்டு

**திறப்பனை தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு ரயிலில் கொழும்பு நோக்கி பயணித்த பெண் ஒருவரின் கைப்பையில் இருந்த சுமார் 30 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பேருவளை கங்கானங்கொட பிரதேசத்தில் வசிக்கும் 28 வயதுடைய பெண் ஒருவர் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 04 ஆம் திகதி தனது கணவருடன் ரயிலில் கொழும்பு நோக்கி பயணித்த போது தான் உறங்கி விட்டதாகவும் பின்னர் கெக்கிராவ ரயில் நிலையத்தை கடந்து சென்ற போதே தான் விழித்துப் பார்த்தபோது தனது நகைகள் மற்றும் பணம் காணாமல் போயிருந்ததாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கம்பஹா மாவட்டத்திற்கு புதிய மாவட்ட செயலாளர் நியமனம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான லலிந்த கமகே மேல் மாகாண கம்பஹா மாவட்டத்தின் புதிய மாவட்ட செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். கடமை பொறுப்புக்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு மாவட்ட செயலக பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

கம்பஹா மாவட்ட அபிவிருத்தி கமிட்டி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யு.எஸ். சத்தியவான், மேலதிக மாவட்ட செயலாளர் ஜே.டபிள்யு.எஸ். கித்சிறி உள்ளிட்ட பிரதேச செயலாளர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு புதிய மாவட்ட செயலாளருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## பொலன்னறுவை மாவட்ட பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண விவசாய விலங்கு உற்பத்தி மற்றும் மீன்வள அமைச்சின் மூலம் பொலன்னறுவை மாவட்ட மீன்பிடி மற்றும் அலங்கார மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பயனாளிகளுக்கு மீன்பிடி சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் ஆகியோரின் தலைமையில் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது .

இதற்காக 49 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மீன்பிடி வியாபாரத்திற்காக 8 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் பயனாளிகளிடமிருந்தும் 50 வீதம் பங்களிப்பு வசூலிக்கப்பட்டுள்ளது. மாகாண மக்களின் போசாக்கு தன்மையையும் வருமானத்தையும் அதிகரித்து மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். அலங்கார மீன் வியாபாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நிதிகளை பெற்றுக்கொள்ள முடியும். நாடு சாதாரண சூழ்நிலைக்கு உள்ளான இந்த சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தை வலுப்படுத்த இது பாரிய உதவியாக இருக்கும்.

இதன் போது ஆளுநரின் செயலாளர் மற்றும் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் விஜய வணசிங்க, ஆளுநரின் உதவி பணிப்பாளர் புலத்சிங்கள உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர் .

தினகரன்
THINAKARAN
2024 பெப்ரவரி 9 வெள்ளிக்கிழமை




தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 05.11 |
| லுஹர் | - | 12.26 |
| அஸர் | - | 03.48 |
| மஃரிப் | - | 06.21 |
| இஷா | - | 07.33 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் தை 26

ராகுகாலம் : பகல் : 11.05 - 12.35 வரை
சுபநேரம் : காலை : 6.35 - 8.05 வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# தனியார் பல்கலை மாணவர்களுக்கும் அரச வங்கிகளில் வட்டியில்லா கடன்

## தொடர்ச்சியாக வழங்க உரிய நடவடிக்கை -கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஹொரய்ஸன் உட்பட இரண்டு தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரச வங்கிகளில் வழங்கப்படும் வட்டியில்லாக் கடனை தொடர்ந்தும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் கே.ஐ.யு மற்றும் ஹொரய்ஸன் ஆகிய தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக அந்தக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கான அமைச்சரவைப்பத்திரம் தயார் நிலையில் காணப்படுவதாக தெரிவித்த அவர், அதற்கான செயற்பாடுகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவு செய்யப்பட்டு அதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அந்த வகையில் மேற்படி இரண்டு பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கல்வி செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுமாறு அந்த இரண்டு பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்திற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



மேற்படி இரண்டு பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் மாணவர்களுக்கு குறித்த வட்டியில்லாத வங்கிக் கடன் வழங்கப்படாததன் காரணத்தால் அந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த கல்வி அமைச்சர்,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2017 ஆம் ஆண்டு இந்த கடன் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இம்முறை ஏழாவது மாணவர் குழு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்க பல்கலைக்கழகங்கள் அல்லாத தனியார் பல்கலைக்கழகங்களில் சுமார் 5,000 மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வட்டியில்லாக் கடன் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் ஊடாக வழங்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் எதிர்க்கட்சித் தலைவரால் இந்தக் கேள்வி சபையில் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கு மறுநாளே ஜனாதிபதி செயலகத்தில் அது தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அதன்போது இரண்டு வங்கிகளினதும் முகாமையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், திறைசேரி அதிகாரிகள் ஆகியோரும் அழைக்கப்பட்டு அந்த விவகாரத்திற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட்டது.

இதற்கு முன்னர் கடன் பெற்றுக்கொண்ட சுமார் 200 பேர், அந்தக் கடனை மீள செலுத்த தவறிய காரணத்தாலேயே இந்தக் கடனை மீள பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குற்றச்செயல் தரப்புடன் தொடர்புள்ள பொலிஸார் மீதும் கடும் நடவடிக்கை

## பதில் பொலிஸ் மாஅதிபர் எச்சரிக்கை

குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் தரப்புகளுடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்காணிக்கப்படுவதாக, பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.



பம்பலப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குற்றச்செயல்களை மேற்கொள்வோருடன் தொடர்பை பேணி வரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் அவர்களது பதவி அந்தஸ்து பாராது தண்டிக்கப்படுவார்களெனத் தெரிவித்த அவர், இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அஞ்சப் போவதில்லையெனவும் தெரிவித்தார்.

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் 'ஹரக் கட்டா' எனப்படும் நதுன் தொடர்புடைய சம்பவத்துடன் நெருங்கிய தொடர்பை பேணிய சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்கு இடமளிக்காத ஆளுமை

## ஜனாதிபதிக்கு SLPP மதுர விதானகே பாராட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரல் மற்றும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு தேவையான வகையில் இந்த நாட்டில் செயற்படுவதற்கு இடமளிக்காத ஜனாதிபதியின் ஆளுமை தொடர்பில் மகிழ்ச்சியுற முடியும் என பொதுஜன பெரமுன எம்.பி. மதுர விதானகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாதிபதி பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



நேற்றையதினம் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை சிறப்பாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

முன்னேற்றமடைந்து வரும் பொருளாதார நிலையை மேலும் முன்னேற்றுவதற்காக வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறையை முன்னேற்றும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் புதிய கல்வி மறுசீரமைப்பு மூலம் இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை மிகச் சிறந்ததாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரம் கட்டம் கட்டமாக பலமடைந்து வருகின்றது. அந்த வகையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்தகைய வேலைத்திட்டங்களில் பங்களிப்பு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# TIN இலக்க சேவை எனக் கூறி பண மோசடி செய்யும் கும்பல்

## பொதுமக்களுக்கு குருநாகல் DIG எச்சரிக்கை

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட வரி செலுத்துவோருக்கான [Taxpayer Identification Number (TIN)] இலக்கத்துடன் தொடர்புடைய வங்கிச் சேவையெனத் தெரிவித்து பொது மக்களை ஏமாற்றும் கும்பல் தொடர்பாக குருநாகல் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தனியார் வங்கிக் கணக்குகளில் பணத்தை ஏமாற்றும் (ஹெக்கர்ஸ்) ஊடுருவல் கும்பலொன்று இயங்கி வருவதாகவும் மோசடிக் கும்பலிடம் சிக்கி பல இலட்சம் ரூபா பணத்தை இழந்தவர்கள் தொடர்பாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அந்த அலுவலகம் தெரிவித்தது.

அரச வங்கியின் பணியாளர்களென தொலைபேசியில் அழைக்கும் இக்கும்பல், Taxpayer Identification Number தொடர்பான வங்கிக் கணக்கை எவ்வாறு பராமரிப்பதென்பது தொடர்பாக தெரிவிப்பதுடன், பின்னர் வங்கிக் கணக்கை அமைக்க வேண்டிய வங்கி வாடிக்கையாளர்களின் பணப் பரிமாற்ற கடவுச்சொல்லை (OTP) கேட்பதாகவும் இதன்போது தாம் ஏமாற்றப்படுவதை உணராதவர்கள், மேற்கொண்டு எதனையும் விசாரிக்காமல் அந்த இரகசிய இலக்கத்தை அவர்களிடம் வழங்கி விடுவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இரகசிய இலக்கத்தை பெற்றுக் கொள்ளும் இம்மோசடிக் கும்பல் தாம் தொடர்பு கொண்ட நபரின் வங்கிக் கணக்குக்குள் நுழைந்து, இலட்சக்கணக்கில் பணத்தை எடுத்துச் செல்வதாக தகவல் வெளியாகியுள்ளதாகவும், குருநாகல் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகம் தெரிவித்தது.

இவ்வாறு வாடிக்கையாளர்களை ஏமாற்றி வரும் இம்மோசடிக் கும்பல், நேற்று முன்தினம் குருநாகல் நகரிலுள்ள பிரதான கல்வி நிறுவனமொன்றில் பணியாற்றி வரும் நபர் ஒருவரின் வங்கிக் கணக்கிலிருந்து 02 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை மோசடியாக பெற்றுள்ளதாகவும் கடந்த வாரம் வேறொருவரின் கணக்கிலிருந்து 10 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளதாகவும், தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தொலைபேசியில் அழைத்து தனிப்பட்ட தகவல்களை கேட்கும் மோசடியாளர்களிடம் சிக்க வேண்டாமென்று மக்களை கேட்டுக்கொண்ட குருநாகல் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகம், இது தொடர்பாக குருநாகல் மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களினூடாகவும் மக்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தது.




இலங்கையின் ஆனந்தா கல்லூரிக்கும் நாலந்தா கல்லூரிக்கும் இடையிலான 94ஆவது Battle of the Maroons சமரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதற்கமைய இப்போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு பாடசாலைகளும் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் பலரை உருவாக்கியுள்ளதுடன், அவர்களில் பலர் இலங்கை அணிக்காக விளையாடியமையும் குறிப்பிடத்தக்கது.

# சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் கீழ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் சுற்றாடல் அமைச்சை கொண்டு வருவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் (07) வெளியிடப்பட்டதுடன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்துரையாடிய பின்னர், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டது. முன்னாள் சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பதவியிலிருந்து விலகியுள்ளார். இதனால் அவர் வகித்த சுற்றாடல் அமைச்சுப் பதவி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## கொரிய மொழிப் பரீட்சை 2024

**உற்பத்தி, கப்பல் கைத்தொழில், மீன்பிடித் துறை, நிர்மாணம் மற்றும் சேவைகளுக்காக பரீட்சை விண்ணப்பங்கள் வழங்குதல்**

2024ஆம் வருடத்திற்காக நடாத்தப்படவுள்ள கொரிய மொழிப் பரீட்சைக்காக (உற்பத்தி, கப்பல் கைத்தொழில், மீன்பிடித் துறை, நிர்மாணம் மற்றும் சேவைகள்) பரீட்சை விண்ணப்பங்கள் வழங்குதல் நிகழ்நிலை ஊடாக (online) 2024-02-26ஆம் திகதி முதல் 2024-02-29ஆம் திகதி வரை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
2024.02.09 ஆம் திகதி
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்
www.slbfe.lk
இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 28

### குறள் தரும் சிந்தனை

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகிறவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

## நாட்டு நலன்களை கருத்தில் கொள்ளாத வெளிநடப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கொள்கை விளக்க உரையையும் அவர் நிகழ்த்தினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் போது எதிர்க்கட்சித் தலைவரான ஐக்கிய மக்கள் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

ஆனாலும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, டொக்டர் ராஜித சேனாரட்ன, குமார் வெல்கம, பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஏ,எச்.எம். பௌஸி, இஷாக் ரஹ்மான், பைசல் காசிம், வடிவேல் சுரேஷ், எச்.எம்.எம். ஹரீஸ் உள்ளிட்டோர் தங்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்து ஜனாபதியின் உரையை செவிமடுத்தனர்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருப்பதற்கு வித்தூன்றிய ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையை இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செவிமடுத்தனர்.

நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான பற்று கொண்டவர்கள் செய்யும் பணியையே இப்பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்திருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் போது தான் மக்களுக்கு வளமானதும் சுபீட்சமானதுமான வாழ்வுக்கு வழிவகை செய்யக்கூடியதாக இருக்கும். அதற்கு ஆக்கபூர்வமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதன் விளைவாகவே நாடும் மக்களும் குறுகிய காலப் பகுதிக்குள் பொருளாதார நெருக்கடியின் தீவிர பாதிப்புக்களில் இருந்து மீட்சி பெற்றுக் கொண்டனர்.

அந்த வகையில் ஜனாதிபதி நாட்டுக்கு ஆற்றியுள்ள பணிகள் வரலாற்றில் அழியாத் தடம் பதித்துள்ளன. அதனால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும் என்பது தான் அனைத்து தரப்பினரதும் கருத்தாகும்.

இவ்வாறான சூழலில் எதிர்க்கட்சி தலைவரும் அவர் சார்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாபதியின் கொள்கை விளக்க உரையின் போது சபையில் இருந்து வெளியேறியமையானது, அற்ப அரசியல் இலாபம் தேடும் நோக்கமே அன்றி வேறில்லை. ஆனால் முக்கியத்துவம் மிக்க சந்தர்ப்பத்தில் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறியமையானது நாட்டின் மீதும் மக்கள் மீதும் அவர்களது உண்மையான பற்றற்ற தன்மை பகிரங்கமாகியுள்ளது என்று மக்கள் கருதுகின்றனர்.

அதேநேரம் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையின் போது வெளிநடப்பு செய்ய எதிர்கட்சித் தலைவர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட முயற்சி ஏகமனதான தீர்மானத்துடன் எடுக்கப்பட்டதாக இல்லை என்பது தெளிவாகிறது. அதற்கு அக்கட்சியைப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தொகுதியினர் அந்த வெளிநடப்பை நிராகரித்தமை நல்ல எடுத்துக்காட்டாகும்.

நாட்டையும் மக்களையும் உண்மையாகவே நேசிக்கும் மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறான செயலில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். இது அற்ப அரசியல் இலாபம் பெறும் செயற்பாடே அன்றி வேறில்லை என்பதே சமூக ஆர்வலர்களது அபிப்பிராயமாகும்.

அந்த வகையில் ஐ.ம.ச பாராளுமன்ற உறுப்பினர்களான டொக்டர் ராஜித சேனாரட்ன, 'அரசியலை விட எனக்கு நாட்டின் எதிர்காலமே முக்கியமானது. நாட்டின் முன்னேற்றத்தின் பின்னரே கட்சி அரசியல் குறித்து சிந்திப்பேன். நெருக்கடிக்குள் இருந்து நாடு மீண்டு வந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு இடையூறு விளைவிக்கத் தயாரில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே கட்சியைச் சேர்ந்த மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான குமார் வெல்கம, 'சபையில் இருந்து வெளியேறியவர்களின் நிலைப்பாடுகள் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தியைப் போன்று ஒவ்வொரு விடயங்களையும் புறக்கணிப்பு செய்ய முடியாது. நாட்டின் தலைவரின் கொள்கைப் பிரகடன உரையில் பங்குபற்றுவதே ஏற்புடைய விடயம்' என்றுள்ளார்.

இந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களே ஏகமனதான முடிவின்றி முன்னெடுக்கப்பட்ட வெளிநடப்பு என்பதற்கு போதுமான சான்றாக உள்ளது.

ஆனால் நாடு தற்போதுள்ள நிலையில் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். அதனால் தான் ஜனாதிபதி அனைத்து தரப்பினரையும் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். கட்சி நலன்களுக்கு பாதிப்பான போதிலும் கூட நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்தே தீர்மானங்களை மேற்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆகவே நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டியது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பு. இதனை எவரும் மறந்து விடலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்ட திருத்தங்களுக்கு யுனிசெப் நிறுவனம் திருப்தி



இலங்கையின் சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் (Children and Young Persons OrdinanceCYPO) நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளன. இது இலங்கை சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு முன்னெடுப்பாகும்.

1939 ஆம் ஆண்டு முதல் இலங்கைச் சிறுவர்களுடன் தொடர்புடைய நீதியை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டவாக்கமாக இருந்து வருகின்ற இக்கட்டளைச் சட்டமானது, ஏற்கனவே 16 வயதிற்குப் பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தியதுடன் தற்போது இத்திருத்தத்தின் ஊடாக அவ் வயதெல்லை 18 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினர் மீது பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது பாதுகாவலர்கள் பிரயோகிக்கும் உடல் ரீதியான தண்டனைகளை நியாயப்படுத்தி அவர்களுக்கெதிரான சட்ட ஏற்பாடுகளுக்கு இடங்கொடுக்காத குறித்த கட்டளைச் சட்டத்தின் ஒரு உறுப்புரை அல்லது ஒரு பகுதி இத்திருத்தத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டங்களை சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வசே தரநியமங்களுடன், குறிப்பாக சிறுவர் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்துடன் சீரமைப்பதற்கு இத்திருத்தங்கள் பங்களிப்புச் செய்வது மாத்திரமன்றி, நாட்டில் சிறுவர்கள் மற்றும் கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகள் மற்றும் சவால்களுக்கு உரிய தீர்வுகளை வழங்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக், 'சிறுவர் உரிமைகள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் இந்நாட்டு சிறுவர் உரிமைகளுக்கான ஒரு மைல்கல்லாக உள்ளது. அது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்தும். நீதி முறைமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், இலங்கையில் சகல சிறுவர்களுக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், பாடசாலை மற்றும் வீடு உள்ளடங்கலாக அனைத்து மட்டங்களிலும் சிறுவர்களுக்கெதிரான உடல் ரீதியான தண்டனையை முற்றாக தடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருப்பது இத்திருத்தத்தின் புரட்சிகரமான முன்னேற்றமாகும்' என்று குறிப்பிட்டார்.

இத்திருத்தங்கள் சட்டத்திற்கு முரண்படும் சிறுவர்களை கையாளும் நடவடிக்கைகளில் புரட்சிகரமானதொரு நகர்வாக இருக்கும். ஏனெனில், இத்திருத்தங்களுக்கு முன்பு குற்றமிழைத்த 1618 வயது சிறுவர்கள் வயது வந்தோரின் சிறைக்கூடங்களிலேயே வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு பொருத்தமான புனர்வாழ்வுத் திட்டங்களோ அல்லது பராமரிப்பு நடவடிக்கைகளோ இருக்கவில்லை. என்றாலும், தற்போது அமுலுக்கு வந்திருக்கும் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களின் விளைவாக இத்தகைய சிறுவர்கள் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களங்களின் மேற்பார்வையின் கீழ் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் இங்கு ஒழுக்காற்று அணுகுமுறையை விட புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமளிக்கப்படும்.

ஒரு பிள்ளையைத் தடுப்புக் காவலில் வைப்பது இறுதி முயற்சியாக இருக்க வேண்டுமென்றும் அது மிகவும் குறுகிய காலத்திற்கு மாத்திரம் இருக்க வேண்டுமென்றும் சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் வலியுறுத்துகிறது. ஏனெனில், நிறுவனமயமாக்கல் பிள்ளையின் அபிவிருத்திக்கும் மீள் ஒருங்கிணைப்பதற்கும் தடையாக இருந்து வன்முறை மற்றும் வறுமைக்கு இட்டுச்செல்லும் என்றும் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, இளம்பருவக் குற்றவாளிகளுக்கும் தடுப்புக்காவல் நடவடிக்கைகளுக்கும் பதிலாக மிகவும் வினைத்திறனுடைய சிறுவர்களுக்கு பாதுகாப்பான குடும்பமைய புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்துமாறு யுனிசெப் நிறுவனம் நீதித்துறை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் துறைகளில் பணியாற்றும் கரிசனையாளர்களை கேட்டுக் கொள்கின்றது.

யுனிசெப் நீண்ட காலமாக உலகளாவிய சிறுவர்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்து வருகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில் இலங்கையின் இத்திருத்தங்களிலும் அதன் ஆதரவு ஆழமாக வேரூன்றியுள்ளது. அந்த வகையில், சிறுவர்களுக்கான இலங்கையின் நீதித்துறை பற்றி யுனிசெப் நிறுவனம் 2023 இல் நடாத்திய ஒரு ஆய்வில் முக்கியமான தரவு இடைவெளிகளை அடையாளப்படுத்தியதுடன் சிறுவர்களுக்கான நீதித்துறைப் பாதுகாப்பின் பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக கூடிய விரைவில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

எனவே, சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் செய்துள்ள திருத்தத்தில் இப்பரிந்துரைகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளது. பிள்ளையின் நலனை முன்னுரிமைப்படுத்தும் விதத்தில் நீதித்துறையைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தின் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானமானது சர்வதேச சட்டத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை பூர்த்திசெய்வதையும் நாட்டின் இளவயதினரின் நலன்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் வலியுறுத்தியுள்ளது.

# 50 வயதுக்குள் புற்றுநோய்க்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு



உலக புற்று நோயாளர் தினமாக பெப்ரவரி 04ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தினத்தின் நிமித்தம் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றது. புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அதற்குரிய வைத்தியத்தை ஊக்குவித்தலும், புற்றுநோய் வராமல் தடுப்பதற்குரிய வாழ்வு முறையை ஊக்குவித்தலுமே இங்கு முக்கியமாக இடம்பெறுகிறது.

சர்வதேச புற்றுநோய் தடுப்பு ஒருங்கமைப்பின் ஏற்பாட்டில் புற்றுநோய் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கை தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட மிக அண்மைய புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2021 இல் இலங்கையில் புதிதாக 37,753 புற்றுநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதன்படி நாளொன்றுக்கு சுமார் 103 புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அத்தோடு வருடமொன்றுக்கு 1000 இற்கும் அதிகமான சிறுவர்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். இலங்கையில் ஆண்களை அதிகம் பாதிக்கும் புற்று நோய்களாக வாய்க்குழி, நுரையீரல், பெருங்குடல், குதம், மற்றும் உணவுக் கால்வாய் புற்று நோய்கள் விளங்குகின்றன. மேலும் பெண்களை அதிகம் பாதிக்கும் புற்று நோய்களாக மார்பகம், தைரொய்டு, பெருங்குடல், கருப்பை மற்றும் கருப்பைவாய் ஆகியன விளங்குகின்றன. அந்த வகையில் மார்பகப் புற்று நோயானது கால்வாசிக்கும் அதிகமான பெண்களிடம் கண்டறியப்பட்டுள்ளது.

சமீபத்திய ஆய்வுகளின்படி, 50 வயதிற்குட்பட்ட புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 80 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதேசமயம் 40, 30 வயது அல்லது அதற்கும் குறைவான வயதுடையவர்களின் புற்றுநோய் தொடர்பான இறப்பு வீதம் 27 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் மிக இளம் வயதில், அதாவது 50 வயதுக்குள் புற்றுநோயால் இறக்கின்றனர்.

அந்த வகையில் 2020 இல் இலங்கை மருத்துவமனைகளில் இறந்தவர்களில், புற்றுநோய் காரணமாக இறந்தவர்கள் 02ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர். 2019 இல் 16 ஆயிரம் புற்றுநோய் இறப்புகள் பதிவாகியுள்ளன.



ஆனால் உலகளாவிய ரீதியில் 06 பேரில் ஒருவர் புற்றுநோயால் இறக்கின்றனர். மதுபானம், புகையிலை, அதிக உடல் நிறை, போதுமான அளவு மரக்கறி, பழங்கள் உட்கொள்ளாமை, உடற்பயிற்சி செய்யாமை ஆகிய காரணங்கள் 1/3 புற்றுநோய் இறப்பிற்கு வித்திடுகின்றன.

புற்றுநோய் மற்றும் அதன் சிகிச்சை முறைகள் பற்றிய எண்ணற்ற கட்டுக்கதைகளும் தவறான புரிந்துணர்வுகளும் காணப்படுகின்றன. அதனால் தகுதியற்ற ஆய்வுக்கு உட்படாத சிகிச்சை முறைகளை மக்கள் பாவிக்கின்றனர். இவ்வாறான காரணங்களால் குணப்படுத்தக்கூடிய சில புற்று நோயாளர்களும் கூட தீவிர நிலைக்கு செல்கின்றனர். அதனால் குணப்படுத்த முடியாத கட்டத்தில் சிகிச்சைக்கு வருபவர்களும் இருக்கின்றனர்.

இந்நிலைமை குணப்படுத்தக்கூடிய புற்றுநோய்களைக் குணப்படுத்தக்கூடிய வாய்ப்பை கணிசமான அளவு குறைத்து விடக்கூடியதாக உள்ளது.

அதனால் இலங்கை புற்றுநோய் மருத்துவ நிபுணர்கள் சங்கம், பொது மக்களிடையே புற்று நோய் பற்றிய விழிப்புணர்வு, முன்கூட்டிய கண்டறிதல், முறையான சிகிச்சை முறைமை, புற்றுநோயைத் தவிர்க்கும் ஆரோக்கிய வாழ்வு முறைமை பற்றிய பொது அறிவினை பரவலாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

விஞ்ஞான முன்னேற்றங்களால் புற்றுநோய் சிகிச்சையில் முன்னேற்றம் அடைந்தாலும், அதனுடன் தொடர்புடைய செலவினங்களும் அதிகரித்து வருகின்றன. இலங்கை அரச மருத்துவமனைகள் இந்நோயாளர்களுக்கு முற்றிலும் இலவசமாக சிறந்த தரமான சிகிச்சைகளை வழங்குகிறது. எவ்வாறாயினும் இச்சிகிச்சையின் தரத்தை பேணுவதற்கு இந்த வானளாவிய செலவினங்கள் சவாலாக உள்ளன.

இங்கு அரசதுறை நிதிப்பற்றாக்குறையை தனியார் கூட்டமைப்பின் மூலம் குறைக்க முடியும். தேசிய புற்றுநோய் வைத்தியசாலை, கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் மாத்தறை பொது வைத்தியசாலை போன்றவற்றில் அண்மைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இலங்கை புற்றுநோய் மருத்துவ நிபுணர்களது சங்கமானது புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சையின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது.

# பத்தாயிரம் மாணவர்களுக்கு லயன்ஸ் கழகம் முன்னெடுக்கும் சத்துணவுத் திட்டம்

200 நாடுகளில் செயற்படும் லயன்ஸ் கழகங்களின் தலைவி லயன்ஸ் டாக்டர் பற்றி ஹில் (கனடா) அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். கடந்த 30 வருட காலப் பகுதியில் லயன்ஸ் கழகத்தின் சர்வதேசத் தலைவி ஒருவர் வருகை தந்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கையிலுள்ள லயன்ஸ் 306 சர்வதேச கழகத்தின் தலைவர் லயன்ஸ் இந்கர கௌசல்யா, லயன்ஸ் மகேந்திர அமரசூரிய மற்றும் லயன்ஸ் மகேஷ் பஸ்க்குல், சர்வதேச பணிப்பாளர்கள் ஆகியோருடன் இணைந்து அவர் கொழும்பு சங்கரில்லா ஹோட்டலில் ஊடக சந்திப்பொன்றை நடாத்தினார்.





அச்செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த லயன்ஸ் கழகத்தின் தலைவர் டாக்டர் பற்றி ஹில், இலங்கை உட்பட 200 நாடுகளில் சர்வதேச லயன்ஸ் கழகங்கள் செயற்படுகின்றன. 1958 இல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச லயன்ஸ் கழகம் ஓர் சமூக சேவை அமைப்பு மாத்திரமல்லாமல் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமும் ஆகும். இந்திய லயன்ஸ் கழகம் தான் இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கையில் 600 லயன்ஸ் கழகம் உள்ளன. 18 ஆயிரம் லயன்ஸ் அங்கத்தவர்களும், லியோ 30 ஆயிரம் பேர் உள்ளனர். லயன்ஸ் கழகத்தின் பணிகள் அடுத்த வருடத்திலிருந்து இரட்டிப்பாக்கப்படும். உலகில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களினதும் ஏனைய மனிதாபிமான நெருக்கடிகளின் போது பாதிக்கப்படும் மக்களுக்கும் உடனுக்குடன் உதவும் சர்வதேச சமூக அபிவிருத்தி நிறுவனம் இது என்றும் குறிப்பிட்டார்.

அதேநேரம், 2004 ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் ஐந்து மாவட்டங்களில் எமது நிவாரண உதவித் திட்டங்களை முன்னெடுத்தோம். இத்திட்டத்தின் கீழ் 1300 வீடுகளை நிர்மாணித்து கொடுத்துள்ளோம். பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற பாரிய திட்டங்களையும் முன்னெடுத்து அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம். அவற்றின் ஊடாக மக்கள் நன்மை அடைந்துள்ளனர்' என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இந்நாட்டில் 10 ஆயிரம் மாணவர்களுக்கென சத்துணவுத் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளோம். இத்திட்டம் எமது பிராந்திய லயன்ஸ் கழகங்கள் ஊடாக ஐந்து வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும். அத்தோடு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம், கண் சத்திர சிகிச்சை முகாம், சிரமதான பணிகள் உள்ளிட்ட பல்வேறு சமூக மேம்பாட்டு பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 6 மாதங்களில் 5.9 மில்லியன் மக்கள் லயன்ஸ் கழகத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்' எனக் குறிப்பிட்ட அவர், யாழ்ப்பாணம் உட்பட வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் லயன்ஸ் கழகத்தின் 56 கிளைகள் உள்ளன. அந்தந்த கழகங்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் பல்வேறு சமூக அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக இரத்த தானம், கண் சத்திர சிகிச்சை முகாம், பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு திட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் வாராந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வடக்கு கிழக்கில் மூன்று தசாப்த காலம் யுத்தம் இடம்பெற்றது. லயன்ஸ் கழகத்தின் பாரிய உதவிகள் அப்பிரதேசங்களுக்கு இற்றை வரையும் கிடைக்கப் பெறவில்லை. சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்தோம். அதன் பின்னரான காலப்பகுதியில் அப்பிரதேசங்களுக்கு லயன்ஸ் கழகத்தின் பாரிய உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுக்கூறினார் லயன்ஸ் கழகத்தின் சர்வதேசத் தலைவர்.

'லயன்ஸ் கழகம் ஒருபோதும் இன, மொழி, மதம் பிரதேச பாகுபாடுகள் பாராது உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளை நல்கிவருகின்றன' என்றார் லயன்ஸ் கழகத்தின் இலங்கைத் தலைவர்.

அஷ்ரப் ஏ சமத்...
(தெஹிவளை கல்கிஸ்ஸை விஷேட நிருபர்)

# மனிதனை பக்குவப்படுத்தும் பயணம்



மனித வாழ்வில் பயணம் என்பது இன்றியமையாத ஒன்று. தவிர்க்க இயலாததும் கூட. 'மனிதர்களே! பூமியில் பயணம் செய்யுங்கள். அல்லாஹ்வுக்கு மாறுசெய்யும் குற்றவாளிகளின் இறுதிநிலை என்னவானது என்பதைச் சிந்தியுங்கள்.' (அல்குர்ஆன் 27:69)

பயணிக்க பயணிக்க ஒருவனுடைய ஆன்மா மணம் பெறும் என்பது மாத்திரமல்ல, அவனுடைய குணமும் சீர்பெறும் என்பது அறிஞர் பிஷ்ரியின் கூற்று.

ஐரோப்பா கண்டத்திலுள்ள ஹங்கேரியைச் சேர்ந்த லியோபோல்ட் வைஸ் (Leo Bold Weise) என்பவர் யூத மதத்தைச் சேர்ந்தவர். உலக நாடுகளை வலம் வந்தவர். இஸ்லாமிய நாடுகளில் பயணித்த போது அவர் கண்ட காட்சிகள் அனுபவங்கள் அவருடைய மனதையும் குணத்தையும் மாற்றின.

ஒரு கட்டத்தில் அவர் இஸ்லாத்தைத் தழுவி முஹம்மத் அஸாத் என பெயர் பெற்றார். 'மக்காவை நோக்கிய பயணம்' என்ற நூலும் 'குர்ஆனின் செய்தி' என்ற குர்ஆன் விரிவுரையும் அவரது நூற்களேயாகும்.

மக்காவை நோக்கிய பயணம் அவரது ஆன்மாவை பரிசுத்தப்படுத்தியது. 'உலகம் ஒரு சிறந்த புத்தகம் போன்றது. வீட்டை விட்டு வெளியேறி வெளி உலகை காணாதவன் அந்த புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்தை கூட திறந்து பார்க்காதவனைப் போன்றாவான்' என்கிறார் ஓர் அறிஞர்.

எனவே நாடு, நகரம், கிராமம் என்றில்லாமல் பயணங்களை மேற்கொண்டு அல்லாஹ்வின் ஆற்றல்களையும் அற்புதங்களையும் அருளையும் அறிய வேண்டும். குறிப்பாக நாம் மாத்திரமல்லாமல் நம் பெற்றோர் மனைவி மக்கள் உறவினர்கள் போன்றவர்களையும் அழைத்துச் சென்று அல்லாஹ்வின் படைப்புக்களைப் பார்வையிடச் செய்ய வேண்டும். பலதரப்பட்ட மனிதர்களையும் சந்திக்கச் செய்ய வேண்டும். அவற்றின் ஊடாக சிந்தனையை விரிவாக்கமடையும். மனிதர்களைப் படிப்பதற்கு பயணம் மிக அவசியமானது. அதை பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக பொது மருத்துவமனையொன்றுக்கு நமது சிறுவர், சிறுமியருடன் சென்று, அங்கு நோயாளர்கள் அனுபவிக்கும் வேதனைகளை நாமும் அவர்களும் கண்கூடாகப் பார்க்க வேண்டும். அதன் ஊடாக வாழ்வின் துன்பங்களையும் வேதனைகளையும் எம்மால் உணரவும் முடியும். அவர்களுக்கு உணர்த்தவும் கூடியதாக இருக்கும். இதே போன்று உணவு உற்பத்தி பயிர்ச்செய்கை பிரதேசங்கள், கால்நடை வளர்ப்பு பண்ணைகள் உள்ளிட்ட அனைத்தையும் நேரில் பார்வையிடும் போது அல்லாஹ்வின் ஆற்றல்களையும் அற்புதங்களையும் தெளிவாகக் கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கும். அவை நிச்சயம் இறைநம்பிக்கையை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும்.

தொகுப்பு:
**ஜத்து மைஸரா அப்துல் காதிர்...**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# தொழுகை: ஆன்மீக பயிற்சி



அருளும் மாண்பும் நிறைந்த மகத்தான றஜப் மாதம் இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு வகையான சிறப்பம்சங்களையும் தடயங்களையும் பதித்துள்ளன. குறிப்பாக, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் முதன்மை கடமையாக விளங்கும் தொழுகை இம்மாதத்திலேயே கடமையாக்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணம் (விண்ணுலக யாத்திரையை) மேற்கொண்ட போது அல்லாஹ்வால் இச்சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட ஒப்பற்ற வெகுமானமே தொழுகையாகும்.

அல்லாஹுத்தஆலா தொழுகை என்ற அற்புதமான கடமையின் மூலம் ஒவ்வொரு தனி மனிதனிலும், அவனது குடும்பத்திலும், அவன் சார்ந்திருக்கும் சமூகத்திலும், ஆன்மீக ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், சிந்தனை ரீதியாகவும், உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களையும், அபிவிருத்திகளையும் அழகுறத் தெளிவுபடுத்தியுள்ளான்.

சுருங்கக் கூறின், ஒரு மனிதனை அவனிடம் காணப்படுகின்ற அனைத்து விதமான துர்குணங்களிலிருந்தும் மீட்டெடுத்து அவனை புனிதப்படுத்தும் அற்புத மந்திரமாக அல்லாஹ் தொழுகையை ஆக்கி வைத்துள்ளான். இது பற்றி அல்லாஹுத்தஆலா குறிப்பிடும் போது, 'தொழுகையை நிலை நிறுத்துவீராக! நிச்சயமாக தொழுகை மனிதனை மானக்கேடான விடயங்களை விட்டும், வெறுக்கத்தக்க செயற்பாடுகளை விட்டும் விலக்கும். நிச்சயமாக அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகப்பெரிய சக்தியாகும், அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிவான்'. (அல்குர்ஆன் 23:12)

மனிதனின் இரத்தம் ஓடும் நாளமெல்லாம் ஓடிக் கொண்டிருக்கும் ஷைத்தான்சதாவும் அவனைவழிகெடுத்து நரகின் பக்கம் அழைத்துச் செல்கின்ற செயற்பாடுகளிலே அவனை திளைக்கச் செய்கின்றான். இதற்கான பிரதான ஆயுதமாக அவன் கைகொள்வது மனிதனின் மனோ இச்சையாகும், மனித மனங்களில் கெட்ட எண்ணங்களையும் மோசமான இச்சைகளையும் ஏற்படுத்துவதன் ஊடே அவனை அல்லாஹ்வை விட்டும் தூரமாக்கி விடுகின்றான். இவ்வாறு இறை சிந்தனையில் இருந்து ஒரு மனிதன் தூரமாகி விடுகின்ற போது அவனை அல்லாஹ்வோடு இணைக்கின்ற இணைப்பு பாலமாக அல்லாஹ் தொழுகையை ஆக்கியுள்ளன். ஒரு மனிதன் தொழுவதற்காக தன்னை தயார்படுத்திக் கொள்கின்ற போது அல்லாஹ் அவனை சுத்தப்படுத்த ஆரம்பித்து விடுகின்றான். உதாரணமாக ஒரு மனிதன் தொழுகைக்காக வுழு செய்கின்றபோது, அவனது வுழுவுடைய உறுப்புக்கள் மூலம் செய்யப்பட்ட பாவங்கள் அனைத்தும் அவ்வுழு நீரிலேயே கரைந்து செல்வதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவ்வாறே ஒரு மனிதன் அவனது வீட்டிலிருந்து அழகான முறையில் உளூச் செய்து தொழுகையை நிறைவேற்றுவதற்காக பள்ளிவாயலை நோக்கி நடந்து வருவானேயானால் அவன் வைக்கும் ஒவ்வொரு கால் எட்டுக்கும் அவனது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, பல நன்மைகள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆக மொத்தத்தில் ஒரு மனிதனை ஷைத்தானிய ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுத்து, அவனைத் தூய்மைப்படுத்தி, உள அமைதியையும், ஒளி நிறைந்த வாழ்வையும் வழங்குவதற்கான அற்புதமான ஆதாரம் தொழுகை என்றால் மிகையாகாது.

இதனையே நபி (ஸல்) அவர்கள், 'யார் தொழுகையை பேணிக்கொள்கிறாரோ அவருக்கு அத்தொழுகை பிரகாசமாகவும், அத்தாட்சியாகவும், மறுமை நாளில் ஈடேற்றமாகவும் ஆகிவிடும். மேலும் எவன் அதனை பேணிக் கொள்ளவில்லையோ அவனுக்கு அத்தொழுகை பிரகாசமாகவோ, சாட்சியாகவோ, ஈடேற்றமாகவோ இருக்காது. மாறாக அவன் மறுமை நாளில் காரூன், ஹாமான் ஆகியோருடன் இருப்பான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: அஹமத்)

மேற்குறிப்பிடப்பட்ட நபிமொழி மூலம் தொழுகையானது ஒரு முஸ்லிமின் முகவரியாகவும், அவனது இம்மை மறுமை வாழ்வின் விமோசனமாகவும் எம் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு முஸ்லிமின் இம்மை மறுமையின் ஈடேற்றத்திற்கான அத்திவாரமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்ற தொழுகையை, அவன் எச்சந்தர்ப்பத்திலும் விட்டு விடுவதற்கான அனுமதியை இஸ்லாம் யாருக்கும் வழங்கவில்லை. பருவ வயதை அடைந்து, புத்திசுயாதீனமுடைய ஒவ்வொரு முஸ்லிமும் தினசரி ஐவேளைத் தொழுகையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதனை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது. ஒரு முஸ்லிமுடைய நம்பிக்கை கோட்பாட்டிற்கும், இறை நிராகரிப்பிற்கும் இடையேயான பிரதானமான பிரிகோடாக அல்லாஹ் தொழுகையை ஆக்கி வைத்துள்ளான்.

எந்தவொரு முஸ்லிம் வேண்டுமென்றே தொழுகையை நிராகரிக்கின்றானோ அவன் இஸ்லாத்தை விட்டும் வெளியாகிவிட்டான் என்ற கடுமையான எச்சரிக்கையை இஸ்லாம் பிறப்பித்துள்ளது.

இஸ்லாத்தின் இதர கடமைகளை தொழுகையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தொழுகை ஒரு முதன்மை கடமை என்பதும், ஒரு முஸ்லிமால் ஒரு போதும் அதனை விட்டு விடுவதற்கான அனுமதியில்லை என்பதும் புலப்படுகின்றது. இதற்கான பிரதான காரணி என்னவெனில் தொழுகை எப்படி ஒரு முஸ்லிமுடைய ஆன்மிக ஈடேற்றத்திற்கான அடிப்படையாகப் பார்க்கப்படுகின்றதோ அவ்வாறே ஒரு முஸ்லிமுடைய புறச்செயற்பாடுகளையும் செம்மையாக்கி, அவனை மனிதநேயம் கொண்ட, மானிடப் பண்புகள் நிறைந்த ஒரு மிகச்சிறந்த ஆளுமையாக வடிவமைப்பதில் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றன என்பதை உயிர்ப்போடு தொழுகையை நிலை நாட்டுகின்ற ஒவ்வொரு மனிதனும் எளிதாகப் புரிந்து கொள்வான். இதனை பல கோணங்களில் நோக்கலாம்;

தொழுகையை நியமமாக நிறைவேற்றக் கூடிய மனிதனது ஆன்மா சுத்தமடைவது போன்று அவனது உடலும் சுத்தமடைகின்றன. தினசரி ஐந்து வேளைத் தொழுகைக்காக வுழு செய்யும் போது அவனது உடலின் முக்கிய பாகங்கள் எப்போதும் சுத்தமாகவே இருக்கின்றன.

தொழுகையை நியமமாக தொழக்கூடிய மனிதனது ஆரோக்கியம் உறுதி செய்யப்படுகின்றது. தொழுகையின் மூலம் அவனது உள்ளம் அமைதி பெறுகின்றது, இதனால் அழுத்தங்களாலும் அமைதியின்மையாலும் ஏற்படும் நோய்களிலிருந்து மனிதன் விடுபடுகின்றான். இவ்வாறே எப்பொழுதும் சுத்தமாக இருக்கும் அவனது உடலும் அவனது ஆரோக்கியத்தை உறுதி செய்கின்றது.

ஒரு மனிதன் தொழுகையை பேணி நிறைவேற்றுவதன் ஊடாக அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறும்போது அவனது வாழ்வில் அபிவிருத்தியும் பரக்கத்தும் ஏற்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகள் நீங்கி அவன் மகிழ்ச்சியான வாழ்வை பெற்றுக்கொள்கிறான்.

தொழுகையின் மூலம் ஒரு மனிதன் பெற்றுக் கொள்கின்ற ஒப்பற்ற பயிற்சிகள் குறிப்பாக கட்டுப்படும் தன்மை, பிறரை மதித்து நடக்கும் மனோநிலை, பணிவு, பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற உயரிய பண்புகளினூடே அவன் சார்ந்திருக்கின்ற சமூகத்தினரால் எப்போதும் மதிக்கப்பட்டு, ஓர் உயர்ந்த சமூக அந்தஸ்தை பெற்றவனாக வாழ்கிறான்.

ஒரு மனிதன் சடவாத ஷைத்தானிய சிந்தனையில் இருந்து விடுபட்டு, இவ்வுலக வாழ்வின் யதார்த்தத்தை புரிந்து உயிர்போடு வாழ்வதற்கான வழியை தொழுகை ஏற்படுத்தி விடுகின்றது.

எனவே மகத்துவம் நிறைந்த தொழுகையை நியமமாக நிறைவேற்றுபவர்களின் கூட்டத்தில் அல்லாஹ் எம்மனைவரயும் சேர்க்கட்டும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
**எம்.ஐ.எம். சித்தீக்...**
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# பெற்றோருக்கு நன்மை செய்வோம்

பெற்றோருக்கு நன்மை செய்வதும், நன்மைகள் பல கிடைக்கும் நற்செயல் தான். பெற்றோருக்குச் செய்யும் நன்மை அது அவர்களுக்கானது அல்ல, அது நமக்கே திரும்பவும் கிடைக்கும் நன்மையாகும்.

இஸ்லாத்தின் பார்வையில் ஆன்மிகம் என்பது இறைவனுடன் மட்டும் தொடர்பில் இருப்பது அல்ல. பெற்றோரின் தொடர்பில் நிலைத்திருப்பதும் ஆன்மிகம் தான். பெற்றோருக்கு பணிவிடை செய்வதும் அவர்களிடம் பணிந்து நடப்பதும் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் நடந்து கொள்வதும் அவர்களது வார்த்தைகளுக்கு கட்டுப்படுவதும் அவர்களுக்கு ஊழியம் செய்வதும் இறைஊழியம் தான்.

பெற்றோருக்கு நன்மை புரியும்படி அல் குர்ஆனில் இறைவன் குறிப்பிட்டிருக்கிறான். 'அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனுக்கு யாதொன்றையும் இணையாக் காதீர்கள். தாய், தந்தைக்கு நன்றி செய்யுங்கள். (அவ்வாறே) உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அந்நிய அண்டை வீட்டாருக்கும், (எப்பொழுதும்) உங்களுடன் இருக்கக் கூடிய நண்பர்களுக்கும், பயணிகளுக்கும், உங்களிடம் உள்ள அடிமைகளுக்கும், (அன்புடன் நன்றி செய்யுங்கள்.) எவன் கர்வம் கொண்டு பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை.' (அல் குர்ஆன் 4:36).



'தன்னுடைய தாய் தந்தையிடம் நல்ல விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று நாம் மனிதனுக்கு அறிவுறுத்தினோம். அவனுடைய அன்னை, அவனைச் சிரமத்துடனேயே கருவுற்று சுமந்திருந்தாள். சிரமப்பட்டுத்தான் அவனைப் பெற்றெடுத்தாள். மேலும், அவனைச் சுமந்திருப்பதற்கும் அவனுக்கு பால் குடிப்பை மறக்கடிப்பதற்கும் முப்பது மாதங்கள் ஆகின்றன.'
(அல் குர்ஆன் 46:15).

'பெற்றோர் நலனைப் பேணவேண்டுமென்று நாம் மனிதனுக்கு அறிவுறுத்தியுள்ளோம். அவனுடைய தாய் நலிவுக்கு மேல் நலிவை ஏற்று அவனைத் தன் வயிற்றில் சுமந்தாள். மேலும், அவன் பால்குடி மறக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன. (இதனால்தான் நாம் அவனுக்கு அறிவுரை கூறினோம்) எனக்கு நன்றி செலுத்து. மேலும், உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்து. என் பக்கமே நீ திரும்பிவர வேண்டியுள்ளது' (அல் குர்ஆன் 31:14)

இறைவன் விதித்த கடமைகளில் மிகச் சிறந்ததும், முதல் நிலை பெறுவதும் தொழுகைதான். அந்தத் தொழுகைக்கு பிறகு சிறந்த செயல், பெற்றோருக்கு நன்மை புரிவதுதான். இதை உணர்த்தும் விதமாக பின் வரும் நபிமொழி அமைந்துள்ளது.

இப்னு மஸ்ஊத் (ரழி) கூறுகிறார், நான் நபி (ஸல்) அவர்களிடம் 'இறைவனுக்கு மிகவும் விருப்பமான செயல் எது?' என்று கேட்டேன். அதற்கு நபிகளார் 'தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது' என்று பதில் கூறினார்கள். 'பிறகு எது?' என்று கேட்டேன். 'பெற்றோருக்கு நன்மை செய்வது' என்றார்கள். 'பிறகு எது?' என்று கேட்டதற்கு 'இறைவழியில் அறப்போர் புரிவது' என்று கூறினார்கள்'. (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, 'இறைத்தூதர் அவர்களே, நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?' என்று கேட்டார். 'உன் தாய்' என நபி (ஸல்) பதில் கூறினார்கள். அவர் 'பிறகு யார்?' என்று கேட்டார். 'உன் தாய்' என்றார்கள். அவர் 'பிறகு யார்?' என்று கேட்டார். 'உன் தாய்' என்றார்கள். அவர் 'பிறகு யார்?' என்று கேட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'உன் தந்தை' என்றார்கள்'. (ஆதாரம்: புஹாரி)

இந்நபிமொழியின் படி, முக்கிய மூன்று இடங்களை தாய் பெற்றுக்கொள்கிறார். தந்தை நான்காவது இடத்தை பெறுகிறார். குழந்தைகளுக்காக தாய் மூன்று விதமான தியாகங்களை செய்கிறாள். அவற்றில் ஒன்று குழந்தையை பத்து மாதங்கள் தமது கருவில் சுமந்தது. மற்றையது தன் உயிர் கொடுத்து குழந்தையை பிரசவித்தது. மூன்றாவது, இரண்டாண்டுகள் தமது உதிரத்தையே பாலாக மாற்றி அமுதூட்டியது. இந்த மூன்று விதமான கட்டங்களை தாய் வெகு சிரமத்திற்கு மேல் சிரமப்பட்டு கடந்து செல்வதால் அவளுக்கு இவ்வாறான சிறப்பு கிடைக்கப்பெறுகிறது.

எனினும் தாயின் தியாகத்திற்கு சற்றும் குறைவில்லாமல், தந்தையின் தியாகமும் குழந்தைகளை சூழ்ந்துள்ளது. தாயின் தியாகம் முப்பது மாதங்கள் என்றால் தந்தையின் தியாகம் பல வருடங்களாக நீண்டு செல்கிறது.

குழந்தைகளுக்காக தந்தை மாடாக உழைத்து, ஓடாய் தேய்வது, குழந்தை உயரச் செல்லும் படிக்கட்டுகளாக தனது உடலையே அமைப்பது, தன்னை விட உயர்வான இடத்தை அடைய தனது தலைக்கு மேலே குழந்தையை உயர்த்திப் பிடிப்பது போன்ற தந்தையின் வலிகள் நிறைந்த தியாகங்களை எந்த தராசிலும் அளந்து விட முடியாது. பல கிளைகளை ஒரு வேர்தான் தாங்கிப் பிடிக்கிறது. அது என்றுமே மறைந்துதான் இருக்கும். அந்த வேர் தான் தந்தை. குழந்தைகளின் வளர்ச்சியின் அடித்தளம் தான் தந்தை. அவரையும் இஸ்லாம் தனியாகவும் கௌரவிக்கிறது.

ஒரு தடவை ஜாஹிமா (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைவனின் தூதரே, நான் அறப்போருக்குச் செல்ல நாடி, உங்களிடம் ஆலோசனை பெற வந்துள்ளேன்' என்று கூறினார். உடனே நபியவர்கள் 'உனக்கு தாய் (உயிருடன்) உண்டா?' என்று கேட்க, அவர் 'ஆம்', என்றார். 'அப்படியானால், உனது தாயைப் (அவருக்கு பணி விடைகள் செய்வதின் மூலம்) பற்றிப் பிடித்துக்கொள். நிச்சயமாக சொர்க்கம் அவளுடைய இருபாதங்களின் கீழ்தான் உள்ளது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: நஸயீ)

பெற்றோர் இணை வைப்பவராக இருந்தாலும் உலக விஷயங்களில் அவர்களுக்கு உடன்பட்டு, உறவாடி மகிழ வேண்டும். மார்க்கத்திற்கு முரணாக நடக்குமாறு உத்தரவிட்டால் அதை மட்டும் கேட்க வேண்டியதில்லை. இது குறித்து அல் குர்ஆன், 'ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லையோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால், அப்போது நீ அவ்விருவருக்கும் கட்டுப்பட வேண்டாம். ஆனால் இவ்வுலக வாழ்வில் அவ்விருவருடனும் அழகிய முறையில் உறவு வைத்துக்கொள். என்னை நோக்கித் திரும்பியோரின் வழியைப் பின்பற்று' (31:15) என்றுள்ளது.

இவ்வசனத்தின் படி பெற்றோரிடம் உறவாடுவதற்கும், நன்மை புரிவதற்கும் மதம் தடையாக வரக்கூடாது. பெற்றோருக்கு எந்தவிதத்தில் எல்லாம் நன்மையும், உதவியும் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்யவேண்டும். அதனால் பெற்றோருக்கு நன்மைகள் செய்வதில் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்வோம்.

**அபூ முஷீரா...**

# நன்றி மறவாமைக்கு நபிகளாரின் முன்மாதிரி

உன்னதமான நன்மைகளை மானசீகமாகக் கடைபிடித்து வாழ்ந்த குறைஷிப் பிரமுகர் தான் அபுல் புக்தரி. இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் நபிகளாரையோ முஸ்லிம்களையோ அவர் தொந்தரவு செய்ததில்லை. பத்ருப் போர் முடிவடைந்த நேரம் நபிகளாருக்கும் தோழர்களுக்கும் அவசரமாக செய்து முடிக்க வேண்டிய பணிகள் நூற்றுக்கணக்கில் இருந்தன. அதற்கிடையில் நபி (ஸல்) அவர்களிடம் ஒவ்வொருவராக வந்து தங்களுடைய போர் அனுபவங்களை விவரித்துக்கொண்டிருந்தனர்.

இச்சமயம் முஜத்தர் பின் ஸியாத் (ரழி) எனும் நபித்தோழரும் நபிகளாருக்கு முன்னால் வந்து நின்றார். போரில் கிடைத்த வெற்றி உள்ளுக்குள் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும், முகத்தில் கடும் துக்கத்தின் ரேகைகள் தெரிந்தன.

அல்லாஹ்வின் தூதரே! என முஜத்தர் (ரழி) விசும்பலுடன் அழைத்தார். நபி (ஸல்) அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். நபிகளாரைப் பார்த்ததும் விசும்பல் கண்ணீராக மாறத் தொடங்கியது. 'நடைபெற்ற போரில் அபுல் புக்தர் பின் ஹிஷாமை கொல்லக்கூடாது என்று தாங்கள் ஆணை பிறப்பித்திருந்தீர்கள். ஆனால் அவரை நான்தான் போரில் எதிர்கொண்டேன். போர்க்களத்தில் எனக்கு முன்னால் அவர் வாளுயர்த்தி வந்தபோதெல்லாம் இயன்றவரை அவரை நான் தவிர்த்தேன். அப்போது அவர், 'நீ ஏன் என்னோடு சண்டையிட மறுக்கிறாய்? எனக் கேட்டார். அதற்கு நான் தங்களைப் போர்க்களத்தில் கண்டால் கொல்லக்கூடாதென நபி (ஸல்) ஆணை பிறப்பித்துள்ளார்கள்' என்றேன். அப்போது அவர், 'என்னுடன், எனது நண்பன் ஜினாதா பின் மலீஹாவும் உள்ளார். அவருக்கும் இது பொருந்துமா?' எனக் கேட்க, 'உங்கள் நண்பரைக் குறித்து நபிகளார் எதுவும் கூறவில்லை. ஆகவே அவரை நாங்கள் நிச்சயம் பொருட்படுத்த மாட்டோம் என்றேன். 'அவ்வாறாயின் நாங்கள் இருவரும் சேர்ந்து உங்களுடன் போர் செய்வோம். 'ஆபத்து வேளையில் நண்பரைக் கைவிட்டவன்' என்று மக்கத்துப்பெண்கள் கூறும் இழி சொல்லை என்னால் கேட்க முடியாது'. இவ்வாறு கூறியவாறு அவர் என்னோடு நேருக்கு நேர் மோதுவதற்காகத் தயாராக நின்றார். அவரை எப்படியாவது கைது செய்து தங்களுக்கு முன்னர் கொண்டு வந்துவிட வேண்டும் என்று நான் கடுமையாக முயன்றேன் அல்லாஹ்வின் தூதரே! ஆயினும் அது பலிக்கவில்லை. எனது உயிரைக் காப்பதற்காக அவரை நான் கொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது அல்லாஹ்வின் தூதரே!' இத்தனையையும் கூறி முடிக்கும்போது முஜத்தர் (ரழி) அவர்களுடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. அப்போது, நபி (ஸல்) அவர்கள், 'இந்த விஷயத்தில் தங்களை நான் குற்றம் சுமத்த மாட்டேன். அபுல் புக்தரிக்கு நாம் செய்ய வேண்டிய பெரும் நன்றிக்கடனை நினைத்துதான் அவ்வாறு ஆணை பிறப்பித்தேன்' என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்களையும் அன்னாரது ரத்த பந்த உறவினர்களான பனூ ஹாஷிம், பனூ முத்தலிப் குடும்பத்தாரை அபூதாலிப் பள்ளத்தாக்கில் குறைஷிகள் மூன்று வருட காலம் ஊர் விலக்குச் செய்திருந்தனர். ஊர்விலக்கு செய்யப்பட்டவர்களுடன் பேசக்கூடாது. அவர்களுடன் சேர்ந்து இருக்கக் கூடாது. அவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடக்கூடாது. திருமண பந்தம் எதுவும் வைக்கக் கூடாது. அத்துடன் அவர்கள் மீது எக்காரணம் கொண்டும் கருணை காட்டக் கூடாது என்ற கட்டுப்பாட்டு விதிகளை எழுதி கஅபாவில் தொங்கவிட்டனர் குறைஷிகள்.

இத்தடை மூலம் நபிகளாரும் குடும்பமும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர். ஊர்விலக்கு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடையும் தருவாயில் ஒருநாள் இரவு வேளையில் கதீஜா (ரழி) அவர்களுடைய உறவினரான ஹகீம் பின் ஹிஷாம் அவர்கள், உணவுப் பொதி ஏற்றிய ஒட்டகத்துடன் அங்கு வந்தார். காவலுக்கு நின்றிருந்த அபூஜஹ்ல் முடியாது என்று தடுத்தான். அபுல் புக்தரி உடனடியாக அங்கு வருகை தந்தார். அபூஜஹ்லிடம் கோபத்துடன், 'ஒருவர் தமது இரத்த பந்த உறவுகளுக்குக் கருணையின் அடிப்படையில் உதவ முன் வருவதையும் நீர் தடுக்கின்றீரா?' ஆனால் அபூஜஹ்லில் காதுகளில் எதுவும் விழவில்லை. கையில் கிடைத்த ஏதோ ஒரு பொருளை எடுத்து அபூஜஹ்லுடைய உடலில் ஓங்கி அடித்தார் அபுல் புக்தரி. இத்தனைக்கும் அபுல் புக்தரியைவிட அபூஜஹ்ல் வயதில் மூத்தவன். விடவில்லை அபுல் புக்தரி. ஊர்விலக்கு எனும் அந்த அநியாய அறிவிப்பை முடிவுக்குக் கொண்டு வந்தே தீரவேண்டும் என முடிவு செய்தார். அதற்கான நடவடிக்கையில் புத்திசாலித்தனமாகவும் துரித கதியிலும் ஈடுபட்டார். இறுதியில் அது முடிவுக்கு வந்தது. ஊர்விலக்கை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் முன்னணியில் நின்று நடவடிக்கை எடுத்த ஆறு நபர்களில் அபுல் புக்தரி அவர்கள் முக்கியப் பங்கு வகுத்தார்.

இவ்வளவு சீரிய நற்குணங்கள் கொண்ட அபுல் புக்தரி முழுமையான இணைவைப்பாளராகவே இருந்தார். இந்த நல்லவர், முஸ்லிம்களுடைய கரங்களால் கொல்லப்படக் கூடாது என்று நபிகளார் பெருவிருப்பம் கொண்டிருந்தார்கள்.

காலம் மாறியது. தேசமும் மாறியது. ஹிஜ்ரத் என்ற நாடு துறத்தலின் மூலம் முஸ்லிம்கள் மதீனா வந்தடைந்தனர். ஆயினும் அபுல் புக்தரி என்ற நல்ல மனிதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிடத்திலும் முஸ்லிம்களிடத்திலும் எப்போதும் நினைவு கூரப்படும் நபராகவே திகழ்ந்தார். நன்றி மறத்தல் ஒரு முஸ்லிமின் பண்பல்லவே. பத்ருப் போரில் 'அவரைக் கொல்லக் கூடாது' என்ற உத்தரவின் மூலம் அந்த நன்றி மறவாமையை நபிகளார் நிறைவேற்றினார்கள். பெருமானாருடைய இந்த ஆணை, செய் நன்றி மறவாமைக்கு சிறந்த முன்மாதிரிகளில் ஒன்றாகும்.

**அப்துல்லாஹ்...**

## 7ஆவது இந்துசமுத்திர மாநாட்டுக்கு...

இந்துசமுத்திரத்தை அண்மித்த நாடுகள் மற்றும் இந்துசமுத்திரத்தை அதிகமாகப் பயன்படுத்தும் ஏனைய நாடுகளைப் பாதிக்கும் பொதுவான அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இந்துசமுத்திர மாநாடு 2016 இல் ஆரம்பிக்கப்பட்டது.

"நிரந்தரமான மற்றும் நிலையான இந்துசமுத்திரத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இந்த ஆண்டு மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை நிகழ்த்த உள்ளார்.

இம்முறை மாநாட்டில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் 40 நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பங்கேற்புடன் வரைபடம் ஒன்றும் தயாரிக்கப்படும். மாநாட்டுடன் இணைந்ததாக இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்தும் பல உயர்மட்ட கலந்துரையாடல்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் இணைந்து கொள்ளவுள்ளதோடு, "எங்கள் நீல எதிர்காலம்: இந்து சமுத்திர வளங்களின் இருப்பைப் பாதுகாப்பதற்கு பிராந்திய தீவு நாடுகளுடன் இணைந்து செயற்படுவதெப்படி?" என்ற தலைப்பில் வெளிவிவகார அமைச்சர் உரையாற்றவுள்ளார்.

## உயர் நீதிமன்றால் கேள்விக்கு...

முடியாதென்றும் பாராளுமன்றத்தின் ஊடாக திருத்தங்களை கொண்டுவந்து அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உயர்நீதிமன்றத்தின் திருத்த யோசனைகளுக்கு அப்பால் நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததுடன் அது தொடர்பில் கலந்துரையாட விசேட கட்சித் தலைவர் கூட்டம் ஒன்றை நடத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தினர்.

அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்,

"சட்டம் இயற்றல் தொடர்பில் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தயாரிக்கப்படும் சட்டவரைபில் அரசியலமைப்பின் வகிபாகத்தை சட்ட மாஅதிபர் உறுதிப்படுத்தியதன் பின்னர் தான் சட்டவரைபு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் முதல் வாசிப்புக்கு சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்தை 14 நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தும் உரிமை நாட்டு மக்களுக்கு காணப்படுகிறது.

அந்த வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 45 க்கும் மேற்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுக்கள் முறையான விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரசாங்கத்தின் சார்பில் சட்ட மாஅதிபர் பல திருத்தங்களை அதில் முன்வைத்தார். அதற்கமைய சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் பல அறிவுறுத்தல்களை வழங்கியது.

உயர் நீதிமன்றத்தின் திருத்தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு, குழு நிலை விவாதத்தின் போது திருத்தம் செய்யப்பட்டது.

தயாரிக்கப்படும் சட்டமூலங்கள் அரசியலமைப்புக்கு முரணானதா? அல்லது முரணற்றதா என்பதை பரிசீலனை செய்யும் அதிகாரம் மாத்திரமே உயர் நீதிமன்றத்திற்கு காணப்படுகிறது. அரசியலமைப்புக்கு முரணான ஒரு சரத்து காணப்படுமாயின் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும் என அதன் போது நீதிமன்றம் அறிவிக்கும்.

இத்தகைய பின்னணியில் நிகழ்நிலை காப்புச் சட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். திருத்தங்களை முன்வைத்தால் கலந்துரையாடி அதனை நிவர்த்தி செய்ய முடியும். எந்த சட்டத்தையும் குறைபாடுகள் இல்லாமல் இயற்ற முடியாது.

நாட்டின் அரசியலமைப்பிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. அதனால் தான் அது 21 தடவைகள் திருத்தப்பட்டுள்ளன என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அந்த வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டம் அவசரமாக கொண்டு வரப்பட்ட ஒன்றல்ல. 2016 ஆம் ஆண்டு நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாக சட்டவரைபு தயாரிக்கப்பட்டு, சிங்கப்பூர் நாட்டிலுள்ள 11 சமூக வலைத்தளங்களின் முகவர்களுடன் அதற்கான பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

சுய ஒழுக்க கட்டுப்பாட்டுக் கோவையை சமூக வலைத்தளங்களில் அறிமுகப்படுத்துவதாக சமூக நிறுவனங்கள் குறிப்பிட்டன. ஆனால் வழங்கிய வாக்குறுதிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நிறைவேற்றாத காரணத்தால் தான் நிகழ்நிலை காப்புச் சட்டம் சுய ஒழுக்க கோவையை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்டது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழருக்கு...

கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் கே. எஸ். செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகேயுள்ள தேக்காட்டூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 3.56 கோடி ரூபாவில் கட்டப்பட்ட 58 வீடுகள் கொண்ட வீடுகளின் திறப்பு விழா நடைபெற்றது.

புதிய குடியிருப்பை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்துவைத்து, பயனாளிகளுக்கு வீட்டின் சாவிகளை வழங்கினர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே லெம்பலக்குடியில் உள்ள இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் அவர்களுக்கென புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்துகொண்டு புதிய குடியிருப்புகளை திறந்துவைத்தார்.

பின்னர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் கே.எஸ். செஞ்சி மஸ்தான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

"தமிழகத்தில் இலங்கைத் தமிழரின் முகாம்கள் 106 இருக்கின்றன. அந்த முகாம்களில் உள்ள 20 ஆயிரம் குடும்பங்களுக்கும் அதில் உள்ள 60 ஆயிரம் மக்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன. அகதிகள் என்ற வார்த்தையை எடுத்துவிட்டு மறுவாழ்வு முகாம் என்ற பெயரை கொண்டு வந்தது தமிழ்நாடு அரசு.

தமிழகத்திலுள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் தங்கியுள்ள இலங்கை தமிழர்களுக்கு 400 கோடி ரூபாவில் முதல்கட்டமாக 3,551 வீடுகளும், 02ஆவது கட்டமாக 3,953 வீடுகளும் புதிதாக கட்டப்படுகின்றன. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. இதுதவிர, 106 முகாம்களில் தங்கியுள்ள 20 ஆயிரம் குடும்பத்தினருக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது 184 கோடி ரூபாவில் உணவுப் பொருட்கள் கப்பல்கள் மூலம் இலங்கை தமிழர்களுக்காக அனுப்பி வைக்கப்பட்டன என்றார்.

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல்...

பேச்சுவார்த்தைகள் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என்று குறிப்பிடுவதை பழக்கமாகக் கொண்டுள்ள ஜனாதிபதி, தமது கொள்கைப் பிரகடன உரையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை என தெரிவித்த அவர், தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி தமது கொள்கைப் பிரகடன உரையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டுவிட்டதாக குறிப்பிட்டார். ஆனால் உண்மையில் எவ்வித முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடம் இரவல் வாங்குவது மாத்திரமே அரசாங்கத்தின் பிரதான வெற்றியாக காணப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

தேர்தல்களை நடத்தும் திகதியை ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. இது ஜனநாயக நாடு. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசியலமைப்பின் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அதற்கான நிதி விடுவிப்பு தடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உள்ளூராட்சி சபை தேர்தல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தனிநபர் பிரேரணையை முன்வைத்து பல யோசனைகளை நான் முன்னைத்துள்ளேன்.

அவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு மாத்திரம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## தோட்டக் கம்பனிகள் விரைந்து...

தெரிவித்தார். ஜனாதிபதி அது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய பணிப்புரைகளையும் வழங்கியுள்ள போதும், தொழில் அமைச்சும் தோட்டக் கம்பெனிகளும் அது தொடர்பில் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கடந்த 200 வருடகாலமாக ஐந்து பரம்பரையாக இந்த நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு கடுமையாக உழைத்தவர்கள் மலையக மக்கள். இந்த மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தீவிரவாதத்திற்கோ அல்லது நாட்டை அழிப்பதற்கோ ஒரு போதும் செயற்படவில்லை என்பதை குறிப்பிட வேண்டும். இந்த நாட்டை ஆண்ட ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் தார்மிக பொறுப்பு இருந்தது. அது இந்த நாட்டுக்காக உழைத்த மலையக மக்களை கௌரவிக்கும் பொறுப்பு. அவர்களுக்கான உரிய அந்தஸ்தை வழங்கும் பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு அரசாங்கங்களுக்கும் உரியது. அது தவறவிடப்பட்டுள்ளது.

எனினும் அவர்களுக்கான வீடமைப்பு, அவர்களுக்கான காணி உரிமை, தொழில் வாய்ப்புகள், கல்வி, சுகாதாரம் என அவை முறையாக வழங்கப்படாமல் பல்வேறு குறைபாடுகளுடனே அவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது தேசிய மட்டத்தில் காணி உரிமை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை மலையகத்துக்கும் விஸ்தரிக்குமாறு நான் அரசாங்கத்தையும் காணியமைச்சரையும் கேட்டுக் கொள்கின்றேன். மலையகத்தில் எந்தத் தொழில் அல்லது எந்தத் துறையை சார்ந்தவர்களாகினும் சரி அவர்கள் அனைவருக்கும் அவர்களுக்கு சொந்தமான காணி உரிமையை வழங்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ வின் காலத்திலேயே இது வழங்கப்பட வேண்டும் என்றார்.

## 2024 வாக்காளர் பதிவுகளை...

இந்நிலையில் 18 வயதுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அல்லது வீட்டில் தங்கியிருப்போரின் விபரங்கள், அவர்களது வீடுகளில் பெறப்படும் வாக்காளர் பட்டியலில் அவசியம் சேர்க்கப்பட வேண்டும். நிரந்தர வதிவிடத்தை மாற்றாதோர், திருமணம், கல்வி அல்லது வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றியோர் அனைவரும் வாக்காளர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## இந்திய அமுல் பாலுற்பத்தி...

செய்த குழுவினர் பால் உற்பத்தி நிறுவனத்தில் வெளிக்கள சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டனர். பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ குழுவினர், தேசிய பால் உற்பத்திச் சபையின் தலைவர் உள்ளிட்ட பால் உற்பத்தித் துறையின் நிபுணர்கள் குழுவுடன் பால் உற்பத்தியின் புதிய நிலைமைகள் பற்றியும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

இதன்போது பால் உற்பத்தியை அதிகரித்தல், பால் உற்பத்திகளின் விலைகளை குறைத்துக்கொள்ளல், உற்பத்தி வினைத்திறனை மேம்படுத்துதல், தொழில்நுட்பத்தின் உச்ச அளவிலான பாவனை போன்ற விடயங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், அவர்களால் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள முதலீடுகள் பற்றியும் தற்போது தோன்றியுள்ள சிக்கல்கள் மற்றும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பல்வேறு சிக்கலான நிலைமைகள் பற்றியும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் முகாமைத்துவ குழுவினரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குஜராத்தின் அபிவிருத்தி மாதிரி பற்றிய விளக்க நிகழ்வின்போது குஜராத் அரசாங்கத்தின் வலுச்சக்தி மற்றும் கனிய உற்பத்தி திணைக்களத்தின் பிரதம செயலாளர் Mamta Verma, கைத்தொழில் மற்றும் அகழ்வுத் திணைக்களத்தின் மேலதிக பிரதம செயலாளர் S.J. Haider, காந்தி நகரத்தின் the Leela ஹோட்டலின் பொது முகாமையாளர் Vikas Sood ஆகியோர் கலந்துகொண்டனர். உட்கட்டமைப்பு வசதிகள், தொழில் முயற்சி வசதி, வலுச்சக்தித் துறை, வெளிநாட்டு வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

## ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின்...

ஜாமிஆ நளீமிய்யா கலாபீட நிர்வாக சபையும் ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் நளீமிய்யா கலாபீட ஆளுநர் சபை உறுப்பினருமான மர்ஜான் பளீல் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

விசேட அதிதியாக நளீமிய்யா பரிபாலன சபைத் தலைவர் யாகூத் நளீம், கௌரவ அதிதியாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ.அகார் மொஹமட் (நளீமி) ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் நளீமிய்யாவின் ஐம்பதாண்டு நிறைவையொட்டிய நினைவு முத்திரை வெளியீடு, நளீமிய்யா உருவாகத்திற்கு மர்ஹூம் நளீம் ஹாஜியாருடன் இணைந்து உழைத்த ஸ்தாபகர்களை கௌரவிக்கும் ஸ்தாபகர் தினம், நளீமிய்யாவின் உருவாக்க வரலாற்று நூல் வெளியீடு மற்றும் நளீமிய்யா கலாபீடத்திற்கான 'SOLAR POWER PROJECT' திட்டமும் அதிதிகளினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

உலமாக்கள், புத்திஜீவிகள், கலாபீட விரிவுரையாளர்கள், சீனன் கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், அரசியல்வாதிகள், ராபிதாவின் பழைய மாணவர்கள் மற்றும் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## பல்கலை விரிவுரையாளர்களால்...

ஆரம்பிக்கப்பட்டன. குறிப்பாக அந்த வங்கிகள் மூலம் விவசாயத்துறை மற்றும் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் அனைத்து விவசாய நிறுவனங்களிலும் இலங்கை வங்கிக்கிளை இயங்கி வந்துள்ளது. அந்தந்த பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக கடன் வழங்கும் நடைமுறையை அந்த வங்கிகள் முன்னெடுத்தன. இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன அவ்வாறு வழங்கியுள்ள மூன்றாம் கட்ட கடனில் 602 பில்லியன் ரூபா கடன் பெற்றுள்ளவர்களால் மீள செலுத்தப்படாமல் உள்ளது. சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதற்கான வாய்ப்பு இருந்த போதும் அரச வங்கிகள் இரண்டும் பின்பற்றிய கொள்கை காரணமாக 602 பில்லியன் ரூபா நாட்டுக்கு இல்லாமற் போயுள்ளது. இதனை நோக்கும் போது அரச வங்கிகளின் நிதிக் கொள்கைகள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## HNDE டிப்ளோமா நிறைவு...

செந்தில் தொண்டமானுக்கும் திறைசேரிச் செயலாளருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் போது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு, HNDE டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கு நியமனம் வழங்குமாறு திறைசேரிச் செயலாளருக்கு செந்தில் தொண்டமான் பரிந்துரைத்துள்ளார்.

## சனத் நிஷாந்தவின் இடத்துக்கு...

அமைச்சராக பதவி வகித்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் மறைவுக்கு பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. அதன்போது வழமையான சபை நடவடிக்கைகளுக்கு முன்னர் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெற்றது. புதிய பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆவணத்திலும் கைச்சாத்திட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த, கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி அதிகாலை அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு ஜகத் பிரியங்கர நியமிக்கப்பட்டுள்ளார்.

## இன்றைய பலன்கள்

(09.02.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கல்களில் மிகுந்த கவனம் தேவை.

**ரிஷபம் :**
நீங்கள் செய்யும் காரியங்களுக்கு நண்பர்கள் உதவியாக இருப்பர் .முக்கிய வேலைகளில் கவனம் அவசியம்.

**மிதுனம்:**
சில வேலைகள் நினைத்தபடி முடிவடையாமல் போகலாம்.கவனமாக பணியாற்றினாலும் செயற்பாடுகளில் சில பிரச்சினைகள் தோன்றலாம்.

**கடகம்:**
செய்யும் காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைய முயற்சி செய்வீர்கள்.

**சிம்மம்:**
செயல்கள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். சில காரியங்களில் தளர்வான போக்கு காணப்படும்.

**கன்னி:**
செய்யும் காரியங்களில் அதிக கண்ணும் கருத்துமாக செயலாற்றுவீர்கள். பல செயல்கள் உங்கள் விருப்பம் போல் நடைபெற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:**
அதிக முயற்சியோடு செயல்பாடுகளில் ஈடுபட்டு முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். தளர்வுகளும் தடைகளும் முன்னே வந்தாலும் அவற்றை எதிர்த்து முயற்சியோடு முன்னேறுவீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் பலவற்றில் நல்ல பலன்கள் கிடைக்கும். சிலவற்றில் ஏற்படும் தளர்வுகளை தக்க பிரமுகர்களின் துணையோடு சரி செய்வீர்கள்.

**தனுசு:**
முயற்சியால் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். சிறு சிறு தடைகள் இருந்தாலும் பெரிய தொல்லை ஏற்படாது.

**மகரம்:**
செயல்கள் பலவற்றில் தீவிரம் முயற்சியோடு ஈடுபட்டாலும் சிலவற்றில் மட்டுமே பூரண வெற்றியை அடைய முடியும்.

**கும்பம்:**
முயற்சியோடு செய்யும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். செய்யும் காரியங்களில் எதிர்பாராத மாற்றம் ஏற்படலாம்.

**மீனம்:**
ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விலை உயர்ந்த பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்;...

தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2024 ஜனவரி 23ஆம் திகதி தனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்கள் மற்றும் 2024 ஜனவரி 24 ஆம் திகதி தனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதினெட்டு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "பயங்கரவாத எதிர்ப்பு" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் 06 மனுக்களின் பிரதிகள் தனக்கு கிடைத்திருப்பதாகவே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (08) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

## தமிழக மீனவர்கள் 19 பேர்...

இணைந்து நடத்திய விசேட சோதனையின் போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட 2 படகுகளுடன் மேற்படி 19 கடற்றொழிலாளர்களும் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், சட்ட நடவடிக்கைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தில் இவர்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

## தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு;...

மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் தொடர்பான நேர்முகத் தேர்வுகளை நாளை 10ஆம் திகதி சனிக்கிழமை கண்டி தாதியர் கல்லூரியில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) சாமிக்க எச்.கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தகவல்களை சுகாதார அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தை (https://www.health.gov.lk/) பார்வையிடுவதன் மூலமும் பெறலாமென்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## 100 மெகாவாட் தரை மவுண்ட்...

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையுடன் ரிவிதனவி (பிரைவேட்) லிமிடெட் (Rividhanavi (Pvt) Limited) நிறுவனம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் கடந்த 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மின்சார சபையால் டெண்டர் கோரி விளம்பரப்படுத்தப்பட்டது.

2023 இல் மதிப்பிடப்பட்டு வழங்கப்பட்டது.

ரிவிதனவி திட்டத்துக்காக 27.5 கி.மீ நீளமான டிரான்ஸ்மிஷன் லைனையும் நிர்மாணிக்கவுள்ளனர்.

## புலிகள் அமைப்பிலிருந்து வெளிவர...

தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், புலம்பெயர் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் இவ்வாறு என்னை அழைப்பது முற்றிலும் தவறு. விடுதலைப் புலிகள் இயக்கத்தை நான் தான் அழித்தேன், நான் தான் காட்டிக் கொடுத்தேன் என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். அக்காலப்பகுதியில் ஒருமுறை மாத்திரமே போர் நடக்கும் களமுனைக்கு சென்றிருந்தேன்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் மரணத்தின் போது அடையாளப்படுத்தவே என்னை அனுப்பியிருந்தனர். ஆனால் மக்களின் கருத்து மிகவும் தவறான கண்ணோட்டத்தை கொண்டுள்ளதென்றார்.

# ஜனாதிபதியின் சிறந்த வேலைத்திட்டம் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத்திட்டத்தின் கீழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் வரி மூலமான நிதியிலேயே குடிநீர் திட்டம் உள்ளிட்ட கிராமிய மக்களுக்கான பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு அரசாங்கம் பாரியளவு நிதியை ஒதுக்கி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு சர்வதேசமும் தமது வாழ்த்துக்களை தெரிவித்து வரும் நிலையில் சர்வதேச ரீதியில் எமது நாடு மீதான நம்பிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேசத்துடன் இணைந்து செயல்படாமல் எம் போன்ற நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது அசௌகரியமான விடயமாகும். நாட்டின் சுற்றுலாத்துறை தற்போது சிறந்த முன்னேற்றம் அடைந்து வருகிறது. கடந்த மாதத்தில் மாத்திரம் இரண்டு இலட்சம் சர்வதேச சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். போராட்ட காலத்தில் 25 சுற்றுலாப் பயணிகள் கூட நாட்டுக்கு வராத நிலையில் தற்போது சுற்றுலாத்துறை சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு முடிந்துள்ளது.

அந்த வகையில் ஒரு டொலர் கூட கையிருப்பில் இல்லாத இந்த நாட்டில் தற்போது 4.4 பில்லியன் டொலர்கள் கையிருப்பில் காணப்படுகிறது.

இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத்திட்டத்தின் பயனாகும்" என்றார்.

# கிராமங்கள் மட்டத்தில் முட்டை உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்

## சனசவுடன் இணைந்து அரசு முன்னெடுப்பு

கிராம மட்டத்தில் முட்டை உற்பத்தியை ஊக்குவிக்க விசேட வேலைத்திட்டம் சனசவுடன் இணைந்து அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுமென, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

முட்டை தட்டுப்பாட்டுக்கு தீர்வாக முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டமானது கிராமத்தின் 50 சதவீதமான முட்டை தேவையை பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டதாகவும், பிரதி சபாநாயகர் தெரிவித்தார். விவசாய அமைச்சும் கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் தெரிவு செய்யப்பட்ட 1,250 சனச சங்கங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இதேவேளை, கிராமத்தின் முட்டை தேவையை கிராமத்துக்குள்ளேயே பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் போது, நுகர்வோர் முட்டைகளை சலுகை விலையில் கொள்வனவு செய்ய முடியுமென, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களமானது, கிராமங்களிலுள்ள கோழிப் பண்ணையாளர்களுக்கு கோழிக் குஞ்சுகள் மற்றும் தேவையான வழிகாட்டலை வழங்குமென, கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார். இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்ட பின்னர் முட்டையொன்றை 35 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியுமெனவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் திறம்பட செயற்படுத்தப்பட்டால், முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை. 5,000 சனச கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முட்டை உற்பத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, சனச நிறுவுனர் பி.ஏ.கிரிவந்தெனிய தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 25 குடும்பங்களை தெரிவுசெய்ய திட்டமிட்டுள்ளதாகவும் இந்தக் குடும்பங்களுக்கு சனசவின் நிதி உதவி கிடைக்குமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

நிறுத்தப்பட்டிருந்த நாவல அங்கம்பிட்டிய

# பாலத்தின் நிர்மாணப் பணிகள் 06 மாதங்களில் நிறைவடையும்

## பட்ஜட்டில் 90 கோடி ரூபா ஒதுக்கீடு





இடைநடுவில் நிறுத்தப்பட்ட நாவல அங்கம்பிட்டிய பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆறு மாதங்களுக்குள் நிறைவடையுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை பிடகோட்டே வீதியையும் நாவல ராஜகிரியையும் இணைத்து நாவல ராஜகிரிய கால்வாய் ஊடாக நிர்மாணிக்கப்படும் நாவல அங்கம்பிட்டிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் 90 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று பாலத்தின் நிர்மாணப் பணிகளை பார்வையிட்டுள்ளது.

இப்பாலம் 700 மீட்டர் நீளமும் 10.4 மீட்டர் அகலமும் கொண்டது. இதன் மொத்த கட்டுமானச் செலவு 260 கோடி ரூபாய். போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபையால் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பொறுப்பை அரசு அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பு சட்டபூர்வ கூட்டுத்தாபனம் ஏற்றுள்ளது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நிர்மாணப் பணிகளை அவதானித்த பின்னர் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் கோட்டை பிரதேசத்தில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம், சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் தூண்களின் மீது பாலம் நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அந்த காலகட்டத்தில் நாடு எதிர்கொண்ட கொவிட்19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியால், இந்த கட்டுமானம் முற்றிலும் நிறுத்தப்பட்டது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் அவதானித்ததன் பின்னர் ஜனாதிபதியிடம் விஷேடமாக விடயத்தை தெரிவித்தேன். இத்திட்டத்தின் இறுதிக்கட்டப் பணிகளை நிறைவு செய்யாமை பாரிய குற்றமாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் நாடு என்ற வகையில், கடனை செலுத்தாத காரணத்தால் வெளிநாட்டு கடன் உதவி எதுவும் பெற முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம், நிதியமைச்சு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் இணைந்து செயற்படுத்திய கடனை திருப்பிச் செலுத்துவதற்கான உடன்படிக்கைகளை சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. அதன் பிறகு, நிறுத்தப்பட்ட அபிவிருத்தியை மீண்டும் தொடங்குவது சாத்தியமாகும்.

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணியை இந்த வருடத்திற்குள் பூர்த்தி செய்ய தொண்ணூறு கோடி ரூபா நிதி ஒதுக்க ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி, இந்த பாலத்தின் இறுதி கட்ட கட்டுமான பணியை தொடங்க முடிந்துள்ளது. இதன் நிர்மாணப் பணிகள் பாதிக்கு மேல் நிறைவடைந்துள்ளதுடன் இடைநிறுத்தப்பட்ட இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு கொண்டுவரப்படும். அதற்கு அனைவரின் தொடர் ஆதரவும் பங்களிப்பும் தேவை"என்றார்.


# புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# கிராமிய கலைகள் நிலையம்

## நடனம், இசை மற்றும் சித்திர கற்கைகளுக்காக புதிய மாணவர்கள் இணைப்பு - 2024

### ★ க.பொ.த. உயர் தரம் சித்தி பெற்றவர்களுக்கு

- லலித கலா தேசிய டிப்ளோமா நடனம் மற்றும் மேள வாத்திய கற்கை (NVQ Level 05) கற்கை காலம் 1 ½ ஆண்டு
- லலித கலா உயர் டிப்ளோமா நடனம் மற்றும் மேள வாத்திய கற்கை (NVQ Level 06) கற்கை காலம் 1 ½ ஆண்டு
- லலித கலா தேசிய டிப்ளோமா இசை (பாடல்) கற்கை (NVQ Level 05) கற்கை காலம் 1 ½ ஆண்டு





### ★ எந்த ஒரு கல்வி மட்டத்தைக் கொண்டவர்களுக்கும்

- நடனக் கலைஞர் சான்றிதழ் கற்கை (NVQ Level 04) கற்கை காலம் 1 ஆண்டு
- இசைக் கலைஞர் சான்றிதழ் கற்கை பாடல் (உத்தர பாரத சங்கீதம்) கற்கை (NVQ Level 04) கற்கை காலம் 1 ஆண்டு
- இசை கலைஞர் சான்றிதழ் கற்கை வாத்தியம் (வயலின்) உத்தர பாரத சங்கீதம் (NVQ Level 04) கற்கை காலம் 1 ஆண்டு
- சித்திர கலைஞர் சான்றிதழ் கற்கை (NVQ Level 04) கற்கை காலம் 1 ஆண்டு



### ★ நிபந்தனைகள்

- அனைத்து கற்கைகளும் முழு நேர கற்கைகளாகும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் 16 – 25 வயதுக்கு இடையே விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.
- அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நடைமுறை சோதனை ஒன்றுக்குப் பின் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு பரீட்சைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

### ★ விண்ணப்பங்களை அனுப்புவது

- தமது சுய விபரங்கள், கல்வித் தகைமைகள் மற்றும் விசேட தேர்ச்சிகள் தொடர்பிலான விபரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை கிழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுத் தபாலில் கிழுள்ள முகவரிக்கு அனுப்ப முடியும்.
- கூகுள் விண்ணப்பத்தை (GOOGLE FORM) பூர்த்தி செய்வதன் மூலமும் விண்ணப்பிக்க முடியும். கீழுள்ள WhatsApp இலக்கத்தின் மூலம் கூகுள் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
- விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2024.02.22 ஆகும். அன்றைய திகதிக்குப் பின் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கையின் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.



**கற்கை மற்றும் தங்குமிட வசதி இலவசம்**

**ரூபா 3000 மாதாந்த கற்றல் உதவி வழங்கப்படும்**

முகவரி: பணிப்பாளர், கிராமிய கலைகள் நிலையம், 45, புதிய பாராளுமன்ற வீதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.

விசாரணை: 0112786716 / 0112786745 WhatsApp: 0704316371 / 0714736843 / 0762680277

(நடனம், சித்திரம் மற்றும் சிற்பம்) (இசை)

Email : folkartcentersrilanka@gmail.com


ஆசிரியர் குழாம்

# பவள விழா காணும் அக்குறனை, குருகொடை ஆண்கள் முஸ்லிம் வித்தியாலயம் ஒரு பார்வை

கண்டி மாவட்டத்தில் கட்டுகஸ்தோட்டைக் கல்வி வலயத்தில் அக்குறனை கோட்டத்திற்கு உட்பட்ட குருகொடை ஆண்கள் முஸ்லிம் வித்தியாலயம் (Kurugoda Boys Muslim Vidyalaya ) அதன் 75 ஆம் ஆண்டு பூர்த்தி விழா பவள விழா ( Platinum Jubilee ) எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றது.

இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தில் அக்குறனை மாநகரத்தின் மத்தியில் ரம்யமான குருகொடை கிராமத்தில் 75 ஆண்டுகால கல்விப் பணியைப் பூர்த்தி செய்துவிட்டு, அதன் முதல் நூற்றாண்டு நோக்கிய கல்விப் பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் தருணம் இது.

இக்கலையகம் 1947.06. 16 இல் முதன் முதலில் 13 மாணவர்களுடன் தன் பயணத்தை ஆரம்பித்தது. 5.8 பேர்ச் கொண்ட தற்காலிக கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் முதல் ஆசிரியராகவும் அதிபராகவும் ஜனாப் U. Ahmad என்பவரும் முதல் மாணவனாக H.M.Fuwad என்பவரும் இருந்துள்ளனர். அக்காலத்தில் வீடு வீடாகச் சென்று மாணவர்களைக் கல்வி கற்பதற்காக அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக வரலாறு சொல்கின்றது.1951.10. 16 இல் 03 ஆசிரியர்கள் 115 மாணவர்களுடன் இப்பாடசாலையை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்காலிக கட்டிடத்தில் இயங்கிய பாடசாலை 1952.01.05 இல் ஜனாப் J.M.Noor Mohammed அவர்களின் வீட்டுக்கு மாற்றப்பட்டது. 1952 இல் புதிய கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1953.03.16 முதல் புதிய கட்டடத்தில் வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பாடசாலை ஆண்கள் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் போதிய ஆண் மாணவர்கள் அனுமதி பெறாததன் காரணமாக 1949. 01.12 இல் பெண் மாணவிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1955 இல் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 1957.05.01 இல் ஆண், பெண் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது.

அக்காலகட்டத்தில் மாணவர்கள் கல்வியில் மாத்திரமின்றி நாடகம், அரபு கீதம் மற்றும் ஏனைய இஸ்லாமிய நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றித்தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். 1965இல் இப்பாடசாலையில் முதன் முதலில் கண்காட்சி ஒன்று நடைபெற்றமை விஷேட அம்சமாகும்.

முதன்முதலாக கல்விச் சுற்றுலாவிற்காக 1967இல் கொழும்புக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். முதல் அதிபராகக் கடமை புரிந்த ஜனாப் U.Ahmad சுமார் 20 வருடங்களின் பின் 1968.07.24 இல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இதுவரை இப்பாடசாலையில் அதிபர்களாக கடமையாற்றியவர்களது விவரம் வருமாறு;

1. Mr. U.Ahamed 1947 - 1948
2. Mr.K.Kanapadip pillai 1948 - 1949
3. Mr.U.Ahamed 1949 - 1968
4. Mr. N.M.U.Ameer 1968 - 1970
5. Mr.I L.M.A.Cader 1970 - 1984
6. Mr.A.C.L.M.Thahir 1984 - 1989
7. Mr.M.H.M.Jameel 1989 - 1992
8. Mr.J.M.Zawahir 1992 - 2005
9. Mr.N.Shamsudeen 2005 - 2008
10. Mr.S.Ahamed Shafi 2008 - 2017
11. Mr.SM.Hamzy 2017 - 2024

1973.01.25 இல் இப்பாடசாலையின் 06 ஆம் தர மாணவர்கள் அக்குறனை அஸ்ஹர் மகா வித்தியாலத்தில் கற்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1979.02.12 ஒரு மாணவன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று 6ம் வகுப்பிற்கு கொழும்பு ரோயல் கல்லூரியில் இணைந்துகொண்டார். 1980 இல் நடைபெற்ற 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 03 மாணவர்களும் சித்தி அடைந்தனர். இது இப்பாடசாலைக்கும் அக்குறனைப் பிரதேசத்திற்கும் கிடைத்த ஒரு சாதனையாக கருதப்பட்டது.

1985ல் கொத்தனிப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் இப் பாடசாலையின் மாணவர்களும் பங்குபற்றி பல சாதனைகளை படைத்துள்ளமை வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் அதிகமான மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. 1999 இல் 18 மாணவர்கள் சித்தி அடைந்து சாதனை படைத்துள்ளனர். அதிலும் விஷேடமாக 2003 இல் ஒரு மாணவர் மாவட்ட ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த காலங்களில் அதிகமான மாணவர்களின் வருகை காரணமாகவும் புதிய கட்டட வசதி காரணமாகவும் க.பொ.த சாதாரண தர பரீட்சை வகுப்புகளும் ஆரம்பிக்கப் பட்டன.

அத்துடன் வட்டாரப் போட்டிகளுக்காக விளையாட்டு, மீலாத் விழா, தமிழ் தின விழா போன்ற கலாசார விழாக்களிலும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றி வெற்றி ஈட்டி சாதனை படைத்துள்ளனர்.

2007ம் ஆண்டு சாதாரண தரப்பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய போதிலும் 2008 ஆம் ஆண்டிலேயே உத்தியோகபூர்வமாக க.பொ.த சா/ த. பரீட்சை இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

**கல்வி அடைவுகள்....**

பாடசாலை வரலாற்றின் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கப் பரீட்சைகளில் சிறந்த அடைவுகளை ஈட்டி வந்தது. எனினும் பல்வேறு காரணங்களினால் அதற்கு பிற்பட்ட காலங்களில் பரீட்சை பெறுபேறுகளில் ஒரு தளர்வு நிலை ஏற்பட்டிருந்தது. என்றாலும் கடந்த ஆறேழு வருடங்களாக பாடசாலை நிர்வாகத்தின் திட்டமிட்ட முயற்சிகளின் விளைவாக அல்லாஹ்வின் அருளால் மீண்டும் க.பொ.த. (சா/த) பரீட்சை, 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் படிப்படியான முன்னேற்றத்தை அடையக் கூடியதாக இருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

**ஏனைய இணைப்பாடச் செயற்பாடுகள்......**

மாணவர்களது திறமைகள் பாடப் புத்தகங்களோடு மாத்திரம் வரையறுக்கப்படாமல் அவர்களது உள்ளார்ந்த பல்வேறு ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றைப் பட்டை தீட்டி மெருகூட்டி விடுவதன் மூலம் அவர்களை பன்முகத்தேர்ச்சி கொண்டவர்களாக வேலை உலகுக்குப் பொருத்த மானவர்களாக மாற்றுவதற்கான திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. பாடசாலை வரலாற்றிலேயே முதன் முதலாக Cadet Band வாத்தியக் குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இராணுவ மற்றும் பொலிஸ் Cadet Band பிரிவினரின் நேரடியான பயிற்றுவித்தல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன், விளையாட்டுத்துறை, மாணவ மாணவிகளுக்கான கராட்டே பயிற்சிகள், கலைத்துறை, வாசிப்பு விருத்தி வேலைத் திட்டங்கள், கணினி அறிவு, மீடியா அலகு, விஞ்ஞான மற்றும் மனைப் பொருளியல் விருத்தி வேலைத் திட்டங்கள், மாணவர் தலைமைத்துவ மற்றும் ஒழுக்க மேம்பாட்டு வேலைத் திட்டங்கள்...... என மாணவர்களது ஆற்றல்களை விருத்தி செய்யத் தக்க வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.


பாடசாலை அதிபர்
Ash sheikh S.M.Hamzy
Naleemi, B.A., P.G.D.E., Diploma in Counseling NISD, SLPS 1

21ஆம் நூற்றாண்டின் மாணவர் தேர்ச்சி மைய திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பாதையில் புதிய கோணத்தில் எமது பாடசாலை செல்லத் தடம் பதித்திருப்பது பாடசாலை வரலாற்றின் ஒரு முக்கியமான திருப்பமாகும். இதனால் கல்வி அறிவும் ஒழுக்கப் பண்பாடுகளும் திறன் விருத்திகளும் ஒருங்கே அமையப்பெற்ற நட்பிரஜைகளை நாட்டிற்கு வழங்க முடியுமாக இருக்கின்றது. பாடசாலையின் பவள விழாவை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு நிகழ்வுகளில் எமது மாணவர்கள் இந்த விடயத்தை மெய்ப்பித்துக் காட்டி இருக்கின்றார்கள்.

**பௌதீக வள முன்னேற்றங்கள்....**

பாடசாலை தன் உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு பௌதிக வளத் தேவைகள் இன்றியமையாதவை. அந்த வகையில் வரையறுக்கப்பட்ட அரச வள உதவிகளை மாத்திரம் எதிர்பார்த்திருக்காமல் எமது பாடசாலைச் சமூகம் பல்வேறு வழிகளில் பாடசாலைக்கான பௌதீக வளத் தேவைகளை பூர்த்தி செய்வதில் முன் நின்று கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றது. நலன் விரும்பிகளதும் தனவந்தர்களதும் அரசியல்வாதிகளதும் அரச சார் அரச சார்பற்ற நிறுவனங்களதும் ஒத்துழைப்புக்களைப் பெற்று பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் பௌதிக வள விருத்தி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. SDEC, EDF, OBA, OGA, பெற்றோர்கள், முன்னை நாள் மற்றும் தற்போதைய அரசியல்வாதிகள், குருகொடை முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளி நிர்வாக சபையினர், பிரதேச சபை உறுப்பினர்கள், AWAUK, AZDA, குருகொடை நலன்புரிச்சங்கம் போன்ற அதிகமான நிறுவனங்களும் தனிப்பட்ட நபர்களும் பாடசாலை அபிவிருத்தியில் ஓர் அணியாக நின்று ஒத்துழைப்புக்களை வழங்க ஆரம்பித்திருப்பது எமது பாடசாலை மாணவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு கட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது.

இதுவரை இப்பாடசாலையில் 4000 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்று வெளியேறி இருக்கின்றார்கள். இவர்கள் இன்று உள்ளூரிலும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு துறைகளில் தொழிலாற்றிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் நாட்டிற்கும் தேசத்திற்கும் தங்களால் முடிந்த அபிவிருத்திப் பணிகளை செய்து கொண்டிருக்கின்றார்கள். வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும் ஆசிரியர்களாகவும் கணினி மற்றும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் கணக்காளர்களாகவும் பல்வேறு அரசாங்க மற்றும் தனியார் துறைகளிலும் தொழில் வல்லுநர்களாக பணியாற்றி வருகிறார்கள்.

இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலான வியாபார, வர்த்தகத் துறைகள் சார்ந்த தொழில் முயற்சிகளில் பழைய மாணவர்களில் கணிசமான தொகையினர் ஈடுபாடு காட்டி தொழிலதிபர்களாக மிளிர்கின்றார்கள்.

பாடசாலையின் பழைய மாணவ மாணவிகள் தமது கல்விக் கண்களைத் திறந்து அறிவூட்டி வளர்த்து ஆளாக்கிய தம் தாய்ப் பாடசாலையின் அபிவிருத்தியிலும் முக்கிய பங்காற்றி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பாடசாலையின் பவள விழா தொடர்பான நிகழ்வுகள்....**

75ஆம் ஆண்டு நிறைவு பவள விழாவை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலையில் திட்டமிட்டு நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வுகளின் நோக்கங்களாக பின்வரும் விடயங்களை கூறலாம் :

1. பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களை முழுமையாக பாடசாலையோடு இணைத்துக் கொள்ளுதல்.

2. பழைய மாணவ மாணவிகள் தாம் பயின்ற பாடசாலையோடு மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.

3. பாடசாலையின் அபிவிருத்தியில் பெற்றோர்கள், பழைய மாணவ மாணவிகள், நலன் விரும்பிகள் மற்றும் தனவந்தர்கள் அனைவரதும் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளல்.

4. நவீன நூற்றாண்டின் கல்வி அடைவுகளை எட்டக்கூடிய வகையில் மாணவர்கள் தம் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

5. பாடசாலை என்னுடையது என்ற எண்ணக்கருவை அனைவர் மத்தியிலும் ஏற்படுத்துதல்.

6. பாடசாலையின் உட் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

07. நீண்ட காலக் குறைபாடாக நிலவி வரும் வகுப்பறைப் பற்றாக்குறையை தீர்க்கும் வண்ணம் பாடசாலைக்கான மூன்று மாடி கட்டடம் ஒன்றை அமைத்தல்.

இந்த எல்லா நோக்கங்களையும் அடையக்கூடிய சிறந்த வாய்ப்பாக பாடசாலையில் பவள விழா அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


பாடசாலை அபிவிருத்தி சங்கம்

**பவள விழாவை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட விடயங்கள் :**

01. பழைய மாணவர் சங்கம் OBA, பழைய மாணவிகள் OGA சங்கம் இரண்டும் தனித்தனியாக ஸ்தாபிக்கப்பட்டமை.

**02. விளையாட்டுப் போட்டிகள் :**

ஆரம்ப மற்றும் இடைநிலை மாணவர்களுக்காக வெவ்வேறு விளையாட்டுப் போட்டிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. பாடசாலைக்கெனத் தனியான விளையாட்டு மைதானம் இல்லாத போதும் கூட குருகொடை ஜும்ஆப் பள்ளிவாசலின் மைதானத்தையும் அக்குறனை அஸ்ஹர் தேசிய பாடசாலை மைதானத்தையும் ஊரின் மத்தியில் இருக்கின்ற போக்குவரத்து வீதியையும் பயன்படுத்தி இந்த விளையாட்டுப் போட்டிகள் வெற்றி கரமாக நடத்தப்பட்டன.

**03. மாணவர் சந்தை :**

மாணவர்களது சமூகத் தொடர்பாடலை விருத்தி செய்யக்கூடிய வகையில் வித்தியாசமான அமைப்பில் மாணவர் சந்தை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

**04. மாணவர் கல்விக் கண்காட்சி :**

மாணவர்களின் புத்தாக்க சிந்தனையை ஊக்குவிக்க கூடிய கண்காட்சி பிரமாண்டமாக நடத்தப்பட்டது. மாணவர்கள் தம் அபார திறமைகளை வெளிக்காட்டி ஊர் மக்கள், பிரமுகர்கள், கல்வித் திணைக்கள மற்றும் அரசு அதிகாரிகளது பாராட்டுக்களை பெற்றுக் கொண்டார்கள்.

**05. கலை விழா:**

மாணவர்கள் மத்தியில் மறைந்து கிடக்கும் கலைத்துறை சார்ந்த ஆற்றல்களுக்கு வடிகால் அமைத்துக் கொடுக்கும் வகையில் 'சங்கமம்' என்ற பெயரில் மாபெரும் கலை நிகழ்வுகள் நடந்தேறின. தாம் கலைத்துறையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்ற பேருண்மையை இப்பிரதேச மக்களுக்கு நிரூபித்துக் காட்டினார்கள்.

**06. நினைவு மலர் வெளியீடு:**

பல்வேறு பிரபலங்களதும் ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கங்களை சுமந்த 'குருகொடைத் தென்றல்' என்ற பெயரில் நினைவு மலர் வெளியிடப்பட்டுள்ளது.

பாடசாலையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த 75 ஆண்டு நிறைவு பவள விழா நிகழ்வுகளை திட்டமிட்டு அமுல்படுத்திக் கொண்டிருப்பது

அதிபர், ஆசிரியர் குழாம், SDEC, OBA, OGA மற்றும் குருகொடை முஹியதீன் ஜும்மா பள்ளி நிர்வாக சபை ஆகிய தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்த 'பவள விழா குழு Platinum Jubilee Committee' யின் மூலமே இப்பவள விழா சம்பந்தமான சகல வேலைத் திட்டங்களும் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

"அறிவைத் தேடுவது ஒவ்வொருவரினதும் பர்ழான கடமை" என்ற இஸ்லாத்தின் தாரக மந்திரத்திற்கு ஏற்ப எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களை இறைவனுக்குக் கட்டுப்பட்ட நல்லடியார்களாகவும் சமூகத்துக்கும் நாட்டிற்கும் விசுவாசமான நட்பிரஜைகளாகவும் வடிவமைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு எமது பாடசாலை விவகாரங்கள் அனைத்திலும் பங்கேற்ற அனைவருக்கும் பாடசாலை சார்ந்த மனமார்ந்த நன்றிகள். அனைவரது நல்ல எண்ணங்களுக்கும் அல்லாஹுத்த ஆலாவின் அருட்கொடைகளும் மறுமையில் சிறந்த கூலிகளும் கிடைக்க அருள் புரிவானாக.


பவள விழா குழுவினர்









தயாரிப்பு : எம்.சதூர்தீன் (J.P)
மாத்தளை சுழற்சி நிருபர்

# கித்துள் செய்கையாளர்களுக்கு தொழிற் தகைமை சான்றிதழ்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கித்துள் செய்கையாளர்களுக்கு முறையான பயிற்சியொன்றின் பின்னர் தொழிற் சான்றிதழ் வழங்குவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இரண்டு வார முறையான பயிற்சியின் பின்னர் இச்சான்றிதழை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கித்துள் அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

தேசிய தொழிற்பயிற்சி நிலையம் இவர்களுக்கு தேசிய தொழில் தகுதி 03 (NVQ3) நிலை சான்றிதழை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.



சான்றிதழ் திட்டத்தில் திடீர் நோய்கள், பாம்புக்கடி, மரத்திலிருந்து விழுதல் போன்ற ஆபத்துகளிலிருந்து எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சான்றிதழ் தென்னை, பனை போன்ற தொழில்துறைகளில் ஈடுபடும் மக்களின் நலனுக்காகவும் மேற்கொள்ளப்படுமெனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் யோசனைக்கமைய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலைச்சாரல்





கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் சிபாரிசுக்கமைய மடூல்சீமை மகதோவ தோட்ட அதிகாரி கொரஹாகொட, ஹாலிஎல செரண்டிப் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் திரு. வீ. நித்தியானந்தன், பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயத்தின் உப அதிபர் திரு. ஏ. சிவபிரகாஸ், பிட்டமாறுவ ரோபேரி தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி கலைவாணி, எல்ல பிரதேச சபையின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ். ராஜேந்திரன், பண்டாரவளை பெயா பெஸ்ட காப்புறுதியின் உதவி முகாமையாளர் திரு. எஸ். விஜயகாந்தன், பதுளை சிவா ஜுவலரியின் உரிமையாளர் திரு. எஸ்.சிவராஜ், ஹாலிஎலையைச் சேர்ந்த திரு. எம்.டி.ஏ.எஸ். பிரியங்கா முனசிங்க ஆகியோருக்கு சமாதான நீதவானுக்கான நியமனக் கடிதங்களை பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் கையளித்தார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## பஸ்ஸில் தவறவிட்ட இரத்தினக்கல் பொதியை திருடிய சாரதி கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

மாணிக்கக்கல் வியாபாரி ஒருவர் பஸ்ஸில் பயணிக்கும் போது தவறுதலாக விட்டு சென்ற இரத்தினக்கல் பொதியொன்றை திருடிய பஸ் சாரதி பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். இரத்தினக்கல் பொதியை தனியார் பஸ் வண்டியில் தவறுதலாக விட்டுச் சென்ற வியாபாரி பஸ் ஊழியர்களிடம் இவ்விடயமாக விசாரித்த போதிலும் அவர்கள் அதனை வழங்க மறுத்ததால் உரிமையாளர் இவ்விடயம் தொடர்பில் அவிசாவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இரத்தினக்கற்களின் பெறுமதி இரண்டு இலட்சத்து 50,000 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர். 42 வயதான லக்ஷகந்த பகுதியைச் சேர்ந்த நபரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சர்வதேச தொழில்வாய்ப்புக்கள் இலவச வழிகாட்டல் செயலமர்வு

ஹற்றன் விசேட நிருபர்

மலையக இளைஞர்கள், யுவதிகள் உட்பட நாட்டு மக்கள் அனைவருமே பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் தொழில் ரீதியான அழுத்தங்களும் தொழிலிழக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன.

இதனை கருத்திற் கொண்டு இலவச தொழில் வழிகாட்டல் செயலமர்வொன்று நாளை 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஹற்றன் குடாகம பகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அழகுக்கலை, சுற்றுலாத்துறை வழிகாட்டல், சுற்றுலாத்துறை தொழிநுட்பம், உட்பட பல சர்வதேச ரீதியிலான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளும் வகையில் வழிகாட்டல் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வழிகாட்டல்களை தொடர்ந்து கற்கை நெறியினை பூர்த்தி செய்பவர்களுக்கு NVQ 3 சான்றிதழ்களும் பெற்றுக் கொடுக்கப்படும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தொடர்புகளுக்கு பேராசியர் ஏ.எஸ் சந்திரபோஸ், 0716643669, 0740090394 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## தே.த.ம.முன்னணியின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடல்

(தலவாக்கலை குறூப் நிருபர்)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடலொன்று தலவாக்கலை விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும் இதன்போது பாமஸ்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனரமைப்பு பணிகளுக்காக காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தேசிய தமிழ் மக்கள் முன்னணியின் தலைவர் கமலானந்தன், அதன் பொருளாளர் ஆமஸ்ட்ரோங், அதன் தேசிய அமைப்பாளர் ராஜ்குமார் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



நவீன வசதிகளுடன் கூடிய உணவுப் பொருட்களை தயாரிப்பதற்கு தேவையான இயந்திரம் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் புதிய தொழிற்சாலையொன்று தம்புள்ளை எம்புல்அம்பே பகுதியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தொழிற்சாலையை வைபவரீதியாக திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

(படம் :மாத்தளை சுழற்சி நிருபர்)







கண்டி மகியாவையில் தைப்பொங்கலையொட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் விளையாட்டு போட்டியில் வெற்றிப்பெற்ற வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களும், பரிசுகளும் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

( படம் : கண்டி மு . தீபன் ) கண்டி மகியாவையில்

## மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி

நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறி வகைகளின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் நுவரெலியாவில் நிலவி வந்த மரக்கறி தட்டுப்பாடு நீங்கிவருகின்றது.

அதேநேரத்தில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து வெளிமாவட்ட பொது சந்தைகளுக்கு கொண்டுசெல்லப்படும் மரக்கறிகளின் அளவும் கடந்த இரண்டு நாட்களாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய காரியாலய முகாமையாளர் ஆர்.எம். பண்டார தெரிவித்தார். அந்தவகையில் நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய காரியாலயம் நேற்று வெளியிட்டுள்ள மரக்கறிகளின் மொத்த விற்பனை விலை அறிவிக்கப்பட்டுள்ளது.



மேலும் நுவரெலிய பொருளாதார மத்திய நிலைய காரியாலயம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ள மரக்கறி வகைகளின் விலைக்கு அப்பால் வெளிமாவட்ட சந்தைகளுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாக வெளி மாவட்ட வர்த்தகர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

(ஆ.ரமேஷ்)

## கண்டியில் மகாத்மா காந்தி நினைவு தினம்

(அக்குறணை குறூப் நிருபர்)

மலையக கலை கலாசார சங்கம் (இரத்தினதீபம் அமைப்பு) ஏற்பாட்டில் மகாத்மா காந்தி நினைவு தினம் கண்டி செல்லதுரை நினைவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கண்டி டி.எஸ். சேனாநாயக்கா வீதியில் அமைந்துள்ள அமரர் செல்லத்துரை நினைவு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இவ்வைபவத்தில் அறிஞர் சித்திலெவ்வை மற்றும் இந்தியாவின் புகழ்பெற்ற சினிமாப் பாடகி லதா மங்கெஸ்கார் ஆகியோரின் நினைவாஞ்சலியும் இடம் பெறவுள்ளது. இவ்வைபவத்தில் பல்வேறு கலைஞர்கள்.சமூக சேவையாளர்கள்,அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் (இரத்தினதீபம் அமைப்பு) எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் இவ்வைபவம் இடம்பெறுமென அதன் ஏற்பாட்டாளர் ராஜா ஜென்கின்ஸ் தெரிவித்தார். கலைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்நிகழ்வுக்கு அழைக்கப்படுகின்றனர்.



இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாத்தளை ரம்ய லங்கா சமூக சேவை அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் மாத்தளை ரயில்வே நிலையத்திலுள்ள ரயில் வண்டிகளின் இன்ஜின் உட்பட புகையிரத பெட்டிகள் அனைத்தும் சிரமதானம் மூலம் சுத்தம் செய்யப்படுவதையும் கலந்து கொண்ட மேற்படி அமைப்பின் உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

## வடக்கின் உதயம்

## இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வு கோரி வட.ஆளுநரை சந்தித்த சாவற்காட்டு மீனவர்கள்

(பருத்தித்துறை விசேட நிருபர்)

தமது இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வு கோரி யாழ்ப்பாணம் சாவற்காட்டு மீனவர்கள் வடக்கு மாகாண ஆளுநரை நேற்றைய தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பின் போது, கடற்றொழில் அமைச்சரிடம் கலந்துரையாடி சரியான தீர்வை பெற்றுத்தருவதாக ஆளுநர் தமக்கு உறுதியளித்துள்ளதாக மீனவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

தமது இறங்குதுறை பிரச்சினைக்கு தீர்வு கோரி சாவல்கட்டு மீனவர்கள் கடந்த 06ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அன்றைய தினம் ஆளுநர் யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தினால் சந்திக்க முடியாமையால் திரும்பிச் சென்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் இச்சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழை வந்தடைந்த தென்னிந்திய தொலைக்காட்சி பிரபலங்கள்





(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்றையதினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெறவுள்ள ஹரிகரனின் இசை நிகழ்வில் பங்கேற்பதற்காக தென்னிந்திய பிரபலங்கள் குழுவொன்று நேற்றைய தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக, நடிகர் சிவா, நடன இயக்குனர் சாண்டி மாஸ்டர், பாடகி சுவேதா மேனன், நகைச்சுவை நடிகர் ரெடின், விஜய் தொலைக்காட்சி பிரபலங்களான, பாலா, DD என அழைக்கப்படும் திவ்யதர்ஷினி, மைனா உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். அவர்களை வரவேற்க பலரும் விமான நிலையத்தில் கூடியிருந்து மிகப் பெரிய வரவேற்பை அளித்தனர்.



## வீதியில் சென்ற இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்னாலை வேம்படிப் பகுதியில் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவரை பட்டா வாகனத்தால் மோதி அவரை கீழே வீழ்த்தி சரமாரியாக வாள் வெட்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை(07) நள்ளிரவு 12.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் படுகாயங்களுக்குள்ளான இளைஞன் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் குடவத்தை, துன்னாலை தெற்கைச் சேர்ந்த தவராசா தனுசன் (வயது 21) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

உடலில் பல இடங்களில் வெட்டுக்காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவர் மாற்றப்பட்டுள்ளார்.

இவருடன் மோட்டார் சைக்கிள் சென்ற மற்றுமொருவர் சிறிய காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த வருடம் அப்பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்துக்கு பழிவாங்கும் முகமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## யாழில் டெங்கு பரவும் சூழல் 07 பேருக்கு தண்டப்பணம் விதிப்பு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த 07 குடியிருப்பாளர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்து வரும் நிலையில் டெங்கு ஒழிப்பு பணிகளும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கொக்குவில் பகுதியில் பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது டெங்கு நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்த 07 பேருக்கு எதிராக யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு முன்தினம் புதன் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது , 7 பேரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், அவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01.




02.




இச்சமன்பாட்டினை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




03. (சிவப்பு முக்கோணம்) அடையாளம் குறிப்பது
i. பெருக்கல் ii. கூட்டல் iii. கழித்தல்

04. (பச்சை நட்சத்திரம்) அடையாளம் குறிப்பது,
i. பெருக்கல் ii. கூட்டல் iii. கழித்தல்

05. (நீல நீள்வட்டம்) அடையாளம் குறிப்பது,
i. பெருக்கல் ii. கூட்டல் iii. வகுத்தல்

06.




i. 16 ii. 18 iii. 20

07.




i. 5 ii. 7 iii. 8

08. ஒரு மிருகக்காட்சிச் சாலையிலிருந்து குரங்குகள் சிலவும் மயில்கள் சிலவும் தப்பிச் சென்றன. தப்பிச் சென்ற பிராணிகளின் தலைகளின் எண்ணிக்கை 7, கால்களின் எண்ணிக்கை 20 எனில் தப்பிச் சென்ற குரங்குகளின் எண்ணிக்கை யாது?
i. 3 ii. 4 iii. 5

09. ஒருவரிடம் கார், மோட்டார் வண்டி என்பன இருந்தன. அவற்றின் மொத்த எண்ணிக்கை 15 அவற்றின் சில்லுகளின் எண்ணிக்கை 42 எனில், கார்களின் எண்ணிக்கை யாது?
i. 9 ii. 7 iii. 6

10. ஒரு தோட்டத்தில் நடுகை செய்யப்பட்ட தக்காளி, வெண்டி மற்றும் மிளகாய்க் கன்றுகளில் மிளகாய்க் கன்றுகள் 3/7 பங்காகும். மிளகாய்க் கன்றுகளின் எண்ணிக்கை 45 எனில் அங்கு நடுகை செய்யப்பட்ட மொத்த கன்றுகளின் எண்ணிக்கை யாது?
i. 48 ii. 60 iii. 105

11. ஒரு கடையிலிருந்த அரிசியில் 1/3 பங்கு விற்றுத் தீர்ந்தது. தற்போது எஞ்சியிருக்கும் அரிசியின் நிறை 36kg எனில் விற்றுத்தீர்ந்த அரிசியின் நிறை யாது?
i. 54 kg ii. 18 kg iii. 10 kg

12. ஒரு மைதானத்தில் மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய கொடிகள் கட்டப்பட்டன. கட்டப்பட்ட கொடிகளின் மொத்த எண்ணிக்கை 100 ஆகும். மஞ்சள் நிறக் கொடிகளின் எண்ணிக்கை 25, பச்சை நிறக் கொடிகள், மொத்தக் கொடிகளின் எண்ணிக்கையில் 2/5 பங்கு. எனவே அங்கு நடப்பட்ட சிவப்பு நிறக் கொடிகளின் எண்ணிக்கை யாது?
i. 40 ii. 35 iii. 60

13. கீழ்வரும் ஆண்டுகளில் எது லீப் ஆண்டாக அமையும்
i. 1996 ii. 1998 iii. 2018

14. ஒரு ஆண்டின் ஜனவரி மாதம் செவ்வாய்க்கிழமையில் பிறந்ததெனில் அம்மாதத்தின் 31ஆம் திகதி என்ன கிழமையில் முடிவடையும்?
i. புதன் ii. செவ்வாய் iii. வியாழன்

15. குமரன் தன் நண்பனுக்கு ஒரு இலக்கத்தைக் காட்டி, அவ்விலக்கத்தை 3 ஆல் பெருக்கி வரும் விடையுடன் 5ஐக் கூட்டி வரும் விடையை 5 ஆல் பிரிக்க 4 விடையாகக் கிடைக்கும் என்றான். எனவே குமரன் நண்பனுக்குக் காட்டிய இலக்கம்,
i. 5 ii. 3 iii. 4

16. 8 நண்பர்கள் தமக்குள் வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக் கொண்டனரெனில் ஒருவருக்குக் கிடைக்கும் வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கை யாது?
i. 56 ii. 7 iii. 49

17. ஒரு நகரில் 7 கோயில்கள் இருந்தன. ஒரு கோயிலில் திருவிழா நடைபெறும் போது ஏனைய கோயில்களிலிருந்து அக்கோயிலுக்கு பூத்தட்டு கொண்டு செல்வது வழமை. அவ்வாறெனில் ஓராண்டில் 7 கோயில்களுக்கிடையிலும் பரிமாறப்படும் பூத்தட்டுக்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 42 iii. 49

18. சலீம் நஸ்ரியை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். கிரு குணாவை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். நஸ்ரி கிருவை விட அதிக மாபிள்கள் வைத்திருந்தான். இவர்கள் நால்வரும் வைத்திருக்கும் மாபிள்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் அமையும் சரியான ஒழுங்கு,
i. சலீம், நஸ்ரி, கிரு, குணா ii. குணா, கிரு, நஸ்ரி, சலீம்
iii. நஸ்ரி, சலீம், கிரு, குணா

19.




20. பெருமை, அரிய, கண்மை, முறையே CFR, GHA, KSR எனில் கருமை,
i. KHR ii. KFR iii. RFK

21. ரூபா. 9628.40 விலையுள்ள ஒரு பொருளின் மீது அதன் விலை △▽○□.▯☆ எனக் குறிக்கப்பட்டுள்ளது. ▭□▽◖.▯☆ எனக் குறிக்கப்பட்டுள்ள பொருளின் விலையாக இருக்கக்கூடியது?
i. 16861.40 ii. 5863.40 iii. 5893.40

22. ஒரு குழிக்குள் 3 வெள்ளை முயல்களும் 2 கறுப்பு முயல்களும் 4 சாம்பல் முயல்களும் பதுங்கியிருந்தன. அவை குழியை விட்டு ஒவ்வொன்றாக வெளியேறும் போது வெறியேறும் முயல் கட்டாயம் ஒரு கறுப்பு முயலாக இருக்க எத்தனை முயல்கள் குழியிலிருந்து வெளியேற வேண்டும்?
i. 8 முயல்கள் ii. 7 முயல்கள் iii. 2 முயல்கள்

23.




இதற்கமைய ○□△○ இதன் விடை யாது?
i. 3137
ii. 3713
iii. 3173

24. 1, 2, 3, 4, 5 என்ற இலங்கங்களை முறையே E, D, C, F, S என்றவாறு கருதப்பட்டுள்ளது. அதற்கமைய,

C E D
D C E
..............

i. C, S, F
ii. S, F, C
iii. F, C, S

25.




i. 2
ii. 4
iii. 5

26. வாகனமொன்று ஒரு லீற்றர் பெற்றோலில் 10km தூரம் பயணஞ்செய்யும். அவ்வாகனம் 10 லீற்றர் பெற்றோலை நிரப்பி 60 km பயணம் செய்து பின் எஞ்சியுள்ள பெற்றோலில் அது மேலும் எத்தனை கிலோமீற்றர் தூரம் பயணம் செய்ய முடியும்?
i. 30 km ii. 40 km iii. 60 km

27. கீழே தரப்பட்டுள்ள விபரத்தைக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுங்கள்.
அப்பா மாலையில் வீடு திரும்பும் போது எப்போதும் எனக்கு இனிப்பு உணவுகள் வாங்கி வருவார். அவை பற்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் என அவர் அறியாமல் இல்லை. அன்றைய தினம் வழமை போல் கடைக்குச் சென்றாலும் ஒன்றுமே வாங்கி வரவில்லை. இதற்கான காரணம்
i. மறந்திருப்பார் ii. அவரிடம் கையில் பணம் இல்லாமை
iii. பற்களுக்கு இனிப்பு உணவுகள் தீங்கு விளைவிக்கும் என கடைக்காரர் கூறியமையால்

28. நித்திரையால் அழுத தம்பிக்கு நன்றாக பாலூட்டிய அம்மா, அவனை நித்திரை கொள்ளச் செய்தார். வழமையாக நன்கு உறங்கும் தம்பி இன்று இடையில் எழுந்து தொடர்ச்சியாக அழுதார். அதற்கான காரணம்
i. தம்பிக்கு உடல் சுகவீனம் ஏற்பட்டதால் ii. தம்பிக்கு பசி தீராததால்
iii. தம்பிக்கு நித்திரை வராதமையால்

29. என்னிடம் மூன்று வகையான 6 நாணயங்கள் உள்ளன. அதன் பெறுமதி ரூ. 7.00 ஆகும். எனின் என்னிடமுள்ள நாணயங்களின் வகைகளின் எண்ணிக்கை யாது?
i. 50 சதம் நாணயங்கள் 4, ஒரு ரூபாய் நாணயங்கள் 2, இரண்டு ரூபாய் நாணயங்கள் 2
ii. 50 சதம் நாணயங்கள் 2, ஒரு ரூபாய் நாணயங்கள் 2, இரண்டு ரூபாய் நாணயங்கள் 2
iii. 50 சதம் நாணயம் 1, ஒரு ரூபாய் நாணயங்கள் 3, இரண்டு ரூபாய் நாணயங்கள் 2

30. உருவில் காட்டப்பட்டுள்ள கனவுருவை பூரணப்படுத்துவதற்கு இன்னும் தேவையான சதுரமுகிகளின் எண்ணிக்கை?
i. 20 ii. 17 iii. 21



(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

31. வீட்டிற்கு செல்லும் வீதியின் இருபுறமும் தூண்கள் அமைப்பதற்கு தீர்மானித்து அதன் ஒரு புறத்தின் 5 மீற்றர் இடைவெளிக்கு ஒரு தூண் வீதம் 10 தூண்களை அமைத்து மறுபுறமும் அதற்கு சமமான எண்ணிக்கையில் தூண்கள் அமைக்கப்பட்டதாயின் வீதியின் நீளம் யாது?
i. 90 m ii. 50 m iii. 45m



32. இத்திண்ம உருக்கள் பற்றிய சரியான கூற்று எது?
i. முகங்களினதும் விளிம்புகளினதும் எண்ணிக்கை 28 ஆகும்.
ii. உச்சிகளினதும் முகங்களினதும் எண்ணிக்கை 22 ஆகும்.
iii. விளிம்புகளினதும் உச்சிகளினதும் எண்ணிக்கை 25 ஆகும்.

33. இவ் எண் வலையில் சிறிய சதுரம் ஒன்றின் ஒரு பக்கத்தின் நீளம் 5 cm ஆகும்.
A யிலிருந்து B வரை பயணஞ் செய்வதற்கான மிக குறைந்த தூரம் யாது?
i. 25cm ii. 30cm iii. 20cm




34. 20 cm நீளமான கோலிலிருந்து 4 சம பகுதிகள் வெட்டி எடுக்கப்பட்டால் ஒரு பகுதியின் நீளம் யாது?
i. 4cm ii. 5 cm iii. 6 cm

35. இவ்வுருவிலுள்ள சக்கரத்தை அம்புக்குறி காட்டும் பக்கமாக சுழற்றும் போது கணிதம் எனும் சொல் ஆக்கப்படுவதற்கு தொடப்பட வேண்டிய சரியான எண்களை உள்ளடக்கி விடையைத் தெரிவு செய்யுங்கள்




i. 1458 ii. 2358 iii. 1682

36. 1ஆம் உருவில் நிழற்றப்பட்ட கட்டங்களை மட்டும் 2ஆவது உருவில் ஒட்டினால் கிடைக்கும் கட்டங்களின் எண்ணிக்கை யாது?
i. 12
ii. 18
iii. 14




37. 300 இலிருந்து 310 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
i. 2 ii. 12 iii. 11

38. சிறுவன் ஒருவன் A என்னும் இடத்திலிருந்து வீட்டிற்கு பயணஞ் செய்யும் பாதை கீழே தரப்பட்டுள்ளது. அங்கு சிறுவன் இடதுபக்கம் திரும்பும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
i. 5
ii. 6
iii. 7




39. 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இரண்டாவதாக ஓடிக்கொண்டிருக்கும் தயாளனை முந்தி விஜயன் போட்டியை நிறைவு செய்தான். எனின் அதற்கேற்ப விஜயன் பெற்றுக் கொண்ட இடம் எது?
i. முதலாமிடம் ii. மூன்றாமிடம் iii. இரண்டாமிடம்

40. தரப்பட்ட டொமினோ அட்டைகளின் கோலத்தை அறிந்து இடைவெளிக்குரிய அட்டையைத் தெரிவு செய்யுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 3 x 2 | 6 | 4 x 3 | 12 | 5 x 3 | | | 24 | 6 x 5 |

i. 15 | 4 x 6 ii. 30 | 8 x 3 iii. 10 | 3 x 5

# கடந்த வார (02.02.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. கல்வியில்
02. பெருமை
03. வாசிகசாலை / நூல்நிலையம்
04. கண்கள் போல
05. பக்குவமாக
06. பயன்படுத்துவோம்
07. i. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
ii. எறும்பூரக் கற்குழியும்
08. i. பல் - வரிசை
ii. ஆ - நிரை
iii. கல் - குவியல்
iv. முகில் - கூட்டம்
v. பூ - கொத்து
vi. மலை - தொடர்
vii. புகையிலை - கற்றை

**II.**
9. பிள்ளைகள்
10. நான்
11. நாம்
12. கத்திகள்
13. i. நாங்கள் பறவைகள் சரணாலயத்திற்குச் சென்றோம்.
ii. வீரர்களின் அணிவகுப்பு மைதானத்தில் இடம்பெற்றது.
14. i. பலமான ii. பழங்கள்
15. i. சரி ii. பிழை
16. i. மாணவி ii. பண்டிதை iii. புத்திரி

**III.**
17. நான் ஒரு பாடல் பாடுகின்றேன்
18. மைனாக்கள் பறந்து செல்கின்றன.
19. i. நான் உங்கள் ஆங்கில ஆசிரியை
ii. இது என்னுடைய கால்
iii. இது ஒரு பொய்கை (குளம்)
20. i. ஒரலோசுவ ii. குருல்லா
21. i. கனவுரு ii. நான்கு iii. 12

22. 109
23. 16 : 35
24. 100
25. i. 30.00 ரூபாய்
ii. 75.00 ரூபாய்
iii. 90.00 ரூபாய்
iv. 495.00 ரூபாய்
26. i. 40 ii. 4
27. ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்து நான்கு
28. 9387
29. 31, 36

**IV.**
30. 3
31. 3
32. 2
33. 2
34. 2
35. 3
36. 3
37. 2
38. 3
39. 2
40. 1
41. 3
42. 2
43. 3
44. 2
45. 1
46. 2
47. 2
48. 2
49. 1
50. 2
51. 1
52. 2
53. 2
54. 2
55. 3
56. 1
57. 1
58. 2
59. 2

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையால்

# பாணின் எடை குறித்து மட்டு. நகர் வர்த்தக நிலையங்களில் சோதனை

**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாண் எடை தொடர்பான விசேட சுற்றிவளைப்புக்கள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி விற்பனைக்காக தயாரிக்கப்படும் பாண்களின் நிறை குறித்து வர்த்தக நிலையங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஆரையம்பதி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி நகர்ப் பிரதேசங்களில் ஹோட்டல்கள், வெதுப்பகங்களில் பாணின் எடை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டதாக அதன் மாவட்டப் பொறுப்பதிகாரி என். எம். சப்ராஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், பெப்ரவரி 05ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை 30 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் சோதனை செய்யப்பட்டதுடன், குறைந்த நிறையில் பாணை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாண்களின் விலைகளை வெளிப்படுத்தாமை, முறையான லேபல் இடப்படாமை போன்ற குற்றங்களுக்காக 05 விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் பொதி செய்யப்பட்டு சேமித்து வைக்கப்பட்ட, விற்பனைக்கு வழங்கப்படும், விற்பனைக்காகக் காட்டப்படும் அல்லது சில்லறை, மொத்தமாக விற்கப்படும் தயாரிக்கப்பட்ட எந்த வகைப் பாணும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான எடையைக் கொண்டிருக்க வேண்டுமென நுகர்வோர் பாதுகாப்பு அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

விற்பனைக்காக பாணின் எடையை காட்சிப்படுத்துமாறு அனைத்து வர்த்தகர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் எதிர்காலத்தில் இச்சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அதிகார சபை மேலும் தெரிவித்தது.

# முன்னாள் பிரதேச செயலாளர் தவராசா காலமானார்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



மட்டக்களப்பைச் சேர்ந்த பல்துறைக் கலைஞரும் எழுத்தாளரும் பிரதேச செயலாளருமான வெள்ளத்தம்பி தவராசா (வயது 59) நேற்று காலமானார்.

இவர் கடந்த பல வருடங்களாக கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த 3 வாரங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள நிதியமைச்சுக்கு இடமாற்றம் பெற்று அங்கு கடமையாற்றி வந்த போதே சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இவர் நடிகர், கூத்துக் கலைஞர், கவிஞர், இலக்கியவாதி, ஆய்வாளர், எழுத்தாளர் என பல்துறைக் கலைஞராக விளங்கியவர்.

நாடக இயக்குனராய், கலை இலக்கிய விமர்சகனாய், குறும்பட தயாரிப்பாளனாய்த் திகழ்ந்தவர் என இலக்கியவாதிகள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்புக்கு மேலும் அழகு சேர்க்கும் வெளிநாட்டுப் பறவைகள்



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரை பெரு நிலப்பரப்பின் போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் தற்போது பெரும்போக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வயல் நிலங்களில் அதிகளவு வெளிநாட்டுப் பறவைகள் இரை தேடி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. வெளிநாட்டுப் பறவைகள் உள்நாட்டுக்கே உரித்தான கொக்கு, மைனா, நாரைக்கொக்கு, ஆள்காட்டி உள்ளிட்ட பல பறவைகளுடன் இணைந்து கூட்டம், கூட்டமாக வயல் நிலங்களில் இரை தேடி வருவதையும், அவதானிக்க முடிகின்றது.

பல வர்ணங்களுடன் பார்ப்பதற்கு அழகாகக் காட்சி தரும் பறவைகளை அப்பகுதி மக்களும் கண்டு இரசித்து வருகின்றனர்.

பூகோள ரீதியில் வட துருவத்திலிருந்துதான் அதிக பறவைகள் வருகின்றன. பறவைகள் மாத்திரமல்ல வண்ணாதிப்பூச்சி, சிங்கறால், திமிங்கலம், நீலத்திமிங்கலம், உள்ளிட்ட நீர்வாழ் உயிரினங்களும் வருகின்றன. இது பல நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வருகின்றது. இவை சூழல் வெப்பநிலைக்கு உள்ள பிராணிகளாகவும், இளஞ்சூட்டுக்குருதியுள்ள பிராணிகளாகவும், தங்களுடைய வெப்பநிலையை தாங்களே உணரக்கூடியதாகவும் உள்ளதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கிழக்கின் குரல்

# பல்லின சமய கலாசார நிகழ்வு



கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு பல்லின சமய கலாசார நிகழ்வுகளை மாணவர்களின் மத்தியில் அறிமுகப்படுத்தும் எண்ணக்கருவிற்கமைவாக பாடசாலை ஆலோசனை வழிகாட்டல் பிரிவினால் பொங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத்தின் வழிகாட்டலில் நடைபெற்ற நல்லிணக்க பரஸ்பர உறவுகளைப் பேணும் இத்திட்டத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



(எம்.எம்.ஜெஸ்மின்)



தி/மூ/வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான மேலங்கி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், ஈச்சிலம்பற்று கோட்டக்கல்வி அதிகாரி, பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமைக்காக ஒன்றுபட்டு உழைக்கும்

# கம்பஹா மாவட்ட உலமாக்களின் சேவை நல்லதோர் முன்னுதாரணம்

## கலாநிதி ஹஸன் மௌலானா புகழாரம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்கள் பிளவுபடுவதை தடுக்குமுகமாக முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கம்பஹா மாவட்ட திஹாரியைச் சேர்ந்த அஹ்லுஸ் ஸுன்னத்வல்ஜமாஅத் தரீக்கா, தப்லீக் ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாமி மற்றும் தௌஹீத் ஜமாஅத் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 150 துக்கும் மேற்பட்ட உலமாக்கள் ஒன்றிணைந்து வேற்றுமையில் ஒற்றுமையுடன் "துரறு உலமா திஹாரிய" என்ற அமைப்பை உருவாக்கி ஒற்றுமையென்ற ஒரே கொடியின் கீழ் சகோதரத்துவத்துடன் இணைந்து செயற்படுவது முஸ்லிம் சமூகத்திற்கு நல்லதோர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என இஸ்லாமிய ஒற்றுமை பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவரான அஸ்ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி தெரிவித்தார்.



அல்ஆலிம் முஹம்மத் பர்தி (ஹஸனி,அரூஸி) யுடைய தந்தை அல்ஹாஜ் முஹம்மத் நாஸிர் கடந்த சனிக்கிழமை (03) காலஞ்சென்றதை முன்னிட்டு அவருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக திஹாரியிலுள்ள அவரது இல்லத்துக்கு இஸ்லாமிய ஐக்கிய பேரவை ஸ்தாபகர்கள் சார்பில் விஜயம் செய்த வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கிடையே ஏற்படும் பிளவுகளை இல்லாதொழித்து முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு 'துரறு உலமா திஹாரிய' அமைப்பினர் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்த நல்ல வேலைத் திட்டத்தை இலங்கையில் வாழும் சகல முஸ்லிம்களும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வதுடன், முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதற்கான முயற்சிகளை முஸ்லிம் சமூகத்திலுள்ள உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக சேவைகள் அமைப்புகள் முன்வந்து ஒன்றிணைந்து மும்முரமாகச் செயற்படுவது காலத்தின் தேவையாகும் என கலாநிதி ஹஸன் மௌலானா மேலும் தெரிவித்தார்.

அல்ஆலிம் முஹம்மத் பர்தி (ஹஸனி,அரூஸி) அவர்கள், துரறு உலமா திஹாரிய அமைப்பின் முக்கியமான ஒருவராகவும் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் தரீக்காவை சேர்ந்த மூத்த உலமாக்களில் ஒருவராகவும் முஸ்லிம் சமூகத்திற்கு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**ரூ.55,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்**

11.25%2026'A' தொடர்களின் கீழ் ரூ. 30,000 மில்லியனையும் 11.50% 2028 'B' தொடர்களின் கீழ் ரூ. 25,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 11.25%2026'A' | 11.50% 2028 'B' |
|---|---|---|
| ISIN* | LKB 00326L151 | LKB 00528L152 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 30,000 மில்லியன் | ரூ. 110,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 11.25% ஆண்டொன்றிற்கு | 10.75% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2023 டிசெம்பர் 15 | 2023 டிசெம்பர் 15 |
| முதிர்வுத்திகதி | 2026 டிசம்பர் 15 | 2028 டிசெம்பர் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 ஜுன் & 15 டிசெம்பர் | 15 ஜுன் & 15 டிசெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 1.9057 | ரூ. 100.00 இற்கு ரூ. 1.9481 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 பெப்ரவரி 13, செவ்வாய்க்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 பெப்ரவரி 13 செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 பெப்ரவரி 15 | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவேரனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிட்டட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிட்டட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிட்டட் | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிட்டட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்/ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

டபிள்யூ.எல்.எஸ்.டபிள்யூ. ஜயசுந்தர
பொதுப்படுகடனின் பதில் கண்காணிப்பாளர்/பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: 2477011, தொலைநகல்: 2477687
வெப்தளம் : www.cbsl.gov.lk



தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன் 2024.02.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5383 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,922,760.00
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 3 2 0 3 3 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3625 — சீட்டிழுப்பு திகதி 2024.02.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,106,745.52
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 04 07 42 63 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 65796

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1731 — 2024.02.07 — 63797 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 423,159,898.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கங்கள் 10 13 30 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.02.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0209
ஆங்கில எழுத்து X — L7 எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 4 9 3 4 6 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,786,379.00

ராசி சுப பலன் — திகதி 2024.02.07 — சீட்டிழுப்பு இலக்கம் 692 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,992,722.08
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 40 46 49 57 — தனயோக இலக்கம் 42314 — நாளுக்கான விதி எண் 26

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1413 — 2024.02.07 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,513,944.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 07 13 21 48 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10361


கொழும்பு தெஹிவளை ஸ்ரீஆஞ்சநேயர் ஆலயத்தில்

## "ஸ்ரீ சிவன்" நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்



கொழும்பு தெஹிவளை, ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயத்தில் தைத்திங்கள் 28 ஆம் நாள் (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.55 முதல் 11.02 மணிவரை "ஸ்ரீ சிவன்" நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) நடைபெறவுள்ளது.

தைத்திங்கள் 27 ஆம் நாள் (10.02.2024) சனிக்கிழமை எண்ணெய் காப்பு (தைலஸ்நானம்) சாத்தும் நிகழ்வு காலை 9.00 மணியிலிருந்து நடைபெறும். ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமியின் திருவருளும் ஸ்ரீ மத் சந்திரசேகர சுவாமிஜியின் குருவருளும் கைகூடியுள்ளதால் அடியார்கள் அனைவரும் ஸ்ரீ சிவனின் கும்பாபிஷேகத்தை தரிசித்து உய்வடைய வேண்டுகிறோம்.

## கொழும்பில் மிஃராஜ் தின நிகழ்வு



(அஷ்ரப் ஏ சமத்)

முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் மிஃராஜ் இரவு தினம் கொழும்பு 6, கெஹவலக் டவுனிலுள்ள முஹியத்தீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நேற்று முன்தினம் (7) இஷாத் தொழுகையின் பின்னர் நடைபெற்றது. முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இசட் ஏ.எம். பைசால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பௌத்த சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் (பா.உ), மொஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதான இமாம், அஷ்ஷேக் எம். நுஸ்ரத் ஹக்கானி உட்பட பிரதேச வாழ் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர்.


# UNIVERSITY OF VAVUNIYA

## VACANCIES

1. **WALK-IN-INTERVIEW**

Walk in interview for the following posts will be held on **20th February 2024** at the Board Room of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya as follows:

Candidates who have the required qualifications are invited for this interview with **relevant certificates, NIC,Curriculum Vitae** along with the **Application form** downloadable from the University website.

**Faculty of Technological Studies (FTS)**

Department of Information & Communication Technology

i. Temporary Assistant Lecturer in Information Communication Technology **(9.00 a.m)**
ii. Temporary Demonstrator in Information Communication Technology **(9.00 a.m)**

**Faculty of Applied Science (FAS)**

Department of Physical Science

i. Temporary Assistant Lecturer in Information Technology **(11.00 a.m)**
ii. Temporary Demonstrator in Information Technology **(11.00 a.m)**

**Qualifications:**
A Degree with specialization in the relevant subject. - Ref. University Grants Commission (UGC) Circular No. 721.

**Method of Recruitment:** By structured interview

**Salary:**
Temporary Assistant Lecturer - Rs. 49,860/- (Fixed)
Temporary Demonstrator - Rs. 40,920/- (Fixed)

2. **CALLING APPLICATIONS**

The University of Vavuniya will entertain applications from suitably qualified Sri Lankan citizens for the following post up to **22.02.2024**.

**IT Centre**

Assistant Network Manager (On Contract)

**Qualifications:** Please refer University Grants Commission (UGC) Circular No.725

**Method of Recruitment:** By structured interview

**Salary:**
Assistant Network Manager (On Contract) - Rs. 50,625/- (Fixed)

**Note:** In addition to the salary, allowances approved by the University Grants Commission will also be paid.

Application form should be sent to the **Deputy Registrar, Establishments, University of Vavuniya, Pambaimadu, Vavuniya** by registered post along with photocopies of the Educational & Professional qualifications with statement of the Degrees and service certificates. In addition, t**he receipt of the registered post and scanned copy of the application as pdf file** should be sent by e-mail on or before the closing date **to the email address: recruitments@vau.ac.lk**

***Required qualification, application form and other details*** are available in the University web **http://www.vau.ac.lk**. Downloaded application form should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the **Bank of Ceylon, Account No: 2364602** in favor of **Bursar, University of Vavuniya.**

**The post applied for should be marked on the top left hand corner of the envelope.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Boards should channel their applications through the Heads of the respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar**
**08.02.2024**



**சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை**

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **20/02/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **21/02/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **22/02/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
SINGER FINANCE
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.



**விலைமனுக்களுக்கான அழைப்பு**

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்
பாதுகாப்பு சேவை வழங்குதல்
ஒப்பந்த இல. LSD/ACC/04/Security Service/2024

1. காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் 34 பிராந்திய அலுவலகங்களுக்கும் 2024/2025 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கு தகுதியான தகைமையுடைய நிறுவனங்களிடமிருந்து திணைக்களத்தின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பாதுகாப்பு சேவை வழங்க அவசியப்படும் பிராந்திய அலுவலகங்கள் | தேவைப்படும் பாதுகாப்பு அலுவலர் எண்ணிக்கை |
|---|---|
| பலாங்கொடை, தொலுவை, உடுநுவர, ஹோமாகம, தம்புத்தேகம, திஸ்ஸமஹாராம, மீரிகம, ரிதீகம, பன்னல, புத்தளம், மினுவன்கொட, கங்கவட்ட கோறளை, பாணந்துறை, கெஸ்பேவ, காலி, அத்தனகல்ல, இரத்தினபுரி, கொத்மலை, அநுராதபுரம், ஹாரிஸ்பத்துவ, நாத்தாண்டிய, குருவிட்ட, கந்தான, தொம்பே ,யட்டிநுவர, பெலியத்த, ஹிங்குரக்கொட, மாத்தறை, கலிகமுவ, வாரியபொல, வெலிகேபொல, நல்லூர்,எல்பிட்டி, ஹக்மன | ஒரே நேரத்தில் பாதுகாப்பு அலுவலர் ஒருவர் (01) நிறுத்தப் படல் வேண்டும். |

2. விலைமனுக்களுக்கான தேசிய போட்டி நடைமுறை ஊடாகவே விலைமனுக்கள் மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (தொ.பே: 0112- 797459)
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.02.09 முதல் 2024.02.29 வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை எழுத்து மூலமான கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்ற அதேவேளை காசாளரிடம் மீளப்பெறமுடியாத தொகையாக ரூபா. 2000.00 இனைச் செலுத்தி சிங்களமொழியில் அமைந்துள்ள விலைமனு ஆவணங்கள் அடங்கிய பூரணமான தொகுதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
5. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் "பிரதமகணக்காளர்,காணி உரித்து நிர்ணயத் திணைக்களம், 2 ஆம் மாடி, 'மிஹிகத்த மெதுர', இல.1200/6, இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு 2024.03.01 ஆந் திகதி காலை 10 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது முடிவடைந்த பின்னர் உடனடியாக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும்.
7. பிந்திய விண்ணப்பங்கள் அல்லது விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர" இல. 1200/6,
இரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை.
2024.02.09

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**

விற்பனைக்கு

WP-QP-8820-BA-JAJ-AUTO-AR4S-THREE WHEELER - 2008 RED. கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 08 12 081033. 009355

## வேலைவாய்ப்பு

**320**

**வெற்றிடங்கள்**

**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொத்து, ரைஸ், ரைஸ் என்ட் கறி இற்கு அனுபவமுள்ள ஒருவர் கம்பஹா உணவகத்திற்கு தேவை. 0773976388. 008908

## காணி/தோட்டம்

**641**

**வீடு சொத்து**

**கொழும்பு மாவட்டம்**

விற்பனைக்கு

புறக்கோட்டை தொடர் மாடி குத்தகைக்கு. மிஹிந்து மாவத்த. தொடர்பு சட்டத்தரணி பிரதீப் விஜேசிங்ஹ - 0773047222. 009294

# தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை

(National Aquatic Resources Research & Development Agency)

NARA

## பதவி வெற்றிடங்கள்

நீரியல்வளம் தொடர்பாக ஆராய்ச்சி, அபிவிருத்தி, முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல் பொறுப்புக்களை கொண்டுள்ளதும் கடற்றொழில் அமைச்சின் ஆதிக்கவரம்பின் கீழுள்ள பிரதான தேசிய நிறுவனமே தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையாகும். இந்த முகாமையிலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி | வகுதி | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01. | Director/Monitoring & Evaluation | HM 1-3 | 01 |
| 02. | Senior Hydrographic Surveyor | AR-2 | 01 |
| 03. | Assistant Director/Services and Operations | MM 1-2 | 01 |
| 04. | Senior Systems Analyst/Programmer | MM 1-2 | 01 |
| 05. | Senior Land Surveyor | MM 1-2 | 01 |
| 06. | Land Surveyor | JM 1-2 | 01 |
| CMS/LP/23/ PT/04/066 | Trouser Black, Blue & White – 1500 Nos. | 50,000.00 | 1,000.00 | 2024.02.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/064 | Leather Shoes (2000- Pairs) | 95,000.00 | 1,000.00 | 2024.03.01 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 பெப்ரவரி 09 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# இலங்கை – ஆப்கான் அணிகளின் முதல் ஒருநாள் போட்டி இன்று பல்லேகலவில்



இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி இன்று (09) பல்லேகலவில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டிய உற்சாகத்துடனேயே இன்றைய போட்டியில் களமிறங்கவுள்ளது. இந்தத் தொடருக்கான இலங்கைக் குழாம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில் முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க நீக்கப்பட்டதோடு அவருக்கு பதில் சாமிக்க கருணாரத்ன அழைக்கப்பட்டுள்ளார்.

குசல் மெண்டிஸ் தலைமையிலான இலங்கை அணியில் வனிந்து ஹசரங்க, பத்தும் நிசங்க, சரித் அசலங்க, துஷ்மந்த சமீர, அவிஷ்ன பெர்னாண்டோ மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோர் முக்கியமானவர்களாக உள்ளனர்.

ஹஷ்மதுல்லா ஷஹிதி ஆப்கான் அணிக்கு தொடர்ந்து தலைவராக செயற்படவிருப்பதோடு மட்டுப்படத்தப்பட்ட ஓவர்களுக்காக முஹமது நபி, ரஹ்மானுல்லா குர்பால் மற்றும் பஸால் ஹக் பரூக்கி ஆப்கான் அணியில் இணைந்துள்ளனர். எனவே, டெஸ்ட் போட்டியை விடவும் ஆப்கான் ஒருநாள் அணி இலங்கைக்கு அதிக சவாலாக அமையவுள்ளது.

இலங்கை மற்றும் ஆப்கான் அணிகள் இதுவரை 12 முறை ஒருநாள் போட்டிகளில் சந்தித்துள்ளன. இதில் இலங்கை 7 தடவைகளும் ஆப்கான் அணி 4 தடவைகளும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய போட்டி நடைபெறும் பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானம் மந்தமான ஆடுகளமாக கருதப்படுகிறது. புதுப்பந்து துடுப்பாட்டத்திற்கு உதவும் வகையில் இருக்கும் என்றபோதும் மெதுவான இந்த ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த முடியும்.

ஆப்கான் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரஷீத் கான் இந்த ஒருநாள் தொடரில் இடம்பெறாதபோதும் அந்த அணியில் சுழற்பந்து முகாம் பொதுவாக பலம்பொருந்தியதாக காணப்படுகிறது.

மறுபுறும் இலங்கை அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷனவுடன் சுழற்பந்து சகலதுறை வீரர் துனித் வெள்ளாலகேவும் இன்றைய ஆட்டத்தில் களமிறங்க வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணி ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ந்து சோபிக்கத் தவறி வருவதோடு, கடந்த உலகக் கிண்ணத்தில் அந்த அணி முன்கூட்டியே வெளியேறியது மாத்திரமன்றி 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குக் கூட தகுதி பெறவில்லை. இந்நிலையில் எதிர்வரும் வலுவான போட்டித் தொடர்களுக்காக அணியைக் கட்டமைப்பதற்கு இந்தத் தொடர் முக்கியமானதாக உள்ளது.

இன்றைய போட்டி பகலிரவு ஆட்டமாக பி.ப. 2.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

மெர்கன்டைல் நொக் அவுட்

# சம்பியன் கிண்ணம் வென்றன எக்ஸ்போலங்கா, செலிங்கோ





மெர்கன்டைல் கால்பந்து சங்கத்தினால் நடத்தப்பட்ட நொக் அவுட் கால்பந்து தொடரின் முதலாம் பிரிவில் எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பீஎல்சி அணியும் இரண்டாம் பிரிவில் செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடட் அணியும் சம்பியன் கிண்ணங்களை வென்றன.

கொழும்பு, சிட்டி லீக் கால்பந்து மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை (06) நடைபெற்ற இறுதிப் போட்டியில் எக்ஸ்போலங்கா அணி, எச்.என்.பி. அசூரன்ஸ் பீஎல்சி அணியை பெனால்டி சூட் அவுட் முறையில் 4–3 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. போட்டியின் முழுநேர முடிவின்போது இரு அணிகளும் தலா 2 கோல்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இரண்டாம் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ் அணியை எதிர்கொண்ட செலிங்கோ அணி 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தது. இதில் முதலாம் பிரிவின் சிறந்த வீரராக எச்.என்.பி. அணியின் மரியதாஸ் நிதர்ஷன் தெரிவானதோடு இரண்டாம் பிரிவில் செலிங்கோ அணியின் ஹேஷான் டி சில்வா தெரிவானார்.



சர்வதேச செய்திகள்

## பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும்

# ரபாவுக்குள் நுழைய தயாராகும்படி இஸ்ரேலிய துருப்புகளுக்கு உத்தரவு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் நேற்று (08) ஆரம்பமான நிலையில், எகிப்து எல்லையை ஒட்டிய மக்கள் நிரம்பி வழியும் தெற்கு காசாவின் ரபாவுக்குள் நுழைய துருப்புகளை தயாராக இருக்கும்படி இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கான முன்மொழிவுக்கு ஹமாஸ் அளித்த பதிலை நெதன்யாகு நிராகரித்ததை அடுத்தே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். போர் நிறுத்த முன்மொழிவை ஒட்டி இராஜதந்திர முயற்சிகள் தீவிரம் அடைந்திருப்பதோடு பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டினி பிளிங்கனும், “உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு இன்னும் வாய்ப்பு உள்ளது” என்று நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் தஞ்சமடைந்திருக்கும் ரபாவை நோக்கி இஸ்ரேலிய படைகள் முன்னேறுவது தொடர்பில் கவலை அதிகரித்துள்ளது. இந்த நகரை நோக்கி படைகள் முன்னேறுவது “ஏற்கனவே உள்ள மனிதாபிமான நெருங்கடியை அதிவேகமாக அதிகரிக்கும்” என்று ஐ.நா தலைவர் அன்டோனியோ குட்டரஸ் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் தொலைக்காட்சியில் பேசிய நெதன்யாகு, ரபா நகரில் இராணுவ நடவடிக்கைக்கு தயாராகும்படி துருப்புகளுக்கு உத்தரவிட்டதாகவும் ஹமாஸ் மீதான முழு வெற்றிக்கு சில மாதங்களே எஞ்சி இருப்பதாகவும் தெரிவித்தார்.

போர் நிறுத்த முன்மொழிவு தொடர்பில் பேசிய அவர், “நாம் இப்போது கேள்விப்பட்ட ஹமாஸின் வினோதமான கோரிக்கைகளுக்கு அடிபணிவது... இன்னொரு படுகொலைக்கு அழைப்பு விடுப்பதாக இருக்கும்” என்றார்.

போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பிராந்தியத்திற்கு மற்றுமொரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் பிளிங்கன், டெல் அவிவில் செய்தியாளர்களிடம் பேசியபோது, ஹமாஸின் பதில் முன்மொழிவு குறைந்தபட்சம் பேச்சுவார்த்தையை தொடர வாய்ப்பை வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

“ஹமாஸின் பதிலில் தெளிவாகவே வெற்றி அளிக்காத சில விடங்கள் இருந்தபோதும், அது உடன்பாடு ஒன்றை அடைவதற்கான வாய்ப்பை உருவாக்குவதாக நாம் நம்புகிறோம். அதனை அடையும்வரை நாம் ஓய்வின்றி செயற்படுவோம்” என்று நெதன்யாகுவை சந்தித்த பின்னர் பிளிங்கன் குறிப்பிட்டார்.

### தொடரும் பேச்சு

காசாவில் அமைதியை ஏற்படுத்துவது மற்றும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றுக்கான முயற்சியாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் நேற்று புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.

உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு இரு தரப்பும் தேவையான நெகிழ்வுப் போக்கை காண்பிக்கும்படி மத்தியஸ்தம் வகிக்கும் எகிப்து வலியுறுத்தி இருப்பதாக இது தொடர்பில் நெருக்கமான வட்டாரத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

போர் நிறுத்தம், போரை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் கைதிகள் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்றை இலக்காகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்த ஹமாஸ் அமைப்பு இணங்கியதாக அந்த அமைப்பின் நெருங்கிய வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்காக ஹமாஸ் உயர்மட்ட உறுப்பினர் கலீல் அல் ஹய்யா தலைமையிலான தூதுக் குழு ஒன்று கெய்ரோ சென்றிருப்பதாக ஹமாஸ் முத்த அதிகாரி ஒசாமா ஹம்தான் தெரிவித்துள்ளார்.



ஹமாஸின் பதில் முன்மொழிவை நெதன்யாகு நிராகரித்தது தொடர்பில் பதிலளித்த ஹம்தான் கூறும்போது, “போர்நிறுத்த முன்மொழிவு குறித்த நெதன்யாகுவின் கருத்துகள் அவர் பிராந்தியத்தில் மோதலை தொடர விரும்புவதை காட்டுகிறது” என்றார்.

அனைத்து பலஸ்தீன போராட்டக் குழுக்களும் தொடர்ந்து போராடுவதற்கு ஹமாஸ் அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 27,840 ஆக அதிகரித்துள்ளது. இதனை காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் 130 பேர் கொல்லப்பட்டதாக அந்த அமைச்சு கூறியது. கடந்த நான்கு மாதங்களை தாண்டி நீடிக்கும் இந்தப் போரில் 67,317 பேர் காயமடைந்துள்ளனர்.

குறிப்பாக ரபா நகரில் இரு வீடுகளை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 5 சிறுவர்கள் உட்பட 14 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதோடு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

மத்திய காசாவில் வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் பலஸ்தீன தொலைக்காட்சிக்காக பணியாற்றும் நபிஸ் அப்தல் ஜவாத் என்ற ஊடகவியலாளர் மற்றும் அவரது மகன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

தவிர தெற்கில் கான் யூனிஸ் மற்றும் வடக்கில் காசா நகரிலும் இஸ்ரேல் தாக்குதல்கள் தொடர்ந்தன.

ஒக்டோபர் 7 தாக்குதலின்போது சுமார் 250 இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 132 பேர் பணயக்கைதிகளாக சிக்கி இருப்பதாக இஸ்ரேல் கூறுகிறது. இவர்களில் 29 பேர் உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த பணயக்கைதிகள் விவகாரம் இஸ்ரேலில் பெரும் நெருக்கடியை உருவாக்கி இருப்பதோடு நெதன்யாகு அரசு மீதான அழுத்தத்தை அதிகரித்துள்ளது. அங்கு பணயக்கைதிகளை மீட்கக் கோரியும் நெதன்யாகு அரசுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

கடந்த நவம்பரில் இடம்பெற்ற தற்காலிக போர் நிறுத்தத்தின்போது விடுவிக்கப்பட்ட பணயக்கைதி ஒருவரான அடினா மோஷே, பிரதமரை சுட்டிக்காட்டி செய்தியாளர் சந்திப்பில் பேசியபோது, “எல்லாம் உங்கள் கையில் உள்ளது” என்றார்.

“ஹமாஸை அழிக்கும் இந்தப் போக்கை நீங்கள் (நெதன்யாகு) தொடர்ந்தால், எம்மால் ஒரு பணயக்கைதியைக் கூட விடுவிக்க முடியாமல் போகும் என்று நான் பெரும் அச்சம் மற்றும் கவலை அடைகிறேன்” என்றார்.

### ரபாவில் கவலை அதிகரிப்பு

காசாவில் மேலும் தெற்காக இஸ்ரேலிய படை முன்னேற தயாராகும் நிலையில், ஏற்கனவே எகிப்துடனான எல்லை வரை துரத்தப்பட்டு தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றுக்கும் பலஸ்தீனர்களின் நிலை தொடர்பில் கவலை அதிகரித்துள்ளது.

காசாவின் 2.4 மில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் அளவானவர்கள் தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

“உயர்வாழ்வதற்கான அடிப்படை தேவைகள் போதுமாக இல்லாமலும், பட்டினி, நோய் மற்றும் மரணங்கள் துரத்தும் நிலையிலும் அவர்களின் வாழ்க்கை நிலைமை படு மோசமாக உள்ளது” என்று ஐ.நா மனிதாபிமான தலைவர் மார்டின் கிரிப்பித் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

“இந்தப் போர் மேலும் ரபாவுக்குள் நுழைவது, பாதுகாப்பை தேடி வரும் குடும்பங்களின் பாதுகாப்பு குறித்து நாம் பெரும் கவலை அடைகிறோம்” என்று அவர் கூறினார்.

இந்த நகருக்கு படைகளை அனுப்புவதை நிறுத்தும்படி கூறத் தவறிய பிளிங்கன், புதிய முன்னேற்றம் பற்றி கவலையை வெளியிட்டார். “இஸ்ரேல் முன்னெடுக்கும் எந்த ஓர் இராணுவ நடவடிக்கையும் பொது மக்களை முதன்மைப்படுத்தியும் முதன்மையானதாகவும் இருக்க வேண்டும்” என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் குறிப்பாக சுமார் 300,000 மக்கள் சிக்கியுள்ள வடக்கு காசாவில் பஞ்சம் ஏற்படும் அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக ஐ.நா. மனிதாபிமான அலுவலகம் வெளியிட்ட அறிவித்தலில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் காசா நகரை சென்றடையும் மனிதாபிமான உதவிகளின் அளவு பஞ்சம் ஒன்றை தடுப்பதற்கு போதுமானதாக இல்லை என்று அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா நிவாரண மற்றும் பணிகள் நிறுவனம் கடைசியாக வடக்கு காசாவுக்கு கடந்த ஜனவரி 23 ஆம் திகதியே உணவு விநியோகத்தை மேற்கொண்டதாகவும் அந்த அலுவலகம் சுட்டிக் காட்டியது.

# அமெரிக்காவின் தாக்குதலில் ஈரானிய ஆதரவு தளபதி பலி



ஈராக் தலைநகர் பக்தாதில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் ஈரான் ஆதரவு போராட்டக் குழு ஒன்றின் மூத்த தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கதைப் அப்துல்லா குழுவின் தலைவர் மற்றும் அவரது இரு காவலர்கள் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றே கடந்த புதன்கிழமை (07) இரவு இலக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் மூவரும் கொல்லப்பட்டுள்ளனர். கதைப் ஹிஸ்புல்லாவின் மூத்த தளபதியான அபூ பாகிர் அல் சாதி கொல்லப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜோர்தானில் மூன்று அமெரிக்கப் படைகள் கொல்லப்பட்ட தாக்குதலை இவர் வழிநடத்தியதாக அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் குறிப்பிட்டுள்ளது.

பரபரப்பான வீதியில் சென்று கொண்டிருந்த வாகனம் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் அந்த வாகனம் தீயில் கருகி சிதைந்துள்ளது.

தனது படையினர் கொல்லப்பட்டதற்காக அமெரிக்கா கடந்த வார இறுதியில் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரான் ஆதரவு குழுக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# வருடம் முழுவதும் உலகில் 1.5 செல்சியஸ் வெப்பநிலை



முதல் முறையாக உலக வெப்பநிலை ஆண்டு முழுவதும் 1.5 செல்சியஸை விஞ்சி இருந்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காலைநிலை சேவை தெரிவித்துள்ளது.

உலக வெப்பநிலை 1.5 செல்சியஸுக்குள் வைத்திருக்க உலகத் தலைவர்கள் கடந்த 2015இல் வாக்குறுதி அளித்தனர். இந்த வரம்பு பாதகமான பாதிப்புகளை தவிர்க்க தீர்க்கமானதாக கருதப்படுகிறது.

காலநிலை மாற்றத்தால் 2023 இல் புயல்கள், வரட்சி மற்றும் காட்டுத் தீ சம்பவங்கள் அதிகரித்திருந்ததோடு, எல் நினோ நிகழ்வும் அதிகரித்திருந்தது. இது கடந்த 100,000 ஆண்டுகளில் வெப்பமான ஆண்டாக பதிவாகும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

“நாம் 1.5 செல்சியஸை தொட்டிருப்பதோடு நாம் இழப்புகளை, சமூக இழப்புகளை மற்றும் பொருளாதார இழப்புகளை காண்கிறோம்” என்று காலநிலை பாதிப்பு ஆய்வுக்கான போஸ்ட்டம் நிறுவனத்தின் ஜோன் ரொக்ட்ரோம் தெரிவித்துள்ளார். 1.5 செல்சியஸுக்கு மேற்படாது, தொழில்துறைக்கு முந்திய நிலைக்கு உலக வெப்பநிலையை மட்டுப்படுத்துவது காலநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான சர்வதேச முயற்சியாக உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

ஈ.எச்.குரே கட்டிடம் – 411, காலி வீதி, கொழும்பு – 03, இலங்கை

தொலைபேசி: +94 11 2371600 / தொலைநகல்:+94 11 2371671
இணையதளம்: www.leco.lk மின்னஞ்சல்: general@leco.lk


**விநியோக மற்றும் வழங்கல் உரிம இலக்கம்: EL/D/16=004**

LECO

# அறிவித்தல்

## புதிய மின் இணைப்புகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கு 2024ஆம் வருடத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல்

**முன்னுரை**

அ) குறித்த சேவைக்காக பாவனையாளர்களிடமிருந்து அதிகூடிய தொகையாக அனுமதிப்பத்திரதாரரினால் (லெகோ) அறவிடுவதற்கு அனுமதியளிக்கும் கட்டணங்கள் இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றன.

ஆ) அனுமதிப்பத்திரதாரரினால் பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு தாக்கல் செய்யப்பட்டு கட்டணங்களை விசாரித்துப் பார்த்த பின் கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இ) இத்துடன் பிரசுரிக்கப்படும் கட்டணங்கள் குறித்த அனுமதிப்பத்திரதாரரினால் வழங்கப்படும் பொதுத் தேவைப்பாட்டிற்கான சேவைக்காக மட்டுமாகும். ஏனைய தேவைப்பாடுகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பதானது, மதிப்பீடுகள் தேவைப்படும் ஒவ்வொரு விடயத்திற்காகவும் வெவ்வேறாக மேற்கொள்ளப்படும் என்பதுடன் இதன்பொருட்டு மின்சார நிறுவனத்தின் 2024ஆம் வருடத்திற்கு இயைபாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களில் காட்டப்படும் அலகுக்கான விலை ஏற்புடையதாகும்.

ஈ) புதிய சேவை வழங்கல் ஒன்றை வழங்குகையில் அனுமதிப்பத்திரதாரரினால் தற்போது உள்ள ஆதனமொன்றை பயன்படுத்துவதானால் அதன் மதிப்பை சேவை வழங்கலுக்காக பயன்படுத்துவதானது அந்தக் கட்டணத்தை மீள்கொடுப்பனவு செய்யும் விதிமுறையொன்றை அனுமதிப்பத்திரதாரர் செயற்படுத்தியிருந்தால் மட்டுமேயாகும். (வகுதி 7.3 அனுமதிக்கப்பட்ட கட்டணம் அறவிடும் விதிமுறையின் பிரகாரம்)

**சுருக்கங்கள்**

| | |
|---|---|
| A | அம்பியர் |
| kV | கிலோ வோற் |
| kVA | கிலோ வோற் அம்பியர் |
| LV | லோ வோல்டேஜ் |
| MV | மீடியம் வோல்டேஜ் |

| | |
|---|---|
| AAC | சகல அலுமினிய கடத்திகள் |
| B/C | கொத்தணி கடத்திகள் |
| RC Pole | வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் |
| PS Poles | முன் வலியுறுத்தப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் |
| | |

**1. அங்கீகரிக்கப்பட்ட சேவை இணைப்புக் கட்டணங்கள்**

**கட்டண கட்டமைப்பு**

அ) காணியின் எல்லையிலிருந்து மானி பொருத்தப்படும் இடம் வரை தரையில் 50 மீற்றர் தூரம் வரை சில்லறை சேவை இணைப்புக்காக பொது அறவீடொன்று ஏற்புடையதாகும்.

ஆ) தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து தரையில் 50 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு தற்போதுள்ள சில்லறை சேவை இணைப்பிற்கு i) பொது அறவீட்டிற்கான நிலையான கட்டணம் ii) அதிகரிக்கும் தூரத்திற்கு ஏற்ப மாற்றமடையும் கட்டணம்

இ) மூடப்படாத 11 கி.வோற்றிக்கு குறைந்த கம்பிகள் சகிதம், தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றர் தூரம் வரை மொத்த சேவை இணைப்புக்காக பொது அறவீடொன்று ஏற்புடையதாகும்.

ஈ) மூடப்படாத 11 கி.வோற்றிக்கு குறைந்த கம்பிகள் சகிதம், தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து நிலத்தில் 50 மீற்றருக்கு மேற்பட்ட தூரம் வரை மொத்த வழங்கலுக்காக (i) பொது அறவீட்டிற்கான நிலையான கட்டணம் (ii) அதிகரிக்கும் தூரத்திற்கு ஏற்ப மாற்றமடையும் கட்டணம் ஏற்புடையதாகும்.

**குறிப்பு:** ''தரைத் தூரம்'' என்பது விநியோக வலையமைப்பில் கம்பியிணைப்பு இடத்திலிருந்து மானி பொருத்தப்படும் இடத்திற்கு வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தினால் நிர்ணயிக்கப்படும் கிடையான தூரமாகும்.

1.1 சில்லறை சேவை இணைப்பொன்று (< 42 kVA) தற்போதுள்ள விநியோக வலையமைப்பிலிருந்து (குறைந்த மின்னழுத்தம்) நிலத் தூரம் 30 மீற்றர் வரையாகும்.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.1.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 34,600.00 |
| 1.1.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 77,600.00 |
| 1.1.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 85,400.00 |

அட்டவணை 01

**குறிப்பு:**

1. 01ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொதுவான கட்டணங்கள், சேவையானது கம்பங்களின் எண்ணிக்கை அல்லது தேவையான ஏனைய நிலையான பொருட்களைப் பொருட்படுத்தாமல் காணியின் எல்லையிலிருந்து மானி பொருத்தப்படும் இடம் வரையில் 50 மீற்றர் நிலத் தூரம் வரை அனைத்து நிலையான வகை சில்லறை சேவை இணைப்புகளுக்கும் ஒரு நிலையான கட்டணமாகப் பயன்படுத்தப்படும்.
2. நிலையான சேவை இணைப்புகளைத் தவிர வேறேதேனும் மேலதிக பொருட்கள்/வேலைகளுக்கு தனித்தனியாக கட்டணம் அறவிடப்படும்.

1.2 சில்லறை சேவை இணைப்பொன்று (< 42 kVA) காணியின் எல்லையிலிருந்து மானி பொருத்தப்படும் இடம் வரையிலான 50 மீற்றருக்கு மேற்பட்ட தரைத் தூரம்

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொது அறவீட்டிற்கு சமனான நிலையான கட்டணம் (ரூபா) | மாற்றமடையும் அறவீட்டிற்கு 50 மீற்றரை விட அதிகரிக்கும் ஒவ்வொரு தரைத் தூரத்திற்கான கட்டணம் (ரூபா / மீற்றர்) |
|---|---|---|---|
| 1.2.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 34,600.00 | 1,000.00 |
| 1.2.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 77,600.00 | 1,400.00 |
| 1.2.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 85,400.00 | 1,600.00 |

அட்டவணை இல. 02

**குறிப்பு:**

1) 02ஆம் இலக்க அட்டவணை காட்டப்பட்டுள்ள கட்டண அமைப்பு 50 மீட்டருக்கு மேற்பட்ட தரைத் தூரத்திற்கு பொருந்தும்.
2) 50 மீட்டருக்கு மேற்பட்ட மேலதிக தரைத் தூரத்திற்கு மாற்றமடையும் கட்டணம் ஏற்புடையதாகும்.
3) நிலையான சில்லறை விநியோக சேவை இணைப்புகளைத் தவிர வேறு ஏதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக அறவிடப்படும்.

**1.3 தற்காலிக சேவை இணைப்புகள் (சில்லறை வழங்கல்)**

அ) 1.1 மற்றும் 1.2 இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான சேவை இணைப்பு அறவீட்டுக் கட்டணங்களுக்கு புறம்பாக தற்காலிக இணைப்புகளுக்காக தொழிலாளர் கட்டணங்களையும் சேர்த்தல் வேண்டும்.

ஆ) அனுமதிக்கப்பட்ட மேலதிக தொழிலாளர் கட்டணங்கள்

i. தற்காலிக இணைப்புக்கு (சிங்கள் பேஸ்) ரூபா 5,800.00
ii. தற்காலிக இணைப்புக்கு (திரீ பேஸ்) ரூபா 6,000.00
iii. சேவை வழங்கலுக்காக பாவிக்கப்படும் சகல சேவை கம்பமொன்றுக்கு ரூபா 4,500.00 (7.6 மீற்றர் வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பம்)

இ) சகல தற்காலிக வழங்கலொன்றுக்கு மீட்டெடுக்கக்கூடிய பொருள் செலவில் 2% ஒரு மாதத்திற்கான வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது (குறைந்தபட்ச கட்டணம் 2 வாரங்களுக்கு மற்றும் அதிகபட்ச கட்டணம் 50 மாதங்கள் வரை) இது மின்சாரம் துண்டிக்கப்படும் போது கணக்கிடப்படுகிறது.

ஈ) மீட்டெடுக்கக்கூடிய பொருட்களுக்கான வாடகைக் கட்டணங்களைக் கழித்தல் (இ. இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி) திரும்பப்பெறக்கூடிய பொருட்களின் விலையானது துண்டிக்கப்பட்டவுடன் வாடிக்கையாளர்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

உ) 50 மீற்றர் வரையிலான தற்காலிக இணைப்புகளுக்கு, மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலை 03ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.3.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 20,103.00 |
| 1.3.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 59,207.00 |
| 1.3.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 66,357.00 |

அட்டவணை இல. 03

ஊ) 50 மீட்டருக்கு மேற்பட்ட தற்காலிக இணைப்புகளுக்கு (உ) இல் உள்ள மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் பெறுமதிக்கு மேலதிகமாக 04ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக தரைத் தூரத்தில் உள்ள மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களின் விலை கணக்கிடப்படும். இங்கே ''மேலதிக தரை தூரம்'' என்பது 50 மீட்டருக்கு மேற்பட்ட தரைத் தூரமாகும்.

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | மேலதிக தரைத் தூரத்திற்கான மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கான கட்டணம் (ரூபா/மீற்றர்) |
|---|---|---|
| 1.3.4 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 757.00 |
| 1.3.5 | 30 அம்பியர் திரீ பேஸ் | 1,168.00 |
| 1.3.6 | 63 அம்பியர் திரீ பேஸ் | 1,382.00 |

அட்டவணை இல. 04

1.4 சில்லறை சேவை வழங்கல் - (<42kVA) (குறைந்த மின்னழுத்தம்) தற்போதுள்ள தரைக்கீழ் விநியோக வலையமைப்பு

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| 1.4.1 | 30 அம்பியர் சிங்கள் பேஸ் | 28,900.00 |
| 1.4.2 | 30 அம்பியர் திரீ பேஸ் | 68,400.00 |
| 1.4.3 | 63 அம்பியர் திரீ பேஸ் | 70,800.00 |

அட்டவணை இல. 05

குறிப்பு:

1. மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண அமைப்பு புதிய சேவை இணைப்புகளுடன் தொடர்புடைய நிலையான கட்டணமாகும்.
2. அகழிகள் மற்றும் கேபிள் அமைக்கும் பணிகளுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப கட்டணம் ஒவ்வொரு வழக்கிலும் பயன்படுத்தப்படும்.
3. நிலையான சேவை இணைப்புகளைத் தவிர வேறேதேனும் மேலதிக பொருட்கள்/வேலைகளுக்கு தனித்தனியாக கட்டணம் அறவிடப்படும்.

1.5 தற்போதுள்ள வலையமைப்பிலிருந்து 50 மீற்றர் தூரம் வரை 11 கி.வோற்றிற்கு குறைந்த மேல்நிலையிலுள்ள வெற்று வலையமைப்புகளிலிருந்தான மொத்த சேவை இணைப்புகள்

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | உபநிலையச் செலவு (மின்மாற்றி + துணைப்பாகங்கள்) (ரூபா) | ஏனைய செலவுகள்: உயர் மின்னழுத்த மேல்நிலை வழி, கம்பம் மற்றும் முடிவுறுத்தல் செலவு (ரூபா) | பொதுவான கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1.5.1 | 50 kVA | 559.200.00 | 1 ,127,900.00 | 1,687,100.00 |
| 1.5.2 | 100 kVA | 560,900.00 | 1,127,900.00 | 1,688,800.00 |
| 1.5.3 | 160 kVA | 3,654,000.00 | 1 ,127.900.00 | 4,781,900.00 |
| 1.5.4 | 250 kVA | 4,438,300.00 | 1, 127.900.00 | 5,566,200.00 |
| 1.5.5 | 400 kVA | 5,997,000.00 | 1,461.600.00 | 7,458,600.00 |
| 1.5.6 | 630 kVA | 8,143,600.00 | 1,461.600.00 | 9,605,200.00 |
| 1.5.6 | 1000 kVA - Plinth | 10,902,000.00 | 1,127,900.00 | 12,029,900.00 |

அட்டவணை இல. 06

1) மேற்படி 06ஆம் இலக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் 11 கி. வோற்றுக்குக் குறைந்த மேல்நிலை மூடப்படாத வகை வலையமைப்புகளுக்குப் பயன்படுத்தப்படும்.
2) பொருந்தக்கூடிய பொதுவான கட்டணத்தில் துணை மின்நிலைய செலவு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய செலவுகள் உள்ளடங்கும்.
3) பிற செலவுகளில் 11 கி.வோற் வரி நீடிப்புகள், கம்பங்கள் / துணைப்பாகங்கள் மற்றும் முடிவுகளுடன் தொடர்புடைய செலவுகள் அடங்கும்.
4) நிலையான மொத்த விநியோக சேவை இணைப்புகளைத் தவிர வேறு ஏதேனும் மேலதிக பொருட்கள் / வேலைகளுக்கு தனித்தனியாக அறவிடப்படும்.
5) துணை மின்நிலையம் வரை LV கேபிள்கள் மற்றும் அதன் பாகங்கள் (LV முடிவுறுத்தல்கள், லக்ஸ் போன்றவை) வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.
6) 1000 கி. வோற் துணை மின்நிலையத்திற்கான பீடம் (Plinth) உரிமதாரரின் விவரக்குறிப்புகளின்படி வாடிக்கையாளரால் கட்டப்பட வேண்டும்.
7) மேலே குறிப்பிடப்படாத பிற வகையான சேவை இணைப்புகளுக்கான கட்டணங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையில் மதிப்பீடு செய்யப்படும்.
8) 100 கி.வோ. வரையான மின்மாற்றி செலவு நிறுவனத்தினால் (LECO) ஏற்றுக்கொள்ளப்படும்.

1.6 தற்போதுள்ள வலையமைப்பிலிருந்து 50 மீற்றருக்கு (தரையில்) மேற்பட்ட 11 கி.வோ. மேல்நிலை வலையமைப்புகளின் மொத்த சேவை இணைப்புகள் மற்றும் 1.4 பிரிவின் கீழ் வராத ஏனைய வகை இணைப்புகள்

ஒவ்வொரு விடயத்தின் பிரகாரம் அறவீட்டுக் கட்டணம் பின்வரும் வகையில் மதிப்பீடு செய்யப்படும்.

அ) 1.5ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள உபநிலைய செலவு நிலையான கட்டணமாக அறவிடப்படும்.

ஆ) வேறு கட்டணங்களின் கீழ் கொண்டுவரப்படும் உயர் மின்னழுத்த வழிகள், கம்பங்கள் / துணைப்பாகங்கள் மற்றும் பொருத்தும் கட்டணங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மதிப்பீடு செய்யப்படும்.

1.7 தற்போதுள்ள மின் வழங்கல்களை மேம்படுத்துதல்

அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

2. மின்சார வழிகள் மற்றும் விநியோக உபநிலையங்களுக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

நிலையான மேல்நிலை வழிகள் மற்றும் உப நிலைய நிர்மாணங்களுக்கு பின்வரும் கட்டணங்கள் விதிக்கப்படும்.

2.1 குறைந்த மின்னழுத்தம் மற்றும் 11 கி.வோற்றிற்குக் குறைந்த மேல்நிலை மின் வழிக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

| | | கட்டணங்கள் (ரூபா / கி.மீ) | |
|---|---|---|---|
| தொ. இல. | வழி வகை | வலுவேற்றப்பட்ட கொங்கிறீட் கம்பங்கள் | முன்வார்ப்பு கொங்கிறீட் கம்பங்கள் |
| **2.1.1** | திரீ பேஸ் குறைந்த மின்னழுத்த கொத்தணி கம்பியிணைப்பு - 50 | 4,398,600.00 | 4,698,200.00 |
| **2.1.2** | திரீ பேஸ் குறைந்த மின்னழுத்த கொத்தணி கம்பியிணைப்பு - 70 | 3,824,700.00 | 4,124,400.00 |
| **2.1.3** | மூடப்படாத 11 கி.வோ. அலுமினிய கம்பியிணைப்பு - 60 | - | 9,414,200.00 |
| **2.1.4** | 11 கி.வோ. கொத்தணி கம்பியிணைப்பு - 70 சகல அலுமினிய கடத்திகள் | - | 17,797,300.00 |

அட்டவணை இல. 07

குறிப்பு:

(i) கம்பியிணைப்பு வழியின் நீளம் 35 மீற்றருக்கு ஏற்புடையதான கட்டணத்திற்கு சமமான பெறுமதி குறைந்தபட்சக் கட்டணமாக அறவிடப்படும்.

(ii) நிலையான கம்பியிணைப்பு வழிக்கு புறம்பாக வேறு எந்தவொரு நிர்மாணத்திற்குமான கட்டண மதிப்பீடு வெவ்வேறாக சந்தர்ப்பத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். (உதாரணம்: கம்பங்களை மாற்றுதல் மற்றும் புதிய மேலதிக கம்பங்களை இடுதல்)

2.2 உப நிலையங்களுக்கான அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

கட்டணங்கள் (ரூபா)

| தொ. இல. | வழி வகை | விநியோக உப நிலையம் | மொத்த சேவை வழங்கல் உபநிலையம் |
|---|---|---|---|
| 2.2.1 | 100 kVA, ஒற்றைக் கம்பம் | 3,066,400.00 | 560,900.00 |
| 2.2.2 | 160 kVA, ஒற்றைக் கம்பம் | 3,781,000.00 | 3,654,000.00 |
| 2.2.3 | 250 kVA, ஒற்றைக் கம்பம் | 4,607,800.00 | 4,438,300.00 |
| 2.2.4 | 400 kVA, இரட்டைக் கம்பம் | 6,167,200.00 | 5,997,000.00 |
| 2.2.5 | 630 kVA, இரட்டைக் கம்பம் | 7,832,700.00 | 8,143,600.00 |
| 2.2.6 | 1000 kVA, பீடத்தில் ஏற்றப்பட்டது | | 10,902,000.00 |
| 2.2.7 | 1000 kVA, உள்ளக உபநிலையம் | | 11,142,300.00 |
| | | | |

அட்டவணை இல. 08

3. கூரைக்கு மேல் பொருத்தப்படும் சூரிய சக்தி பெனல்களுக்கான அனுமதிக்கப்பட்ட அறவீடுகள்

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | இணைப்புச் செலவு (ரூபா) |
|---|---|---|
| **3.1.1** | ஆரம்ப பார்வையிடல் கட்டணம் | 15,000.00 |
| **3.1.2** | சிங்கள் பேஸ் இணைப்பு | 15,100.00 |
| **3.1.3** | திரீ பேஸ் இணைப்பு | 15,800.00 |
| **3.1.4** | மொத்த சேவை இணைப்பு | 21,300.00 |

அட்டவணை இல. 09

குறிப்பு:

1. எந்தவொரு கூரைக்கு மேல் பொருத்தப்படும் சூரிய சக்தி பெனல்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும்போது ஆரம்ப மதிப்பீட்டுக் கட்டணம் அறவிடப்படும். விண்ணப்பமானது LECO தரநிலைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு இணங்கவில்லை என்றால் ஆரம்ப மதிப்பீட்டுக் கட்டணத்தின் 50% மீளளிக்கப்படும்.
2. தற்போதுள்ள சேவை இணைப்புகளுக்கு இந்தக் கட்டணம் பொருந்தும்.
3. பாவிக்கப்படும் பொருட்களுக்காக சந்தர்ப்பத்திற்கேற்ப கட்டணம் அறவிடப்படும்.
4. தற்போதுள்ள சூரிய சக்தி பெனல் இணைப்பின் உடன்படிக்கைக் காலம் காலாவதியானதன் பின் மீண்டும் இணைக்கப்படும்போது, அது புதிய உடன்படிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் இதை புதிய வழங்கலாகக் கவனத்திற் கொண்டு மேற்கூறப்பட்ட கட்டணங்கள் அறவிடப்படும். ஆனால் தற்போதுள்ள மானியை மீண்டும் பாவிக்க முடியுமானால் புதிய மானிக்கான கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

4. நட்ட உரிமைத்துவத்தின் மதிப்பீட்டு அறிக்கைக்காக அனுமதிக்கப்பட்ட தொழில்சார் கட்டண அறவீடு

| தொ. இல. | சேவை இணைப்பு வகை | இணைப்புச் செலவு (ரூபா) |
|---|---|---|
| **4.1** | மொத்தக் கட்டண வாடிக்கையாளர் | 28,500.00 |
| **4.2** | சில்லறைக் கட்டண வாடிக்கையாளர்– 3 பேஸ் | 14,400.00 |
| **4.3** | சில்லறைக் கட்டண வாடிக்கையாளா – 1 பேஸ் | 7,300.00 |

அட்டவணை இல. 10

5. நானாவித சேவைகளுக்கான அனுமதிக்கப்பட்ட அறவீடுகள்

| தொ. இல. | சேவை வகை | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| **5.1.1** | சேவை இணைப்பு மதிப்பீடு - மீள் பரீட்சித்தல் (1) | 3,300.00 |
| **5.1.2** | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் மின் வழங்கலைத் துண்டித்தல் (2) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| **5.1.3** | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் துண்டிக்கப்பட்ட மின் வழங்கலை மீண்டும் இணைத்தல் | 1,200.00 |
| **5.1.4** | நியதிச்சட்ட துண்டிப்பின் பின் மீண்டும் இணைத்தல் (3) | 1,200.00 |
| **5.1.5** | சில்லறை மானி பரீட்சித்தல் (சாதாரண/நிகர) மானி | 3,400.00 |
| **5.1.6** | வலுசக்தி மானி அல்லது மின் வலுசக்தி /உச்ச வேண்டுகோள் மானி பரீட்சித்தலுக்கு | 6,500.00 |
| **5.1.7** | கணக்கில் பெயர் அல்லது கட்டண வகுதியை மாற்றுதல் (2) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| **5.1.8** | வலுசக்திமானி அல்லது மின் வலுசக்தி/உச்ச வேண்டுகோளில் மானி மாற்றுதல்(2) (LECO தீர்மானித்தால் ) | கட்டணம் அறவிடப்பட மாட்டாது |
| **5.1.9** | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் புதிய சேவை இணைப்பொன்று / மேம்படுத்தலுக்காக பாதை அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் அல்லது கிளைகளை வெட்டி வீழ்த்துதல் | வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களுக்காக நட்டஈட்டுத் தொகை கிராம சேவையாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்டதன் பின் அறவிடப்படும். |
| **5.1.10** | மின் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை பெற்றுக்கொள்ளல் | 20.00 |
| **5.1.11** | நிலுவைத் தொகைக்கான கட்டணம் | துண்டித்தல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்தத் தொகையையும் அறிவித்தல் செய்யப்பட்ட நாள் முதல் 10 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் 15.18(4) வருடாந்த வட்டி விகிதாசாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட வட்டித் தொகை அறவிடப்படும். |
| **5.1.12** | தீர்வையாகாத காசோலைக்கான நிர்வாகக் கட்டணம் | ● வங்கிக் கட்டணம் - ரூபா 100.00 +<br>● தபாற் கட்டணம் - ரூபா 50.00 +<br>● காசோலையில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கான மேலதிகக் கட்டணம் 2% |

அட்டவணை இல. 11

**குறிப்பு:**

1. சேவையை மேற்கொள்ளுமாறு கோரிய தரப்பினரின் குறைபாடுகள் காரணமாக அனுமதிப்பத்திரதாரரினால் வழக்கமான பரிசீலனையை விட மேலதிகமாக பணியிடத்திற்கு செல்ல வேண்டியிருக்கும்போது.
2. இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும்போது கணக்கில் முழு நிலுவைத் தொகையையும் செலுத்தியிருத்தல் வேண்டும்.
3. சட்டரீதியான துண்டிப்பு என்பது இலங்கை மின்சாரச் சட்டத்தின் (2009 இலக்கம் 20) விதிகளின் கீழ் மின்சாரத்தைத் துண்டிப்பதாகும்.
4. 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட சராசரி எடையுள்ள சாதாரண கடன் வட்டி விகிதம்.

இந்த கட்டணங்கள் 2024 ஜனவரி 04ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என்பதுடன் அடுத்த திருத்தம் வரும் வரை அமுலில் இருக்கும்.

உங்களுக்கான செலவுகள் தயாரிக்கப்படும் விதம் தொடர்பான விபரங்கள் தேவையானால் விண்ணப்பத்தை ஒப்படைக்கும் வேளையில் அல்லது மதிப்பீடு செல்லுபடியாகும் காலத்தினுள் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றை மேற்கொண்டால் முழு விபரத்துடனான விலைகள் தயாரிக்கும் விபரம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு 7 நாட்களுக்குள் வழங்கப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்.**

**2024 ஜனவரி 30ஆம் திகதி**

**இறுதி விருப்பாவணம் இல்லாத ஆதனத்திற்காக உரிமைத்துவத்தை முன்வைக்குமாறு விடுக்கும் அறிவித்தல்**
**1998 இல. 21 எனும் உரிமைத்துவம் பதிவு செய்யும் சட்டம் 55வது அத்தியாயம்**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம கிராமத்தில் கெடஸ்தர் வரைபடம் இலக்கம் 520001 வலய இலக்கம் 07 துண்டு இலக்கம் 12, 13, 14 எனும் காணிகளுக்குச் சொந்தக்காரரான இல. 109/03, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம (முகவரி) எனும் முகவரியில் வசித்த ஆரச்சிகே ஹர்பட் விமலசிரி யஹம்பத் (முழுப் பெயர்) என்பவர் 2021.04.29ஆம் திகதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகள் 2024.03.09ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாவது ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம முகவரியில் அமைந்துள்ள காணி உரிமைத்துவ நிருணய பிரதேச அலுவலகத்திற்கு முன் தோன்ற வேண்டும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரிமைத்துவ நிருணயத் திணைக்களம்.**

Repeat Your ad For Better Offers

# மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கிகளின் மகா சபையின் அடகு முகவர்களான வரையறுக்கப்பட்ட பியகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிக் கிளைகளான கடவத்தை,
மாகொள, மாவரமண்டிய, மல்வான, தெல்கொட, பட்டிவில, பியகம, கல்பொத்த மீகஹவத்த, ஹெய்யன்துடுவ, பொல்லேகல, பஹல பியன்வில, கோணவல, மற்றும் பவர்ஹவுஸ் ஆகிய கிராமிய வங்கிகளில் 2022.12.31 வரை அடகு வைத்து 2024.03.08 வரை மீட்டுக்கொள்ளப்படாத தங்க நகைகள் 2024.03.09 - 10 அன்று மு.ப. 10.00 இற்கு மாவரமண்டியவிலுள்ள வரையறுக்கப்பட்ட பியகம பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் பிரசித்த
ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வரையறுக்கப்பட்ட பியகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**"சமுபகார மந்திரய"**
**மாவரமண்டிய - சியம்பலாபே.**
**தொ.பே. இல. :-**
**0112977199 / 0112977071**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக இயந்திரங்கள் வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா தலைமை பொறியியல் பிரிவிற்கு கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நீர்கொழும்பு நிர்வாக பொறியியலாளர் பிரிவின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்களை வழங்குவதற்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   I. **RDA/GAM/CE/TEN/2024/06** - நீர்கொழும்பு நிர்வாக பொறியியலாளர் பிரிவினால் வத்தளை மற்றும் ஜா-எல வேலைத்தளங்களுக்கு பெக்கோலோடர் (JCB) இயந்திரமொன்றினை ஏழு (07) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்.
   II. **RDA/GAM/CE/TEN/2024/07** - நீர்கொழும்பு நிர்வாக பொறியியலாளர் பிரிவினால் நீர்கொழும்பு மற்றும் மடம்பெல்ல வேலைத்தளங்களுக்கு பெக்கோலோடர் (JCB) இயந்திரமொன்றினை ஏழு (07) மாத காலங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்.
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.
தொ.பே 033-2226752, 033-2221020

SELACINE

# பெறுகை அறிவித்தல்
## படல்கும்புர பிரதேச சபை

படல்கும்புர பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை 2024ஆம் வருடத்தின் மார்ச் 01ஆம் திகதி முதல் 2027-02-28ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. **பெறுகைப் படிவங்கள் வழங்குதல்**
2024-02-12ஆம் திகதி முதல் 2024-02-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெறுகைப் படிவங்கள் வழங்கப்படும்.

02. **பெறுகைப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல்**
2024-02-12ஆம் திகதி முதல் 2024-02-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இந்த சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது அல்லது செயலாளர், பிரதேச சபை, படல்கும்புர எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். தபாலில் தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

03. **பெறுகைப் படிவங்கள் திறக்கப்படுதல்**
நியமிக்கப்பட்டுள்ள விலைமனுக்களைத் திறக்கும் குழுவின் முன்னிலையில் 2024-02-27ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**கவனிக்கவும்:** குறைந்தபட்ச விலைக்கோரல் தொகைக்குக் குறைவாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்களுக்காக பணம் செலுத்துதல் மற்றும் உடன்படிக்கையின் கைச்சாத்திடுதல் விலைமனுதாரருக்கு விலைக்கோரல் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படும் கடிதத்திலுள்ள திகதி முதல் ஏழு நாட்களுக்குள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தி முடித்து உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் வேண்டும். உடன்படிக்கையில் கைச்சாத்திடும் சட்டத்தரணிக் கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை விலைமனுதாரர் செலுத்துதல் வேண்டும். உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதன் பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுதாரருக்கு குறித்த ஆதனத்தின் குத்தகை உரிமை ஒப்படைக்கப்படும்.

**மாதாந்த வாடகைத் தொகை:-** மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மாதாந்த வாடகைத் தொகையை உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்துதல் வேண்டும்.

**அட்டவணை**

| தொ. இல. | ஆதனத்தின் தன்மை | நீளம் அகலம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை ரூபா | படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா | குறைந்த பட்ச விலைக் கோரல் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | படல்கும்புர வாரச்சந்தை பலநோக்குக் கட்டிடத்தின் தரைத் தளம் | 5109 சதுர அடிகள் | 20000.00 | 1920000.00 | 2500.00 | 3600000.00 |

மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு வேலை நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

**அலுவலகம் - 055-2250175**
**சபைச் செயலாளர் - 071-0733451**

**டப். எம். பீ. இனோகா,**
**சபைச் செயலாளர்,**
**பிரதேச சபை,**
**படல்கும்புர.**

## மரண சாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்
**1998ஆம் ஆண்டின் 21ஆம் உரித்துப் பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

களுத்துறை மாவட்டத்தின் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் குடா வஸ்கடுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 72 கண்ட இல. 01 பத்திர இல. 3 துண்ட இல. 530164ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த பண்டாரகம வீதி குடா வஸ்கடுவ (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட மனிக்குஹேவகே ஜயசேகர (முழுப் பெயர்) எனும் நபர் 24.05.2021ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 2ம் மாடி களுத்துறை மாவட்ட செயலகம் களுத்துறை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத்திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 24.03.08ம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## மரணசாசனமில்லாத சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்
**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

ஹம்பந்தொட்ட மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேச செயலாளர் பிரிவில் சிட்டினமலுவ மேற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல.: 830120, கண்ட இல.: 02, பத்திர இல. ….., துண்டு இல. 197 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த 'மயிபால', சிட்டினமலுவ, பெலிஅத்த என்ற முகவரியில் வசித்த கஹந்தாவ கீகண ஆராய்ச்சிகே அட்லின் எனும் ஆள் 2018.04.10 ஆம் திகதியன்று மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இருப்பின், பெலிஅத்த பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.11 ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

## இலங்கை வங்கி
### ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டம், 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச்சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

இலக்கம் 310, ஸ்ரீ சங்கராஜா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட ஹம்சா ரெடர்ஸ் தனியார் நிறுவனத்தாரின் பொறுப்புகளுக்காக 15/2, 15/4, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் பிட்டகந்த வீதி, மஹய்யாவ, கண்டி எனும் முகவரியிலுள்ள அடமானம் வைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023.12.15ஆம் திகதியிட்ட 2363ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.12.15ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் டீ அன்ட் எச் ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச். துசித கருணாரத்ன அவர்கள் 2024.03.14ஆம் திகதி 10:00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

1. "டாப்பிங்டன் எஸ்டேட்" என அழைக்கப்படும் வளாகத்தின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.டி.அதிஹெட்டி தயாரித்த 2007.05.18ஆம் திகதியிடப்பட்ட 4441Bஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 03 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்காவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில், மாபனவத்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மஹய்யாவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் இல. 19/1, பிட்டகந்த வீதி வளாகத்தினைப் பிரிக்கும் தடுப்பு சுவரினையும்

   கிழக்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 02 மற்றும் காணித்துண்டு 05 இனையும் தெற்கில் 15/5, பிட்டகந்த வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட வளாகத்தினையும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 06 என அடையாளமிட்ட வீதியையும் மேற்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 4 ஐயும் வழி மீதான உரிமையுடன் அக்காணியில் காணப்படும் அனைத்துடனும் குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 5 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது பத்து தசம் மூன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ஆர்0-பே10.30) அல்லது (0.02605 ஹெக்டெயர்கள்) பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஆறு பூச்சியம் ஐந்து ஹெக்டெயர்கள் பரப்பளவுடன் A360/255 கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. "டாப்பிங்டன் எஸ்டேட்" என அழைக்கப்படும் வளாகத்தின் உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.டி. அதிஹெட்டி தயாரித்த 2007.05.18ஆம் திகதியிடப்பட்ட 4441Bஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட துண்டு 04 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுள் கங்காவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில், மாபனவத்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் மஹய்யாவ எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் 19/1, பிட்டகந்த வீதி என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தினையுடைய வளாகத்தினைப் பிரிக்கும் தடுப்பு சுவரினையும் கிழக்கில் குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 03 இனையும் தெற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் காணித்துண்டு 06 மற்றும் 07 இனையும் மேற்கில் அரசின் புகையிரத வீதிக்கான ஒதுக்கம் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது. அக்காணியில் காணப்படும் அனைத்துடனும் இக்காணித்துண்டானது பதினொரு பேர்ச்சுகள் (ஏ0-ஆர்0-பே11) அல்லது (0.02782 ஹெக்டெயர்கள்) பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஏழு எட்டு இரண்டு ஹெக்டெயர்கள் பரப்பளவுடன் A360/255 கண்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட துண்டு 3 மற்றும் 4 என்பவை உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல். பெர்னாண்டோ தயாரித்த 1970.10.24 ஆம் திகதியிடப்பட்ட 967ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 10 மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.எஸ்.எல். பெர்னாண்டோ தயாரித்த 969ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணியினது பகுதியும் தொகுதியுமாகும்.

**பணம் செலுத்தும் முறை :** ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. பெ.சே.வரி (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும், சேவைக் கட்டணங்களும்

ஏலம் நடைபெற்ற திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் அத்துடன் விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏலநாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி :** பிட்டகந்த வீதி கண்டி வழியாக 150 மீற்றர்கள் 15A எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட வளாகம் வரையில் சென்று மேற்குறிப்பிட்ட வளாகத்தின் வட எல்லை வழியே செல்கின்ற வீதியில் வலதுபுறமாக திரும்பி 30 மீற்றர்கள் செல்கையில் காணித்துண்டு 3 இனை அடையலாம். 15/A வளாகத்தின் தெற்கு எல்லை வழியாக செல்கின்ற பொது வீதி வழியாகச் சென்று காணித்துண்டு 4 இனை அடையலாம்.

"ஏலவிலைகூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் நிறுவன அறவீட்டுப் பிரிவினைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 0112386079"

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,**

**இலங்கை வங்கி**
**நிறுவன அறவீட்டுப் பிரிவு**
**3ஆம் தளம்**
**இல-01, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு-01**

**திருமதி.ஏ.சி.எச். அத்துகோரளை**
**மூப்புநிலை முகாமையாளர்**
**நிறுவன அறவீடு**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2024.01.08 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2018.12.11 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 299, பிரசித்த நொத்தாரிசு திருமதி ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2022.09.12 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4913 ஆகியவற்றின் பேரில் கொத்மலே, புதிய நகரம் எனும் முகவரியில் அமைந்த Kotmale Food Products பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து தொழிற்படு மூலதனக் கடன் மீது 2023.10.04 வரை முதலும் வட்டியும் ரூ. 2,544,448.77 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரூபாய் எழுபத்தேழு சதமும்) அத்துடன் ரூ.2,438,275.30 (இரண்டு மில்லியன் நானூற்று முப்பத்தெட்டு ஆயிரத்து இருநூற்றெழுபத்தைந்து ரூபாய் முப்பது சதம்) மீது ஆண்டுக்கு 4% வீதத்தில் 2023.10.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 1ஆவது தவணைக் கடன் மீது 2023.10.04 வரை முதலும் வட்டியும் ரூ. 47,687,425.04 (நாற்பத்தேழு மில்லியன் அறுநூற்று எண்பத்தேழு ஆயிரத்து நானூற்று இருபத்தைந்து ரூபாய் நான்கு சதமும்) அத்துடன் ரூ. 37,919,707.61 (முப்பத்தேழு மில்லியன் தொள்ளாயிரத்துப் பத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று ஏழு ரூபாய் அறுபத்தொரு சதம்) மீது ஆண்டுக்கு 18.11% வீதத்தில் 2023.10.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2ஆவது தவணைக் கடன் மீது 2023.10.04 வரை முதலும் வட்டியும் ரூ.3,561,894.95 (மூன்று மில்லியன் ஐந்நூற்று அறுபத்தொரு ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் தொண்ணூற்றைந்து சதமும்) அத்துடன் ரூ.3,491,337.23 (மூன்று மில்லியன் நானூற்று தொண்ணூற்றொரு ஆயிரத்து முந்நூற்று முப்பத்தேழு ரூபாய் இருபத்து மூன்று சதம்) மீது ஆண்டுக்கு 7.25% வீதத்தில் 2023.10.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் (Moratorium) சட்ட இசைவுத் தாமத உப கடன் மீது 2023.10.04 வரை முதலும் வட்டியும் ரூ. 4,753,335.25 (நான்கு மில்லியன் எழுநூற்று ஐம்பத்து மூன்றாயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் இருபத்தைந்து சதமும்) அத்துடன் ரூ. 4,209,518.84 (நான்கு மில்லியன் இருநூற்றொன்பது ஆயிரத்து ஐந்நூற்றுப் பதினெட்டு ரூபாய் எண்பத்து நான்கு சதம்) மீது ஆண்டுக்கு 15.50% வீதத்தில் 2023.10.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. பிரசித்த நொத்தாரிசு திருமதி எச்.எம்.யூ.பீ. ஹேரத் அத்தாட்சிப்படுத்திய 2018.12.11 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 299, பிரசித்த நொத்தாரிசு திருமதி ஆர். வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 2022.09.12 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4913 ஆகியவற்றின் பேரில் தொழிற்படு மூலதனக் கடன் மீது ரூ. 2,544,448.77 (இரண்டு மில்லியன் ஐந்நூற்று நாற்பத்து நான்கு ஆயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு ரூபாய் எழுபத்தேழு சதமும்) 1ஆவது தவணைக் கடன் மீது ரூ.47,687,425.04 (நாற்பத்தேழு மில்லியன் அறுநூற்று எண்பத்தேழு ஆயிரத்து நானூற்று இருபத்தைந்து ரூபாய் நான்கு சதமும்) 2ஆவது தவணைக் கடன் மீது ரூ.3,561,894.95 (மூன்று மில்லியன் ஐந்நூற்று அறுபத்தொரு ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் தொண்ணூற்றைந்து சதமும்) (Moratorium) சட்ட இசைவுத் தாமத உப கடன் மீது ரூ. 4,753,335.25 (நான்கு மில்லியன் எழுநூற்று ஐம்பத்து மூன்றாயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் இருபத்தைந்து சதமும்) அத்துடன் 2023.10.05 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இவ் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நாவலப்பிட்டியக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டத்தில், கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் ரம்பொட கோரலையில் கொத்மலே பிரதேச சபை எல்லைகளுள் ரம்பொட 474ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் பானம்கம்மான மற்றும் சங்கிலிபாலம கிராமத்தில் அமைந்த சர்வயர் ஜெனரால் அதிகாரமளித்த மற்றும் அவரது பொறுப்பில் வைக்கப்பட்ட வரைபடம் இல. என்.யு.1966 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 12 என அடையாளமிட்ட பலபொகுன வத்த என அழைக்கும் பிரிக்கப்பட்ட ஜயபூமிக் காணித்துண்டு, வடக்கில் காணித்துண்டுகள் 17 1/2 மற்றும் 13உம், கிழக்கில் காணித்துண்டு 13 மற்றும் 14உம், தெற்கில் காணித்துண்டு 14 மற்றும் 9 உம், மேற்கில் மேற்கூறிய வரைபடம் இல. என்.யு.1966 இன் விபரம் மற்றும் அளவையின் பிரகாரம் காணித்துண்டு 11 மற்றும் 17 1/2உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டயார்கள் பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து நான்கு (ஹெக். 0.054) விஸ்தீரணமுடைய காணியும் காணியில் காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி நுவரெலியா காணிப்பதிவகத்தில் LDO Q 07/97 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டத்தில், கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் ரம்பொட கோரலையில் கொத்மலே பிரதேச சபை எல்லைகளுள் ரம்பொட 474ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் பானம்கம்மான மற்றும் சங்கிலிபாலம கிராமத்தில் அமைந்த சர்வயர் ஜெனரால் அதிகாரமளித்த மற்றும் அவரது பொறுப்பில் வைக்கப்பட்ட வரைபடம் இல. என்.யு.1966 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 10 என அடையாளமிட்ட பலபொகுன வத்த என அழைக்கும் பிரிக்கப்பட்ட ஜயபூமிக் காணித்துண்டு, வடக்கில் காணித்துண்டு 7 மற்றும் 17 1/2 உம், கிழக்கில் காணித்துண்டு 17 1/2 மற்றும் 11உம், தெற்கில் காணித்துண்டு 11 மற்றும் 9 உம், மேற்கில் மேற்கூறிய வரைபடம் இல. என்.யு.1966 இன் விபரம் மற்றும் அளவையின் பிரகாரம் காணித்துண்டு 9,8 மற்றும்7 உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டயார்கள் பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஏழு (ஹெக். 0.037) விஸ்தீரணமுடைய காணியும் காணியில் காணப்படும் சகலதும் ஆகும். நுவரெலியா காணிப்பதிவகத்தில் LDO Q 07/98 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. **உரிமையாளர் வைத்திருக்கும் இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை விற்பனை செய்யலாகாது.**
2. **உரிமையாளர் வைத்திருக்கும் இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றினை விற்பனை செய்யலாகாது.**
3. **இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.**
4. **இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.**
5. **இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீரப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.**
6. **அரசாங்க அதிபரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இன்றேல் அப்புறப்படுத்தவோ கூடாது.**
7. **பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் கைமாற்றக்கூடாது.**

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**இலங்கை வங்கி,**
**நாவலப்பிட்டிய**

**டீ.எம்.பீ. திசாநாயக்க**
**முகாமையாளர்**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

# இலங்கை வங்கி

**நீண்ட கால குத்தகை அடிப்படையில் 02 CRM அலகுகளை நிறுவுவதற்காக பொருத்தமான கட்டடங்கள் தேவைப்படுகின்றன**

## கொடகம சந்தி
## கம்சபா சந்தி

**உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- கட்டடங்கள் பிரதான வீதிக்கு முகப்பாக குறைந்தபட்சம் 8 அடி அகல இடைவெளியைக் கொண்டு இருத்தல் வேண்டும்.
- தரைப்பரப்பு குறைந்தபட்சம் 8' x 14' (112 சதுர அடி அளவைக் கொண்டிருத்தல் வேண்டும்).
- 30 AMP மின்சார இணைப்பு இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமானளவு இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் அடையக்கூடிய இடத்தில் இருத்தல் வேண்டும்.
- வளிச்சீராக்கல் இயந்திரமொன்றை நிறுவுவதற்குப் போதுமானளவு இடவசதி இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள் ஒப்புதல் வழங்கப்பட்ட கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி ஆகியவற்றின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை ஆகியவற்றை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் 14 நாட்களுள் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'CRM Cubicle – Godagama Junction' அல்லது 'CRM Cubicle – Gamsaba Junction' என குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம் தெற்கு),**
**இலங்கை வங்கி,**
**மேல் மாகாணம் (தெற்கு) மாகாண அலுவலகம்,**
**இல.: 175, ஹைலெவல் வீதி,**
**நுகேகொட.**

**தொலைபேசி : 0112809125/ 0112809126**
**தொலைநகல் : 0112809238**
**மின்னஞ்சல் : bocwps@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

**வெகுசன ஊடக அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு – 07 முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தின் தரைத் தளத்தை குத்தகை வாடகை அடிப்படையில் வியாபார நிறுவனமொன்றின் அலுவலகமொன்றுக்காக வழங்குதல்**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தின் தரைத் தளத்தை குத்தகை வாடகை அடிப்படையில் வியாபார நிறுவனமொன்றின் அலுவலகமொன்றுக்கு வழங்குவதற்காக (குறைந்தபட்சம் 02 வருட காலத்திற்கு) திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இயைபுடைய விபரங்கள் பின்வருமாறாகும்.

| அமைவிடம் | | அளவு (சதுர அடி) | மாதாந்த வாடகை பெறுமதி |
|---|---|---|---|
| இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 | தரைத் தளம் | 6900 | ரூபா 552,000.00 |

**குறிப்பு**

01. அரச மதிப்பீட்டு ஒப்பீட்டளவில் அதிகூடிய குத்தகை வாடகையை சமர்ப்பித்துள்ள கேள்விதாரருக்கே கேள்வி கையளிக்கப்படும்.

02. தகைமை பெறும் கேள்விதாரர் இணங்கும் மாதாந்த குத்தகை வாடகை பெறுமதியின் பிரகாரம் 6 மாதத்திற்கான குத்தகை வாடகை பெறுமதியை பிணைத் தொகையாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன் நீர் மற்றும் மின்சார பிணைத் தொகையாக 200,000.00 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும். குத்தகை காலத்தின் இறுதியில் இந்தப் பணம் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் மீளளிக்கப்படும்.

03. குத்தகைதாரர் மேற்கூறிய வியாபார அலுவலக இடத்தை அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதியை வேறொருவருக்கு விற்றல், இடமாற்றுதல், ஈடு வைத்தல் அல்லது இடைக்கால குத்தகைக்கு வழங்குதல் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவரின் எழுத்துமூல முன் அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு முன் அனுமதியின்றி வேறொருவர் அனுபவிப்பதாக உறுதி செய்யப்பட்டால் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யும் அதிகாரம் முதலாம் தரப்பினரான இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் வசம் உள்ளதென இரண்டாம் தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

04. குத்தகைதாரரால் வழங்கப்படும் உத்தரவாதம் முதலாம் தரப்பினரால் பொறுப்புகூற மாட்டாது என்பதுடன் நீர் மற்றும் மின்சாரம் இணைப்பிற்கு இயைபான வேலைகள் போன்றே தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்து கொடுத்தல் முதலாம் தரப்பினரின் பொறுப்பாகும். இதன்போது குறித்த கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள்செலுத்துவதற்கு இரண்டாம் தரப்பினர் பொறுப்பானவர்.

05. கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா தொகையை இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் சிறாப்பருக்கு 2024-02-09ஆம் திகதி முதல் 2024-03-01ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் செலுத்தி கேள்விப் படிவங்களை வழங்கல் மற்றும் வியாபார பதில் உதவி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இந்த கேள்விப் படிவங்களில் மட்டுமே கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

06. வியாபார இடப்பரப்பு மற்றும் கட்டிட அமைப்பை நேரடியாகப் பரீட்சித்தல் 2024-02-09ஆம் திகதி முதல் 2024-02-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மேற்கொள்ளலாம்.

07. 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் 1,000,000.00 ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்றை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையினுள் செயற்படும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றுக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பிணை முறி சகிதம் சகல கேள்விதாரர்களும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்விப் பிணை வைப்பின் பற்றுச்சீட்டின் பிரதி இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் அனைத்து கேள்விகளும் நிராகரிக்கப்படும்.

08. கேள்விப் படிவங்கள் 2024-03-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இல. 224, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07 முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தின் தரைத் தளத்தை குத்தகை வாடகை அடிப்படையில் வியாபார நிறுவனமொன்றின் அலுவலகமொன்றுக்கு வழங்குவதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொண்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் தேவையானால் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை நிர்வாக அதிகாரி (க.ஆ) 011-2580371/ 011-2587845 அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகளுக்கிடையில் பொருத்தமான கேள்வியை ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு திணைக்கள பெறுகைக் குழுத் தலைவருக்கு உரிமை உள்ளது என்பதுடன் அந்தக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். கேள்விப் படிவத்தைத் தயாரித்தல் தொடர்பிலான எந்தவொரு செலவிற்கும் இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
**இல. 303, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**1. கடன் தொடர்பு இல. 83449947, 83450293, 83450434.**

கண்டி, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை இல. 640/09 ஐச் சேர்ந்த திருமதி. ஜயசிங்ஹ ஆரச்சிகே மங்கலிகா ஜயசிங்ஹ ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.12.22ஆம் திகதி 2364 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 டிசெம்பர் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினகரன், தினமின, மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷனஸ் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரீ. கருணாரத்ன அவர்கள் 2024 மார்ச் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இலங்கை வங்கி பகமூனக் கிளை நிலமனையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

1. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல.2 வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01 வடக்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு 03உம், கிழக்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு 2உம், தெற்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி2உம், மேற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மாவத்தையில் வரி மதிப்பு இல. 652/2 ஐக் கொண்ட நிலமனையும், எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் மூன்று பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1 பே.3) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் எட்டு ஏழு ஆறு (ஹெக்.0.10876) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 588/35இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வோர்ட் இல.2 வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 02 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 02 வடக்கில் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி 3உம், கிழக்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மாவத்தை வரி மதிப்பு இல. 664 மற்றும் 664/1 ஐக் கொண்ட நிலமனைகளும், தெற்கில் வரைபடம் இல.919 இல் x-y-z-என அடையாளமிட்ட ஓட்டுப் பாதையும் z-z 1 15 அடி அகல வழிப் பாதையும், மேற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் வரிமதிப்பு இல. 652/2 ஐக் கொண்ட நிலமனையும், வரைபடம் இல. 4952இல் காணித்துண்டு இல. 1உம் எல்லைகளாகக் கொண்டு எட்டு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0பே.8) அல்லது ஹெக்டெயார் பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு பூச்சியம் இரண்டு (ஹெக்.0.0202) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 660/115இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் வெலட்டயில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புர தயாரித்த 2010 பெப்ரவரி 22 திகதியிட்ட வரைபடம் இல. 4952இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 03 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 03 வடக்கில் மாபல் குரெ மாவத்தையும், கிழக்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை வரி மதிப்பு இல. 642/2 ஐக் கொண்ட நிலமனையும், தெற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை வரிமதிப்பு இல. 664 மற்றும் 644/1 ஐக் கொண்ட நிலமனைகளும், மேற்கில் இவ்வரைபடத்தில் காணித்துண்டு 2உம் வரைபடம் இல. 919 இல் காணித்துண்டு பி 3உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஒன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சுகள் விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள் பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 660/116இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட பிரதேச செயலகப் பிரிவில் கண்டி மா நகர சபை எல்லைகளுள் கங்கவட்ட கோரளை வெலட்ட கிராம சேவகர் பிரிவில் பேராதனை வீதியில் தற்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்த "தலஉயன்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ.பாலம்கும்புர தயாரித்த 1980 ஆகஸ்ட் 14 திகதியிட்ட வரைபடம் இல. 919இல் z-y-z-z1 என எல்லை நிர்ணயித்த 15 அடி அகல பிரவேசப் பாதை மேற்கூறிய வடக்கில் வரைபடத்தில் காணித்துண்டு பி1 மற்றும் பி2 மற்றும் காணித்துண்டு சீயும், கிழக்கில் வரிமதிப்பு இல. 644ஐக் கொண்ட நிலமனையும் மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு பி 2 மற்றும் காணித்துண்டு சீயும், தெற்கில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, மேற்கூறிய வரைபடத்தில் காணித்துண்டு சீ மற்றும் காணித்துண்டு பி 2உம், மேற்கில் காணித்துண்டு சீ மற்றும் பி 2 உம் எல்லைகளாகக் கொண்டு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0 பே.24.25) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ 452/130இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் தொலை பேசி இல. 066-2256580 ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் 2024 பெப்ரவரி 27 தொடக்கம் சுதந்திரமாக பரீட்சிக்கலாம்."

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.கே.எஸ்.எஸ்.கே. கமகே,**
**முகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**பகமூனக் கிளை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை பொது சுகாதார பரிசோதகர்களின் சிக்கனம் மற்றும் கடன் கொடுக்கல்வாங்கல் நலன்புரி கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்

2024.02.23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பாணந்துறையில் நெவ்ரோ ஹோட்டலில் நடைபெறும். இக்கூட்டத்தில் அனைத்து சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

**கௌரவ செயலாளர்,**
**எஸ். தீரசிங்க.**
**தொடர்புகளுக்கு: 011 2635665**

## பதவி வெற்றிடம்

மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம்.

மகளிர் விவகார, சிறுவர் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தில் சட்ட உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு தகுதி வாய்ந்த பிரஜைகளிடமிருந்து விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியானது 2024.03.09 ஆகும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகுதிகள் மற்றும் ஆட்சேர்ப்பு முறைகள் தொடர்பான தகவல்களை www.stateminsamurdhi.gov.lk அல்லது www.nspd.gov.lk வலைத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளை பிரகாரம்

**செயலாளர்,**
**மகளிர், சிறுவர் விவகாரம்**
**மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

## அறிவித்தல்

### திருகோணமலை மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கை பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் 112 ம் பிரிவின் கீழான விண்ணப்பம்.

வழக்கு இல : TR/192/2024

1. லாவண்யா சியானந்தன்
திருமணத்திற்கு முன்
லாவண்யா ஸ்ரீதரன்
இல. 9/1,
வித்தியாலய ஒழுங்கை,
திருகோணமலை.

2. பூர்ணிமா வாகீசன்
திருமணத்திற்கு முன்
பூர்ணிமா ஸ்ரீதரன்
இல.20, 4வது ஒழுங்கை,
கண்ணகிபுரம்,
உவர்மலை,
திருகோணமலை.

மனுதாரர்கள்

மேற்குறித்த வழக்கானது மேலே பெயர் குறிக்கப்பட்ட மனுதாரர்களினால் மனுவின் ஆதன அட்டவணையில் குறிப்பிடப்படும் திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவிலினதும் அதன் தரும நம்பிக்கைச் சொத்துகளினதும் உரித்தாக்கல் / உடமையாக்கல் (Vesting Order) கட்டளையை நிவாரணமாகக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிடப்பட்ட வழக்கில் மனுவில் கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 27.02.2024ம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி கோப்பிடுமாறு அறிவித்தல் தரப்படுகின்றது.

**"மன்றின் கட்டளைப்படி"**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்,**
**திருகோணமலை**

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

N-21

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் அச்சக மூலம் பொருட்கள் வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

| Item | Qty | Bid Reference No | Bid fee | Bid Bond |
|---|---|---|---|---|
| CTP Polymer Plate (D.W.F95NM) - 635 mmx 762 mm-0.95mm | 100 sheets | SCP02/NCB01/DWF95/2024-7 | Rs.3000.00 | 70,000.00 |

விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதிதினம் - 2024.03.04 ஆந் திகதி பி.ப.2.00 மணி

ஒவ்வொரு விலைமனு ஆவணத்திற்கும் ரூபா 3000 மீளளிக்கப்படாத மனுக்கட்டணம் செலுத்த வேண்டும். விலைமனு ஆவணங்கள் கடமை நாட்களில் மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 மணிவரை வழங்கப்படும். 2024.03.01 ஆந் திகதி பி.ப.2.00 இற்கு முன் கீழே குறிப்பிட்ட அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.4.15 மணி வரை 011-2694898 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்.
**பொருட்கொள்வனவு குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**2024.02.12**

**தொலைபேசி : 011-2694898**
**இணையதளம் : gpsupplylocal@gmail.com**

www.adz.lk
it's what you want

Daily News Classifieds, the Housewives' companion

### கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு பற்றிய அறிவித்தல்

பொரலஸ்ஸ அன்ட் சன்ஸ் கம்பனி (பிறைவட்) லிமிட்டட் என்ற கம்பனி 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5ஆம் பிரிவின் படி, 2024ஆம் ஆண்டு தை மாதம் 29ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்பதை அச்சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கேற்ப இத்தால் அறியத்தருகின்றோம்.

**கம்பனியின் பெயர்:** பொரஸ்ஸ அன்ட் சன்ஸ் கம்பனி (பிறைவட்) லிமிட்டட்
**கம்பனி பதிவு இலக்கம்:** PV 00292988
**பதிவு செய்யப்பட்ட முகவரி:** பிரதான வீதி, மெதிரிகிரிய

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**கம்பனி செயலாள**ர்.
9 மாசி 2024

### மரணசாசனமில்லாத சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் கெஸ்பாவ பிரதேச செயலாளர் பிரிவில் வெவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல.: 521251, கண்ட இல.: 01, பத்திர இல. 01, துண்டு இல. 173 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த பிலியந்தல, வெவல, கங்கபட வீதி, 10/4, என்ற முகவரியில் வசித்த ஹேவா தாபரேகே காந்தி எனும் ஆள் 2023.11.14 ஆம் திகதியன்று மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இருப்பின், கெஸ்பேவ பண்டாரகம வீதி, 227/5A/3 என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.09 ஆம் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**

**பிரிவு 5**

மாத்தறை மாவட்டத்தின் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் வல்கம வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 820013 கண்ட இல 01 பத்திர இல 01 துண்ட இல 57 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த. கிங்ஸ் கார்டன் வல்கம வடக்கு, மாத்தறை எனும் விலாசத்தைக் கொண்ட நந்தசிறி வனிகநாயக்க யாபா எனும் ஆள் 2022.10.23 மரணமடைந்துள்ளார் அவரது உரித்தாளர் எவரேனும் இல.360, பள்ளியமுல்ல, மாத்தறை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.03.09 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை
### புதிய களனிப் பாலத்தின் நிர்மாண செயல்திட்டம்

## அறிவித்தல்

தூணின் மேல், அதிவேக நெடுஞ்சாலையில் புதிய களனி பாலத்தின் இங்குருகடே வெளியேறும் வழிகள் மட்டும் அத்தியாவசிய அபிவிருத்தி பணிகள் காரணமாக 2024 பெப்ரவரி 09 வெள்ளிக்கிழமை இரவு 9.00 மணி முதல் 12 பெப்ரவரி 2024 திங்கட்கிழமை காலை 5.00 மணி வரை மூடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்

இந்த காலப்பகுதியில் போக்குவரத்துக்காக கண்டி வீதி. பேஸ்லைன் வீதி மற்றும் புதிய களனி வீதியை பயன்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

## 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில் தடகமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 510616 கண்ட இல. 02 - 00001 பத்திர இல. 11/12 துண்ட இல. 21/119/2 என்ற காணியை உடமை கொண்டிருந்த 21/119/2 தொபகஹலந்த வந்த தடகமுவ வேயன்கொட (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட ஜயவீரகே தயா சரனகுப்த (முழுப்பெயர்) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 49/1/B படதொலேபார நிட்டம்புவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.03.09ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

### மரண சாதனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் கவ்தான மேற்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521007 கண்ட இல. 01 பத்திர இல. 01 துண்டு இல. 84ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 10, 5ஆம் ஒழுங்கை, பலல் வீதி, கவ்தான, தெஹிவளை (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட ஹிட்டினமலுவகே ஜினதாச ஆரியசிரி (முழுப் பெயர்) என்பவர் 2020-02-02ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 3/5, 3ஆம் ஒழுங்கை, காலி வீதி, இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024-03-08ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

### தவணை அறிக்கை வழங்குவதற்கு கட்டளையிடும் முன்மொழிவு
### உள்ளூராட்சி அறிவித்தல்
### படல்கும்புர பிரதேச சபை

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 139ஆம் அத்தியாயத்தின் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம், படல்கும்புர பிரதேச சபை முகாமைத் துவக் குழுவினால் 2024 ஜனவரி மாதம் 30ஆம் திகதி 249ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**டபிள்யு. எம். பீ. இனோகா,**
**சபைச் செயலாளர்,**
**படல்கும்புர பிரதேச சபை.**

2024 பெப்ரவரி 06ஆம் திகதி.

**முன்மொழிவு**

''1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 139ஆம் அத்தியாயத்தின் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம், படல்கும்புர பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் வரிப்பண விடயத்திற்காக ஏதாவதொரு வீடு, கட்டிடம், காணி அல்லது குடியிருப்பின் வருடாந்த பெறுமதியை மதிப்பிடும் வேலைக்காக பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளை திட்டமிடுதலை இலகுவாக்குதல் மற்றும் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல்களை அறிந்துகொள்ளும் சட்டத்தின் 3ஆம் மற்றும் 5ஆம் அத்தியாயங்களில் விடயத்திற்கான தகவல் முறைமையை வடிவமைத்துக் கொள்வதற்காகவும் மேற்கூறப்பட்ட ஏதாவது ஆதனத்தின் உரிமையாளர் அல்லது வதிவாளர் அங்கு வாடகை அல்லது வருடாந்த பெறுமதி அல்லது அதன் விஸ்தீரணம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக வருடாந்த அறிக்கையை வழங்குவதற்கு கட்டளையிடப்படல் வேண்டுமென, படல்கும்புர பிரதேச சபை முன்மொழிவு செய்கின்றது.''

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம்
### (460 ஆம் அத்தியாயம்)
### 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈட்டு பரீட்சைகள் 2024.02.09 ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக்காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.11.02 ஆம் திகதி 2304/42 இலக்கஅதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | குருநாகல் | | |
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 332 தலதபிட்டிய | | |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | DIVPP/LND/LA/ACQUI/3-2/332/15 4-3/10/2019-MV/465-H | | |
| வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல | முழு காணியின் விஸ்தீரணம் |
| இ.கி.வ இலக்கம் 3114 இல் பிற்சேர்க்கை இல 1, தாள் இலக்கம்1 | கம்புவடவன | 364 | 0.1110 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3117 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 2 | நிப்புனகம | 21,22,24,26,27 வரை | 1.2302 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3119 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 2 | பலுகஸ்வெவ | 138,139,142,143,145,146,148, 150,151,153,154,155,156,157, 158,159,161,162,163,164,166, 168,170,173,174,175,176,177, 180 வரை | 1.8468 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர், காரியாலயம், பொல்பித்திகம.**
**திகதி : 30.01.2024**

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

### அபிவிருத்தி லொத்தர் சபை

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### லொத்தர் சீட்டு பொதிகளை விநியோகிப்பதற்காக தூதஞ்சல் சேவையை பெற்றுக் கொள்ளல்

**Bid No.: DLB/PRO/2024/05**

அபிவிருத்தி லொத்தர் சபைக்காக லொத்தர் சீட்டு பொதிகளை விநியோகிப்பதற்காக தூதஞ்சல் சேவையை பெற்றுக் கொள்வதற்காக ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக கீழ் மட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும்.
03. 2024.02.08 ஆம் திகதியிலிருந்து 2024.02.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான 2,360 ரூபா மற்றும் பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிற்கு வழங்குனரினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பரீசித்து அத்துடன் கொள்வனவும் செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
04. விலைமனுக்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனுக்கோரல் ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறான விபரமான அனைத்து தகவலையும் விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.
06. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனுக்கள் இரு பிரதிகளில் அவற்றை அடக்கியுள்ள தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் **'Obtaining of Courier Service for the distribution of lottery ticket parcels'** என குறிப்பிடப்பட்டு **2024.03.01 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு** பிந்தாமல் வந்தடையும் வகையில் தலைவர், கீழ் மட்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
07. விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.03.01 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே அவைகள் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**கீழ்மட்ட பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 011 4824824**

**www.dlb.lk**
**07.02.2024**

### பெறுகை அறிவித்தல்

## மத்திய மாகாண சபை பிரதான மற்றும் கல்வியமைச்சு

## தேசிய போட்டி விலைமனுக் கோரல் (NCB)

1. மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வியமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள நிர்மாண கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுவதும் மேற்படி கைத்தொழில் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட பொறியியல் பெறுமானப் பத்திரத் தொகையும் ஒப்பந்தகாலமும் கீழ்க்காணும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
2. குறித்த கைத்தொழிலுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி **அப் பட்டியலில் குறிப்பிடப்படும் தரத்தில் நாளதுவரைக்குட்படுத்தப்பட்டு** (CIDA) **இருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியற்படுத்தப்படாது இருத்தல் வேண்டும்.**
3. இது பற்றிய மேலதிக விபரங்களை பிரதி மாகாண பணிப்பாளர் (பொறியியல் சேவை) கல்விக் கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு கட்டிடம், மூன்றாம் மாடி, யட்டிநுவர வீதி, கண்டி அலுவலகத்தில் (தொ.பே. இல. 081-2203892) பெற்றுக் கொள்ள முடிவதுடன் அவ் அலுவலகத்தில் குறித்த ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.
4. குறித்த கேள்வி ஆவணக் கட்டணங்களை மத்திய மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) இற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை பிரதி மாகாணப் பணிப்பாளர் (பொறியியல் சேவை) கல்விக் கட்டிடங்கள் அலுவலகத்திற்கு சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.02.09 முதல் 2024.02.29 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.
5. இது சம்பந்தமாக கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.02.19 மு.ப. 10.00 இற்கு பிரதி மாகாண பணிப்பாளர் (பொறியியல் சேவை) கல்விக் கட்டிடம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கட்டிடம் மூன்றாம் மாடி, யட்டிநுவர வீதி, கண்டி அலுவலகத்தில் நடைபெறும் அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
6. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.03.01 மு.ப. 10.00 வரை கண்டி, பல்லேகெலேயில் அமைந்துள்ள மத்திய மாகாண முதல் மற்றும் கல்வியமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக்குழு, முதல் மற்றும் கல்வியமைச்சு, மாகாண சபை கட்டிடத் தொகுதி, பல்லேகெலே, குண்டசாலை என்ற முகவரிக்கு கிடைக்கச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
7. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு முதல் மற்றும் கல்வியமைச்சு செயலாளரின் பெயரில் அட்டவணையில் குறிப்பிடப்படும் கால எல்லைக்கு செல்லுபடியாகுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியியல் (CGF) மூலம் அல்லது பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்று அல்லது மத்திய மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நிதி இடம் காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை சகல கேள்வியுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களில் கோரப்பட்டுள்ள தொழில்நுட்ப நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடனான ஆவணங்களின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. குறித்த தொழில்நுட்ப நிதி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திராத கேள்விதாரர்களின் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
10. சகல கேள்விகளினதும் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரரால் 1987 இல. 3 எனும் பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. இக் கேள்வி அழைப்பு தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) முறையில் செயற்படுத்தப்படும். இதன் கீழ் பெறுகை மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களுக்கு வரி இன்றிய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 50 இற்கு குறைவானதுடன் 2021.02.18ம் திகதிய அரச நிதி சுற்றுநிருபம் 04/2016(iv) இன் கீழ் CIDA தரம் குறிப்பிடுதல் மற்றும் பிரதேச கேள்விதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொ இல. | கேள்வி இலக்கம் | கைத்தொழில் | பெறுகை நிதி முறைகள் | பொறியியல் அளவுப் பத்திர பெறுமதி (வெட் இன்றி) (ரூபா) | தேவைப் படும் பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் கேள்வி பிணை முறி அல்லது தொகை | | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறி செல்லு படி காலம் (நாள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாத (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | நிதி வைப்பு (ரூபா) | | | |
| 01 | CPC/CMS/ ACC/06/ 2024/05/01 | மப/மஹ/புனித அந்தோணியார் மகளிர் கல்லூரியின் நான்கு மாடி கட்டிட நிர்மாணம் (கட்டம் 01) | மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் | 71,000,000.00 | C4 | 1,420,000.00 | 710,000.00 | 270 | 119 | 17,500.00 |
| 02 | CPC/CMS/ ACC/06/ 2024/05/02 | மப/மஹ/ புனித அந்தோணியார் மகளிர் கல்லூரியின் பாதுகாப்பு மதில் நிர்மாணம் | மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் | 13,000,000.00 | C5/C6/ C7 | 260,000.00 | 130,000.00 | 120 | 105 | 4,500.00 |
| 03 | CPC/CMS/ ACC/06/ 2024/05/03 | மப/ஹ/ நிஷ்ஷங்கமல்ல ஆரம்ப கல்லூரியின் 80'X25' இருமாடி கட்டிட நிர்மாணம் மிகுதி வேலைகள் (கட்டம்) | மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் | 18,750,000.00 | C5/C6/ C7 | 375,000.00 | 187,500.00 | 120 | 105 | 6,000.00 |

**அமைச்சு செயலாளர் மற்றும் பெறுகைக் குழுவின் தலைவர்,**
**முதல் மற்றும் கல்வியமைச்சு**
**மாகாண சபை கட்டிடத் தொகுதி,**
**பல்லேகெலே குண்டசாலை.**
**தொலைபேசி/ பெக்ஸ் இல. 081-4481322, 081-2424938**

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project
THE WORLD BANK

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சு
### விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டம்

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல் – விலைமனுவை மூடும் திகதியை பின்போடல்

### அம்பாறை மாவட்டத்தில் கோமாரியில் உலர்ந்த மிளகாய் பதப்படுத்தும் நிலைய நிர்மாணம்

**LK-MOA-PMU-365192-CW-RFB**

1. அம்பாறை மாவட்டத்தில் கோமாரியில் உலர்ந்த மிளகாய் பதப்படுத்தும் நிலைய நிர்மாண திட்டத்தின் விலைமனுவை மூடும் திகதியானது (ஒப்பந்த இல.:LK-MOA-PMU-365192-CW-RFB) 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்போடப்பட்டுள்ளது.
2. விலைமனுவானது அதனை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
3. விலைமனுவானது 2024 ஜுன் 09 ஆம் திகதி வரையும செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுப்பிணையானது 2024 ஜுலை 09 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2, ஆம் இலக்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் திட்ட செயற்றிட்ட கண்காணித்தல் அலகிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்க்ளின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. 2024 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2, ஆம் இலக்கத்திலுள்ள விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்ட செயற்றிட்ட கண்காணித்தல் அலகில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒரு நபர் விலைமனுதாரரின் பிரதிநிதியாக சமுகமளித்திருக்கும் நிலையில் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். 2024.01.21 ஆம் திகதியிடப்பட்ட விளம்பரத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து ஏனைய தகவல்களில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**திகதி: 2024 பெப்ரவரி 7.**